466

ஸுபாநு வரு } தை - மாசி மீ

{ ஸம்புடம் - 3
{ ஸஞ்சிகை - 2

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAR 1944
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை

{ February, 1944
{ Vol. 3, No. 2

ரூபா

JL
N44.3.2
210424

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	திருப்பாவை	38
2.	ஸ்ரீ மாலோலன் மஹிமை	43
3.	ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் பெருமை	47
4.	உண்மை வைணவன்	51
5.	ஸ்ரீ பகவான் கல்கியின் உருவம்	55
6.	கடோபநிஷத்தின் அர்த்த ஸங்க்ரஹம்	57
.7	கருணையங் கண்ணன்	65
8.	செய்திகள்	67
9.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	74

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



8 MAR 1944
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 3 | ஸ்வபாநு ஹு தை - மாசி மீ | ஸஞ்சிகை 2

“ அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ”

2/10/24
சென்னை-600 00..

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாப்புலியூர்]

(ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 12 : பக்கம் 424-ன் தொடர்ச்சி)

இவளை யிப்படி யெழுப்பி யழைத்துக்கொண்டு மற்றொரு ஸகியை எழுப்புகிறார்கள்.

8. கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமற் காத்துன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவா யெழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

கீழ் வானம் வேள் என்று - கிழக்குத் திக்கில் ஆகாசம் வெண்மை நிறத்தை யடைந்திருக்கிறது ; (அது காரணமாக) எருமை சிறுவீடு மேய் வான் பரந்தன காண் - எருமை மாடுகள் பனிப்புல் மேய்வதற்காக அவிழ்த்து விடப்பட்டு வயல்களில் பரவிப் போகின்றன பார்; மிக்கு உள்ள பிள்ளைகளும் போவான் போகின்றாரை போகாமல் காத்து உன்னை கூவு வான் வந்து நின்றோம் - மற்றெல்லாப் பெண்களும் நீராடப் போக விருப்ப முடையவர்களைப் போகாமல் நிறுத்தி உன்னை அழைப்பதற்காக இங்கு வந்து நிற்கிறோம் ; கோதுகலம் உடைய பாவாய் எழுந்திராய் - எங்களுடன் ஸ்நாநத்துக்குப் போக ஆவலுள்ள பெண்மணியே! எழுந்திரு ; [நாம் எல் லோரும் ஒன்று சேர்ந்து நீராடப் போகவேணும் என்று நீ மிக்க ஆவ லுள்ளவ ளாகையால், நேரஞ் சென்றாலும் செல்லட்டு மென்று உன்னை அழைக்க நாங்க ளெல்லோரும் வந்திருக்கிறோம் ; இனித் தவக்க மின்றி எழுந்திரு என்பது கருத்து.] மா வாய் பிளந்தானை-குதிரை ரூப மெடுத்த கேசி என்னும் அஸுரனுடைய வாயைப் பிளந்தவனை; மல்லரை மாட்டிய தேவாதிதேவனை-கம்ஸனால் வெல்லப்பட்ட சாணூரன் முஷ்டிகன் என்கிற மல்லர்களை யுத்தத்தில் மாய்த்த ஸர்வேஶ்வரனை ; [ஸர்வ நியந்தா வென் கிற தத்வம் அறியாமல் மூடத்தன்மையால் விளக்கில் வந்து விழும் பூச்சி கள்போல், இவர்கள் பகவானுக்குத் தீங்கு செய்ய வந்து மாண்டார்கள் என்பது தாத்பர்யம்.] பறை கோண்டு பாடி - வாத்யத்துடன் புகழ்ந்து பாடி; நாம் சேன்று சேவித்தால் - நாம் அவன் ஸந்நிதாநம் சென்று ப்ரணா மம் பண்ணினால்; ஆ ஆ என்று ஆராய்ந்தருள் - நம்மை அத்யாதரத்துடன்

வரவேற்றுக் குஶலப்ரஶ்ந பூர்வகமாய் நமது குறைகளை விசாரித்தறிந்து, பரம க்ருபையுடன் நம் அபீஷ்டங்களை அநுக்ரஹிப்பன்; ஆகையால் உடனே எழுந்திரு.

காலம் அதிக்ரமித்து விட்டதால் இனித் தாமதிப்பது உத்தேச ஹானியைச் செய்யுமென் றெண்ணி, ஆகவேண்டிய கார்யத்தைக் குறிப் பிட்டு அதில் த்வரையை உண்டாக்குகிறூர். மல்லரை மாட்டிய வ்ருத் தாந்தம் மார்கழி நீராட்டத்துக்குப் பிற்பட்டதா யிருந்தபோதிலும், ஆண்டாள், தாம் பிற்காலத்தில் அநுஸந்திக்கும்போது அதையும் சேர்த் துக் குறித்தது ஓர் விச்சித்தி விஶேஷத்தைத் தருகிறது.

இவளை இவ்வாறு எழுப்பி அழைத்துக்கொண்டு பிறகு, ஸமீபத்தி லுள்ள மஹா தநிகனுடைய க்ருஹத்துக்குச் சென்று, அவனது ஸம்பத் துக்கு அநுகுணமான போகஸம்ருத்தியின் நடுவில் கண்வளரும் ஸகியை ப்ரபோதநம் செய்கிறூர்கள்.

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவந் தாள்திறவாய்
மாமீ ரவளை யெழுப்பீரோ வுன்மகள் தான்
ஊமையோ வன்றிச் செவிடோ வனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

தூ மணி மாடத்து - நிஷ்களங்மாய் ப்ரகாசிக்கிற ரத்நங்களால் அமைந்த மாளிகையில்; சுற்றும் விளக்கு எரிய - நாற்புறமும் தீபங்கள் ஜ்வலிக்க; [தீபம் ஒன்றுயிருந்தபோதிலும் நாற்புறமும் ரத்நமயமான ப்ரதேசமா யிருப்பதால், எங்கும் தீபங்கள் ஜ்வலிக்கின்றனபோல் ப்ரதிபிம்பிக்கப்படுகிற தென்றும் கொள்ளலாம்; இத்தால் நேத்ரத்துக்கு ஆகர்ஷகத்வம் சொல்லப்பட்டது; அநந்தரம் க்ராண தர்ப்பணத்வம் பேசப்படுகிறது.] தூபம் கமழ - சந்தநம் அகரு முதலியவற்றின் ஸௌகந்தியான தூமத்தால் வாஸிதமாயிருக்க; [பிறகு ஸ்பர்ஶ ஸௌகம் நிர்த்தேஶிக்கப்படுகிறது.] துயில் அணை மேல் - அதிம்ருதுவான ஹம்ஸ தூலிகா மஞ்சத்தின்மேல்; [இந்த போகோபகரணங்களின் ப்ரயோஜ நம் கூறப்படுகிறது.] கண் வளரும் - மெய்ம்மறந்து நித்ராநுபவம் பண்ணு கிற; மாமான் மகளே - ஶ்ரீமானுடைய பெண்ணே! [இங்கு ஸந்தர்ப் பத்தை யொட்டி மாமான் என்கிற பதம் யௌகிக வ்ருத்தியால் ஸம் பத்துடையவன் அல்லது ப்ரபு என்னும் பொருளுடையதாகும்; மாமன் என்று அர்த்தம் கொள்வதில் ப்ரயோஜநம் தோன்றவில்லை.] மணி கதவம் தாள் திறவாய் - ரத்நமயமான கதவின் தாழ்ப்பாளைத் திற; [மாளிகை முழுவதும் ரத்நமயமா யிருப்பதால், உள்ளிருப்பன யாவும்

வெளியில் நிற்பவர்கள் கண்ணுக்குத் தெரிகின்றன வென்பது வெளியா கிறது. இவ்விதம் கேட்டும் உள்ளே படுத்திருப்பவள் எழுந்திராமல் தூங்குவதைப் பார்த்து, அக்காலம் இவர்கள் த்வநியைக் கேட்டுக் கத வைத் திறக்க வந்த தாயைப் பார்த்துச் சொல்லுகிறார்.] மாமீர் அவளை எழுப்பீரோ - மாமீர் என்பது தேவி, சீமாட்டி, என்கிறபடி. அது, கௌரவ புத்தியுடன் ஒரு ஸ்த்ரீயைக் குறித்து ப்ரயோகிக்கப்படும் ஸம் போதநமாகும் [நாம் தூரத்திலிருந்து கூப்பிடுவது ப்ரயோஜந மில்லாமற் போவதால், ஸமீபத்திலுள்ள நீங்கள் உமது பெண்ணை எவ்விதத்திலாவது எழுப்பவேணும்; பிறகு தாய் கூப்பிட்டும் உறக்கம் தெளியாதிருப்ப தைக் கண்டு பேசுகிறார்.] உன் மகள்தான் ஊமையோ அன்றி செவிடோ - 'ஊமையோ' வென்றதால் காது கேட்டும் பதில் சொல்ல வாயில்லாமையால் பேசாமலிருக்கிறாளோ வென்று கருத்து. ஆனால் வாயால் பேசாமற் போனாலும் வேறு சேஷ்டைகளால் தான் கேட் டறிந்து கொண்டதைத் தெரிவிக்கட்டுமே யென்று சங்கித்து, 'அன்றிச் செவிடோ' வென்கிறார். [அல்லது அவளுக்குக் காதே கேட்காதோ? இவ்விரண்டுமே ஸம்பாவித மில்லை. ஏனென்றால், முன் விழித்திருந்த போது இவளுக்கு இவ்விதமான குறைவுகள் ஒன்று மில்லாததால், இப் போது திடீரென்று இவை வந்திருக்க முடியாது; ஆகையால் இப்படித் தூங்குவதற்கு வேறு காரண மிருக்கவேண்டு மென்று நினைத்துச் சொல்லு கிறார்.] அனந்தலோ - மிக்க சோம்பலால் உணர்த்தி யில்லாமல் மாந்த் யத்தை யடைந்திருக்கிறாளோ; [இவ்வளவு தீவ்ரமாய்க் கூப்பிட்டும் எழுந்திராததால் இதற்குச் சோம்பல் போதுமான காரணமாகா தென்று சங்கித்து, மற்றொரு ப்ரபல காரணத்தைக் குறிப்பிடுகிறார்.] ஏமப் பெருந் துயில் மந்திரப்பட்டாளோ - ஏமம் என்றால் மயக்கம்; புத்தி மயக் கத்தால் உணர்வற்று நீடித்து உறங்கும்படி யாராவது மந்திரம் செய்து விட்டார்களோ? மா மாயன் மாதவன் வைகுந்தன் என்று என்று-இதற்குப் பரிஹாரமாக ஸர்வாநிஷ்டங்களையும் போக்கவல்ல மாமாயன் மாத வன் வைகுந்தன் முதலான பல பகவந் நாமங்களை; நவின்று - வாயாரச் சொல்லுங்கோள்; 'யஸ்ய ஸ்மரணமாத்ரேண ஜந்ம ஸம்ஸார பந்தநாத் விமுச்யதே' என்றபடி இத் திருநாமங்கள் உச்சரிக்கப்படுமளவில் எல்லா அசுபங்களும் நிவ்ருத்தமாய், உம் மகள் ஸ்வஸ்தமாய்க் கண் விழிப்பாள்; எங்களுடைய உத்தேசமும் நிறைவேறும் என்றபடி. ஏல் ஓர் எம் பாவாய் - முன் போலவே.

இவளை இவ்வாறு எழுப்பி யழைத்துக்கொண்ட பிறகு, மற்றொரு ஸகியை ப்ரபோதநம் பண்ணுகிறார்கள்.

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்
மாற்றமுந் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்

18 MAR 1941 MADRAS

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானே
ஆற்ற வனந்த லுடையா யருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.

நோற்று - நோன்பு நோற்று, [அதாவது: வ்ரதாநுஷ்டாநம் செய்து]; சுவர்க்கம் புகுகின்ற - ஶ்ரேஷ்டமான பதவியை யடைய வேண்டு மென்கிற நிச்சயத்தைக் கொண்ட; அம்மனாய்! - நாயகப் பெண் மணியே!; வாசல் திறவாதார் மாற்றமும் தாராரோ - தெருக் கதவைத் திறக்காமல் போனாலும் நாங்கள் கூப்பிடுவதற்குப் பதிலாவது சொல்ல லாகாதோ? [முதல் நாள் இக் குமாரிகைகள் கூடி மார்க்கஶீர்ஷ வ்ரதாநுஷ்டாநம் செய்யவேணுமென்று ஸங்கல்பித்தபோது, தான் அதற்குத் தலைவியாயிருந்து நடத்தி வைப்பதாக ஶபதம் செய்த தோழியைக் குறித்து இப்பாசுரம் உரைக்கப்படுவதாக ஊஹிக்கப் பொருந்தும். ‘நான் உங்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் நின்று இந்நோன்பை முடித்து வைத்து அபீஷ்ட ஸித்தியை ஸாதித்துத் தருவேன்’ என்று நேற்றுப் பெருமை யடித்ததெல்லாம் போய், ‘இன்று நாங்களெல்லோரும் கும்பல் கூடிவந்து கூப்பிடச் செய்தேயும் தெருக் கதவையும் திறவாமல் பதிலும் பேசாமல் உறங்குவதுதான் தலைவியின் லக்ஷணமோ?’ வென்று பாவம் தோற்றும்படி ஸாகூதமாய்ப் பரிஹஸிக்கிறார்.] ஆற்ற அனந்தல் உடையாய் - அளவற்ற சோம்பலுடையவளே! நாற்றம் துழாய் முடி நாராயணன் - திவ்ய கந்தமுடைய துளஸீ தாமத்தை மகுடத்தில் தரித்த ஸ்ரீமந் நாராயணனாகிய; நம்மால் போற்ற பறை தரும் புண்ணியனால் - நம்மைப் போன்ற சிறுமியர் கூட ஸ்தோத்ரம் செய்தால் அபீஷ்டதாநம் பண்ணும்படியான பரம தார்மிகனால்.

[‘அந்ய வஶேஷாதிவாம் அஂஹாதிந்ய வாதாவஜேநாஅ|
அந்ய அஶஷஸஂவஷ்ஹாஹ வெஜூதி ஜநாதிநஃ ||’

என்றபடி, பக்தியுள்ளவர்கள் எவ்வளவு சிறியோரா யிருந்த போதிலும், அவர்கள் செய்வது எவ்வளவு சிறியதா யிருந்த போதும், ‘கயஂவிதா வகாரேண க்ருதே நெகெந தாஷ்ஷ்தி’ என்றபடி அதைப் பெரியதாய் நினைத்து, அவர்கள் வேண்டியதற்கு மேல் நன்மைகளை வர்ஷிக்கும் புண்ணிய சீலன் என்பது கருத்து. இவ்விதமான மஹௌதார்யம் ‘ரேஶஶௌதாயஶாஶெணஃ வாஂஸாஂ ஜ்ஹஷிவிதாவஹாரிணஃ’ என்று போற்றப்பட்ட ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனிடம் குடிகொண்டிருந்ததுபற்றி, அம்மஹா புருஷனுடைய அவதாரத்தைக் குறித்து மேலே அதிசதுரமாய்ப் ப்ரஸ்தாவம் செய்கிறார். ‘நாற்றத் துழாய் முடி’ யென்றதால் அதிஸ்ப்ருஹணீயமான திவ்ய மங்கள விக்ரஹ விஶிஷ்டத்வமும், ‘நாராயணன்’ என்றதால் ஸர்வாதிஶாயி பரத்வமும், ‘நம்மால் போற்றப் பறை தரும்’ என்றதால் அத்யந்த ஸௌலப்யமும் வ்யஞ்ஜிதம்; இம்மூன்றும் ஸமாஶ்ரணீயத்வத்துக்கு உறுப்பாகும்.] பண்டு ஒரு நாள் - முன்னொரு

காலத்தில் ; கூற்றத்தின் வாய் வீழ்ந்த-யமன் வாயில் விழுந்த; கும்பகரணனும் - கும்பகரணன் என்னும் அரக்கனும், தோற்றும் - தான் தோல்வியடைந்தும்; உனக்கே பெருந் துயில்தான் தந்தானோ-தனக்கு அஸாதாரணமாயுள்ள மஹாநித்ரையை உனக்குக்கொடுத்துவிட்டானோ? [லோகத்தில் மநுஷ்யர்கள் தங்கள் அந்த்ய காலத்தில் தங்களுடைய த்ரவ்யத்தை ஆப்த பந்துக்களுக்குக் கொடுப்பது போல், உனக்குத் தன் தூக்கத்தைக் கும்பகர்ணன் கொடுத்தானோ? இத்தால் இவனுடைய தாமஸ ஸ்வபாவம் வ்யங்க்யமாய் ஸூசிக்கப்பட்டது ; அல்லது மாரீசன் தான் வதம் பண்ணப்பட்டபோது ஸீதையின் மநஸ்ஸைக் கலக்கி அநர்த்தம் உண்டு பண்ணியது போல், கும்பகர்ணன் தனக்குப் பகவானால் மரணம் நேர்ந்த தறுவாயில் அவனிடம் அதிமாத்ர பக்தியை வஹிக்கும் உனக்குத் தன் தூக்கத்தைத் தந்து முன்போல் ஜாகரூகையாய் அவனுடைய கைங்கர்யத்தில் அந்வயிக்கவொட்டாமல் செய்துவிட்டானோ வென்றும் அபிப்ராயம். இதன் பலம் 'ஆற்ற வனந்த லுடையாய்!' என்கிற ஸம்போதநத்தினால் கூறப்பட்டது.] அருங்கலமே - அருமையான பூஷணமே! [எங்களெல்லாருக்கும் அலங்காரம் போல் விளங்குபவளே! இத்தால் இவளுடைய நிஜ ஸ்வபாவம் கூறப்பட்டது; உயர்ந்த ஸாத்விக ஸ்வபாவமுடைய நீ இம்மாதிரி தாமஸ பாவத்தை மேற்கொண்டிருப்பது யுக்தமல்ல வென்று தாத்பர்யம்; ஆகையால் இந்நூதந விகாரத்தை விலக்கி] தேற்றமாய் வந்து திற - கண்விழித்துத் தெளிந்த புத்தியுடன் வந்து கதவைத் திற. ஏல் ஓர் எம் பாவாய் - முன்போல். [தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸுபாநு௵ மாசிமீ

1உ ஞாயிற்றுக்கிழமை	—	கும்ப க்ருஷ்ண சதுர்த்தி திதி.
5உ வியாழக்கிழமை	—	அஷ்டகா ஶ்ராத்தம்.
6உ வெள்ளிக்கிழமை	—	அந்வஷ்டகா ஶ்ராத்தம்.
8உ ஞாயிற்றுக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
9உ திங்கட்கிழமை	—	த்வாதசி—த்ரயோதசி: திதித்வயம்.
11உ புதன்கிழமை	—	ஸர்வ அமாவாஸ்யை.
20உ வெள்ளிக்கிழமை	—	ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்.
22உ ஞாயிற்றுக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி : ஸ்ரீ குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்.
25உ புதன்கிழமை	—	மாசி மகம்.
30உ திங்கட்கிழமை	—	சூந்ய திதி: மீந ரவி 33-24.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீ மாலோலன் மஹிமை

[ஶ்ரீ. உபய. வாங்கல் வங்கீபுரம் ரங்காசார்ய ஸ்வாமி,
Clerk, P. W. D. கோயம்புத்தூர்]

"आशंसे नित्यमानन्दं मानृसिंहकथामृतम् ।
सद्भिः स्वश्रवणैर्नित्यं पेयं पापं प्रणोदितुम् ॥"

ஶ்ரீமச்சடாரி யதிஶேகர ரங்கநாத
யோகீந்த்ர வீரரகுவராட் ஶடகோபமுக்யை: ।
யோகீஶ்வரைர் நரஹரீதத்தவரப்ரபோதை:
ஶ்ரீவாஸதேஶிகவரம் கலயேத்ரிவம்ஶ்யம் ॥

"பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" என்றும், "நாட்டிற் பிறந்து படாதன பட்டு மனிசர்க் காய்" என்றும், லோக ஸம்ரக்ஷணார்த்தமாக மநுஷ்ய ரூப குண சேஷ்டிதங்களோடு அவதரித்துத் தனது அவதார ப்ரயோஜந லாபத்தாலே ஸம்பூர்ண மநோரதனுன ஸர்வஜகந் நியந்தாவான ஸர்வேஸ்வரன் திரு நரசிங்கப் பெருமானது பெருமைகளுள் சிலவற்றை இங்கு நிரூபிக்கிறேன்.

"ந்ருஸிம்ஹராமக்ருஷ்ணேஷு ஷாட்குண்யம் பரிபூரிதம்" என்று அவதார த்ரயத்திலே ப்ரக்ருஷ்ட தமமான வாத்ஸல்ய க்ருபா ஸௌலப்யாதிஶயத்தை இவ்வவதாரத்தில் ஒருங்கே காணலாம். க்ருபா க்ருத திவ்ய ஸம்ஸ்தாநஶாலியான ந்ருஸிம்ஹ வேஷத்தைப் பரிக்ரஹிப்பதும், 'எங்கு முளன் கண்ணன்' என்று தாநவ சிசு சொன்ன க்ஷணத்தில், உலகத்தில் தெய்வம் இல்லை யென்று நாஸ்திகம் பேசி நாத் தழும்பேறும் ஸமயத்தில் தோன்றுவதும், அந்தத் தோற்றம்தான் ஸம்பாவித ஸ்தலத்தில் ஆகாமே தூணிலிருந்து ஆனதும் விமர்ஶிக்குங்கால், மற்றைய அவதாரங்களைக் காட்டில் இது லோகோபகாரகமா யிருக்கும்.

"விக்ருதிமஹத்கநிஹத்ஜநாதமா:" என்கிறபடி ப்ரஹ்லாத ஸம்ரக்ஷணார்த்தமாக விக்ருதமான ரூபத்தைக் கொண்டிருக்கச் செய்தேயும், 'ஆடியாடி'யிலே "எங்கும் நாடி நாடி நரசிங்கா வென்று வாடி வாடும் இவ்வாணுதலே" என்று ஆழ்வாரை நெஞ்சுருகப் பண்ணின ரூபமிறே இது. இத்தைக் கணிசித்தே நம் ஆசார்ய வரிஷ்டரான தேஶிகேந்த்ரன் 'குஹநாகேஸரி' என்று காமாஸிகாஷ்டகத்தில் வர்ணித்தார் போலும்.

'ந வக்துமபி ஶக்யதே நரகமஹாவாஸாதிகம்' என்று தோஷ கந்த மில்லாமல், காமிநீ பராதீநனுன ஒரு ஸம்ஸாரியைப்

பிதாவாகக் கொள்ளாமல், வேதத்தில் அறுதியிட்ட ப்ரகாரம் அவனைத் திருவடி தொழாமல், அவனைச் சார்ந்த பெண்டிர்க்கும் தொண்டராகாமல், அர்த்த காம வார்த்தையைப் பித்ருவாக்ய பரிபாலந மென்று சிரமேற் கொண்டு ராஜ்யபோகங்களையும் இழக்காமல், வநவாஸாதி துஸ்ஸஹ மான கஷ்ட நஷ்டங்களுக்கு இலக்காகாமல் இருப்பதொரு அவதார விசேஷம் இது.

கிஂச, மானிடனாய்ப் பிறந்து, ஶாஸ்த்ர ஶிக்ஷிதனாய் ஜாதகர்ம ஸம்ஸ்காராதிகளைச் செய்து, கார்யாந்தர யோக்யதாகரணம் செய்து உழன்ற மற்ற அவதாரங்களைக் காட்டில் மேம்பட்டிருக்கும் ஸர்வ ஜனங் களைப்போல் (மற்றைய அவதாரங்கள்) மநுஷ்யப் பிறவியாதலால், கானக மேவிக் கடுந்துயருக்கு ஆளாகாவண்ணம், ஆசார்ய முகேந மற் றொரு மந்த்ரோபதேசம் பெற்ற அவதாரத்தைக் காட்டிலும் இது சீர்மையுள்ளது. ஆகையாலேயிதே சக்ரவர்த்தித் திருமகனும் நம்பெரு மானை 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ பஞ்சாம்ருதம்' என்ற ஐந்து ஶ்லோகத்தால் மங்களாஶாஸநம் பண்ணும்படி இருந்தது. (ஹரிவம்ஶம் : சேஷ தர்மம்- 49-ம் அத்யாயம்.)

மேலும் இவ்வவதாரம், அஶநாயா பிபாஸாதிகளால் வருந்திச் சௌர்யம் செய்து வயிற்றை நிரப்பும் மற்றைய அவதாரத்தைக் காட் டிலும் அத்யந்த வாசியுள்ளது. நிற்க: 'தானே ஸர்வஜ்ஞனாயிருந்து, அண் டாதிபதியான சதுர்முகன் முதலானவர்களை த்ருணமாக அநாதரித்து முகங் கொடுத்துப் பேசாதவன்' என்று உபநிஷத்தில் உத்கோஷிக்கச் செய்தேயும், "தஸிஸி ஹூணிவாதெந வஸிஹூஜெூந ஷெவயா' என்ற ரீதியில் கைகட்டி வாய்புதைத்து வேதோபதேஷ்டாவாக ஓர் அரண் யௌகஸனை ஆசார்யனிடம் சென்று, அவர் பெண்டிர்க்கும் தொண்டு பூண்டு அபிநயித்த விபவ மில்லையிறே.

நித்ய ஸ்ரீயோடே யிருக்கச் செய்தேயும், அவதார வஶாத் காமிநீகளான ஸ்த்ரீகள் கண்ணுசைப்பட்டு, வீர்ய சுல்கமாகப் பெற்ற தொரு பெண்ணைப் பிரிந்து, பூர்வ கர்ம வஶ்யனான சேதநன் படும் பாடு பட்டுத் திகைத்துத் திண்டாடி நின்ற அவதாரத்தைக் காட்டிலும் விசேஷித்தது.

நம் செங்கட் சீயம் ஸாமாந்ய புருஷனாக இல்லாமல், ஸங்கீர்ண மூர்த்தியாகப் பிறந்து, 'ஷூஂஹெ வ ஸஂஹவஷூ விஶாநயதி வஶெஶ தாழு' என்று ஆழ்வான் அருளிச்செய்தபடி, 'வஶகெூ ஸதி ஸளஜ ஹூழு' என்று அபிநந்தநீயமாக தேவாதி சதுர்வித ஜாதியில் பிறக் காமலும், அவர்களுடைய உதவியைக் கோலாமலும், அஸ்த்ர ஶஸ்த்ர மில்லாமலும், ப்ரம்ஹ ருத்ராதிகள் கொடுத்த வரத்துக்கு விரோதமில் லாமலும், மற்றொரு ஸஹாய நிரபேக்ஷமாக 'ஸக்ஷுஸு ஊநவஶிஶொ: வஸிவாஜநாய' அவதரித்துத் தேவ பாரதந்த்ர்யமும் ஆஶ்ரித பார

தந்த்ர்யமும் தோற்ற ஶத்ரு நிரஸநம் பண்ணினதொரு விஶேஷாவதாரம். இத்தால், வாநராதி திர்யக்குகளின் அஸேவ்ய ஸேவை பண்ணி ஶத்ருவை ஜயித்த அவதாரத்தை வ்யாவ்ருத்தித்தபடி.

மேலும், பக்தாபீஷ்ட பலப்ரதனன மாந்ருஸிம்ஹன், பக்தனுடைய வாத்ஸல்யாதிஶயத்தால் 'உகூாவு) தவீூஷூ-ூ)ஶயா-தூாாஂ ஃாஜஜூ' என்ற கணக்கிலே குழந்தையை அநுக்ரஹித்து, பரமைகாந்தியான அவனிடத்தில் வரனே யாசிக்கச்செய்து, ஜ்ஞாதி பந்துக்களுக்கு மாளாவின்பம் கொடுத்து, பஶ்சாத் அஸுர ரக்ஷணத்தையும் வாக்களித்து, மேலும் ப்ரீதமநஸ்கனுய் அவன் வாயால் பாடின பாசுரங்களுக்கும் (ஸ்ரீ பாக. 6 ஸ். 9 அத்.) பல ஶ்ருதியும் சொல்லிப் பக்தனேப் பரிபாலித்ததால் வேறுபட்டிருப்பது இவ்வவதார விஶேஷம்.

ஆகையாலே யிறே, ப்ரபந்ந ஜந கூடஸ்தரான மாறன் சடகோபன் 'எங்கு முளன் கண்ணன்' என்று திருவாய்மொழியிலும், மங்கை மன்னன் 'பள்ளியி லோதிவந்த தன் சிறுவன்' என்று திருமொழியிலும், ஸ்ரீ ஆண்டாள் 'வரிசிலே வாள்முகத் தென்னேமார் தாம் வந்திட்டு' என்றதொரு பாமாலேயிலும், ஸ்ரீ விஷ்ணுசித்தன் 'அந்தியம் போதில் அரியுருவாகி' என்று திருப்பல்லாண்டிலும், மழிசை வந்த சோதி 'சிங்கமாய தேவதேவ' என்று சந்த விருத்தத்திலும், தாம் கண்டு அநுபவித்தவாறே பெருமானே வழிபட்டுப் பேசினர். இவ்வாறே, இதர அஸ்மதாசார்யர்களும், (பட்டர் கூரத்தாழ்வான் ஸ்ரீ தூப்புற் பிள்ளே உட்பட) உத்க்ருஷ்ட குணங்கள் நிறைந்த இந்த ரூபத்தை வர்ணித்து ஸ்தோத்ரங்கள் அருளிச்செய்திருப்பது ஸுப்ரஸித்தம்.

மேலும், ஸர்வஜ்ஞனன ருத்ரனும் மந்த்ர ராஜபத ஸ்தோத்ரத்தில் 'விஷ்ணு ஶப்தவாச்யன் ஸ்ரீ ந்ருஸிம்ஹனே' என்று நிஷ்கர்ஷித்து அவன் திருவடிகளில் ஶரணுகதி செய்ததாக ஏற்படுகின்றது.

இங்ஙனம், விபவாவதாரத்தில் தோன்றிய எம்பெருமான் நெஞ்சாறல் பட்டு, மற்றைச் சேதநர்கள் உஜ்ஜீவிக்கத் திருவுள்ளம்பற்றிக் கலிகாலுஷ்ய வஶாத ஏற்படும் ஸௌலப்ய த்ரயத்தோடு இருக்கிற அர்ச்சையை ஸமாஶ்ரயித்துச் சிங்கவேழ்குன்றத்தில் நவமூர்த்தியாய் வீற்றிருக்கிறுன். ஆனல், இந்த விஷயபரர்களான ஸம்ஸாரிகளோ, 'கூஂ ஒ ஃஹஂ ஒ' என்ற கணக்கிலே அவனிடம் மீண்டும் பராங்முகனுயிருக்கக் கண்டு 'சுவு)-ூ: ஸவ-ூஸஹிஷே-ஃ:' என்றவாறே மாலோலனுய் வேஷம் பூண்டு, அதிமாத்ர க்ருபையாலே 'ஶ்ராஒ ஶ்ராஒ வ ஶதூா' ஸர்வாபீஷ்டங்களேத் தந்தருள்கின்றுன்.

இவ்வாறு, அநவதிகாதிஶயித கல்யாணகுண நிலயனன மாலோலனேயும், 'சுயூ)ாவஸீநதாாஂஶவக்ஷ' 'ஸாக்ஷாநாராயணோ தெவஃ' 'யஸு) தெவெ வரா ஹக்திஃ' 'ஶாாெரவ வாஂ ஶூஹ' 'பீதக

வாடைப் பிரானுர்' இத்யாதி ப்ரமாண ஶதங்களால் அறுதியிட்டு, பரமஹம்ஸ பரிவ்ராஜகராய் எழுந்தருளி யிருப்பவரும், 'உவவீதிந [illegible]' என்று ஸர்வ லக்ஷண ஸம்பந்நராயும், '[illegible] தீக்ஷ்ணஃ' என்கிறபடி அவனை ஆரா திக்கிற தஶபர மூர்த்தியையும் ஸேவித்துப் பஹுகாலமாக எவ்வித ஶ்ரேயஸ்ஸுக்குப் பாத்ரமாகாமல் பரிப்ரமிக்கும் அடியோங்களுக்கு, ஆத்மோஜ்ஜீவநம் ஏற்படும் பாக்யம் கிட்டிவிட்டதென்று ஆநந்த பரித ராகிறோம்.

இப்படி தத்வங்களும், பரம புருஷார்த்த லாப ஹேதுவான ப்ரபத்தியாகிற ஹிதமும், ந்ருகண்டீரவ பாஸ்கரோதயத்தால் ஏற்படும் மோக்ஷாநந்த பரிவாஹ ரூபமான கைங்கர்ய புருஷார்த்தமும், நம் மஹா அழகியசிங்கருடைய திருவடிகளே ஸர்வதேச ஸர்வகால ஸர்வா வஸ்தையிலும் உபாயமென்று கோரும் நம் மடீய ஶிஷ்யர்களுக்கு வெகு ஸுலபமாகக் கிடைப்பது நம் அத்ருஷ்டமென்றே சொல்லலாம்.

॥ श्रीलक्ष्मीनृसिंहः प्रीयतां ॥

எம்பெருமானின் அம்சாவேசாவதாரங்கள்

ஸ்ரீமந் நாராயணனது அவதாரங்கள் அளவற்றன. அவை முக்யம் அமுக்ய மென இருவகைப்படும். முக்யமாவது ஸாக்ஷாதவதாரம்; அமுக்யமானது ஆவே ஶாவதாரம். ஆவேஶம்தான், ஸ்வரூபாவேஶ மென்றும் ஶக்த்யாவேஶ மென் றும் இருவகையதாம். ஸ்வரூபாவேஶமாவது: சேதநருடைய சரீரங்களில் எம் பெருமான் தன்னுடைய ரூபத்துடன் ஆவேஶித்து நிற்றல், பரஶுராமன் பல ராமன் போல்வார் இத்திறத்தவ ராவர், ஶக்த்யாவேஶமாவது: சேதநர் பக்கல் கார்ய காலத்திலே எம்பெருமான் ஶக்தி மாத்ரத்தால் தோன்றி விளங்குதல். அர்ஜுநன், கார்த்தவீர்யன், வ்யாஸர் போல்வார் இத்திறத்தவர். இவற்றில் ஶக்த்யாவேஶத்தினும் ஸ்வரூபாவேஶம் ப்ரபலம். தஶாவதாரங்களுள் பரசு ராமாவதாரமும் பலராமாவதாரமும் ஸ்வரூபாவேஶாவதாரங்கள். மற்றவை ஸாக்ஷாதவதாரங்கள். வில்லுங் கையுமாய் உலகத்தை நன்ருய் ஆளுகைக்காகக் கார்த்தவீர்யார்ஜுநனிடம் திருமாலின் ஶக்தி சிறிது ஆவேஶித்திருந்தது. துஷ்ட க்ஷத்ரிய நிரஸநார்த்தமாகப் பரசுராமனிடம் திருமால் தானே ஶக்தி விஶேஷத்தால் ஆவேஶித்திருந்தான். தஶரத ராமாவதாரம் ராவண வதத்தின் பொருட்டுத் திரு மால் தானே நேராய் அவதரித்தது. இவற்றில் ஒன்றைக் காட்டிலும் மற்றென்று உயர்வானது. இதனை, கார்த்தவீர்யனைப் பரசுராமன் கொல்ல, அப்பரசுராமனைத் தசரதராமன் வென்றதனுல் அறியலாம். "ஸ்வரூபாவேஶாவதாரமாய்த் தஶாவதார மத்யே ஸஹபடிதனுய்ப் போருகிற அப்பரசுராமன் தான் நிரஸ்தனுனபடி எங்ஙனே யென்னில்: ஸ்வாரூபாவேஶத்திலும் ஸாக்ஷாஉவதாரம் ப்ரபலமாகையாலே, அத்யுத் கடத்வம் உண்டானபோது இதனுலே அது நிரஸ்தமாகக் குறையில்லை, ஶக்த்யா வேஶத்தில் ஸ்வரூபாவேசம் ப்ரபலமானவோபாதி ஸ்வரூபாவேஶத்தில் ஸாக்ஷா தவதாரம் ப்ரபலமாகத் தட்டில்லையிறே. ஶக்த்யாவேஶத்தில் ஸ்வரூபாவேஶம் ப்ரபலமாகையாலேயிறே ஸஹஸ்ரவாஹ்வர்ஜுநன் பரசுராமனுலே நிரஸ்த னுய்த்து" என்ற வ்யாக்யாந வாக்யங்கள் காணத் தக்கன.

கோ. ஸு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் பெருமை

[ஸ்ரீ. உப. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், அம்பாள்புரம்,
புதுக்கோட்டை]

[ஸம்புடம் 1, ஸஞ்சிகை 12, பக்கம் 420-ன் தொடர்ச்சி]

" **श्रीमन्नपर्याप्तसुधासमुद्र श्रीशार्ङ्गपाणे जयचक्रहस्त ।
श्रीभक्तिसारादिमुनीन्द्रचित्तपीयूषहेमाब्जरमापतेऽव ॥**"

இந்த வ்யாஸத்தில் நம் ஸித்தாந்தத்துக்குள்ள மேன்மையை எழுதுங்கால், இதைப்போலுள்ள மற்றொரு ஸித்தாந்தத்தைவிட இது எவ்விதம் மேலானது என்று எழுதவேண்டியதா யிருப்பதால், " **स्वपक्ष रक्षणाय परपक्षाः प्रतिक्षिप्यन्ते** " என்று ஸ்ரீ பாஷ்யகாரரே ரசநாநுபத்யதிகரணத்தில் அருளியபடி, நமக்கு அவஸ்யமான மட்டில் இதரர்கள் ப்ரக்ரியை எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறதே யொழிய, மற்ற எந்த ஸித்தாந்தத்தையும் தூஷிக்கவேணு மென்கிற நோக்கத்துடன் இது எழுதப்படவில்லை. இதில் ஏதாவது தவறு ஏற்பட்டால் '**गच्छतः स्खलनं न दोषाय**' என்றபடி பண்டிதர்கள் க்ஷமிக்கவேணும். அன்றியும்,

" **गुणदोषौ बुधो गृह्णन्निन्दुक्ष्वेलाविवेश्वरः ।
शिरसा श्लाघते पूर्वं परं कण्ठे नियच्छति ॥**"

என்று அடியேனுடைய பரமாசார்யர் வேறொரு க்ரந்தம் எழுதிகொண்டிருக்குங்கால் சொன்ன ஶ்லோகத்தையும் இங்கு ஞாபகப்படுத்திக் கொண்டு, அதன்படியே ஏதாவது தோஷங்க ளிருந்தால் க்ஷமிக்குமாறு பண்டித ப்ரவரர்களை ப்ரார்த்திக்கிறேன்.

முன் ஸஞ்சிகையில் [அதாவது : ஸம்புடம் 1, ஸஞ்சிகை 12-ல்] எழுதியதின் சுருக்க மென்னவென்றால்: "**अथातो ब्रह्मजिज्ञासा**" என்கிற ஸூத்ரத்துக்கு அத்வைத மதத்தில் சுத்த ப்ரம்ஹம் ஜ்ஞேய மில்லாததால் அவித்யா ஶபலித ஜகத் காரண ப்ரம்ஹம்தான் ஜ்ஞேய மென்பது ஸூத்ரக்காரரின் அபிப்ராய மென்று ஸ்ரீ சங்கராசார்யர் உபபாதித்தா ரென்றும், நம் ஸித்தாந்தத்தில் ப்ரம்ஹம் ஜ்ஞேய மென்றும், ஸ்ருஷ்டிக்கு முந்தி ஸூக்ஷ்மாவஸ்தையுடனும் ஸ்ருஷ்டிக்குப் பிந்தி ஸ்தூலாவஸ்தையையு முடைய தென்றும், இப்படி உபய அவஸ்தா விசேஷத்தோடுகூடிய சிதசித் விசிஷ்ட ப்ரம்ஹம் ஜிஜ்ஞாஸ்ய மென்றும் ஸூத்ரக்காரரின் அபிப்ராய மென்றும் தெரிய வருகிறது.

மேலும் "**अथातो ब्रह्मजिज्ञासा**" என்கிற ஸூத்ரத்தில் '**ब्रह्म**' சப்தத்தை ஸூத்ரகாரர் ப்ரயோகித்ததிலிருந்து, '**बृहत्वात् ब्रह्मणत्वाच्च ब्रह्मैव**

परिपठ्यते' என்கிற ப்ரமாணத்தாலும், 'ब्रह्म बृहि वृद्धौ' என்கிற தாதுவின் அர்த்தத்தாலும் ப்ராப்தமான இந்த 'ब्रह्म' பதத்தை ப்ரயோகித்ததிலிருந்தே மற்ற ஸூத்ரங்களை அபேக்ஷிக்காமலே இந்த ஒரு ஸூத்ரத்தாலேயே ஸூத்ரக்காரருக்கு ஸகுண ப்ரம்ஹத்தில்தான் நோக்கு என்றும், இந்த ஸூத்ரம் நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்துக்குத்தான் ஒத்துவரு மென்றும் அபிஜ்ஞர்கள் சொல்லிக் கேள்விப்பட்டது அடிக்கடி ஞாபகம் வருகிறது.

அப்படிப்பட்ட ப்ரம்ஹம் எது என்கிற ஆகாங்க்ஷைக்கு 'जन्माद्यस्य यतः' என்கிற ஸூத்ரம் பதிலாக ஸூத்ரகாரரால் சொல்லப்பட்டது. जन्म-आदि-अस्य यतः। जन्मादि=இந்த (ப்ரம்ஹா முதல் சிறு பூச்சி வரையிலுள்ள ஸமஸ்த சிதசித் வஸ்துக்களடங்கிய) ஜகத்துக்கு, जन्मादि= ஸ்ருஷ்டி, ஸ்திதி, பங்கம் (லயம்) முதலியவை, यतः=எந்தப் பரம புருஷனிடமிருந்து உண்டாயிற்றோ, (அதுதான் ப்ரமஹம்.) तद्गुणसंविज्ञानबहुव्रीहिः।

இங்கு முதன்முதல், விசேஷண மென்றாலென்ன, உபலக்ஷண மென்றாலென்ன என்பதை அறியவேண்டியது அவஶ்யம். இதை நம் நிகமாந்த மஹாதேசிகன் அதிகரண ஸாராவளியில் பின்வரும் ஶ்லோகத்தால் வெகு அழகாக உபபாதித்திருக்கிறார்.

"यावल्लक्ष्यावबोधं यदवगतिरतो लक्षणात्तद्विशेष्यं
यस्यावबोधेऽपि पश्चाद्यदवगतिरिदं स्यात्तु तेनोपलक्ष्यम्।
तस्माद्द्वेधाऽपि भाष्येऽनुमतिरनुचितेत्याशयाऽज्ञस्य चोद्यं
मोक्षार्थोपास्यभेदे ह्युभयमपि समन्वेति विद्याविकल्पात्॥"

[உபலக்ஷண மென்றால்: சந்த்ரனை அறியாத ஒரு குழந்தைக்கு ஒரு மரக்கிளையைக் காட்டி, அதற்கு மேலிருக்கும் சந்த்ரனைக் காட்டுவது வழக்கம். அப்படிக் காட்டுவதில் சந்த்ரனுக்காவது மரக்கிளைக்காவது யாதொரு ஸம்பந்தமும் இல்லை. இருந்தாலும் மரக்கிளையைப் பார்த்த மாத்ரத்தில் சந்த்ரனும் அறியப்படுவதால், சந்த்ரனைக் காட்டிக்கொடுக்க மரக்கிளை ஸாதநமாக இருப்பதால் இது உபலக்ஷணமென்று சொல்லப்படும். விசேஷண மென்றால்:—சந்த்ரனிலேயே இருக்கும் மான் மாதிரியான சாயை என்ன, அது வட்டமாயும் தேஜஸ்ஸோடும் கூடியிருப்பதென்ன, இந்த தர்மங்களெல்லாம் விசேஷணமாகும்.]

இங்கு அத்வைத ஸித்தாந்தத்தில், ப்ரம்ஹ விசாரம் செய்யும் காலத்தில், ப்ரம்ஹம் எது என்கிற ஆகாங்க்ஷைக்கு ஸூத்ரகாரர் "जन्माद्यस्य यतः" என்று சொன்னார். அதனால் ஜகத்துக்கு உத்பத்தி ஸ்திதி பங்கம் எல்லாம் எங்கிருந்து உண்டாகிறதோ அதுதான் ப்ரம்ஹம் என்றார். அதனால் தடஸ்த லக்ஷணத்தில் தான் ஸூத்ரகாரர் அபிப்ராயம். எப்படி மரக்கிளையைக் காட்டி அதன்மூலம் சந்த்ரன்

காட்டப்படுகிறதோ, அப்படியே ஜகத்தைக் காட்டி அதன்மூலம் ப்ரம்ஹம் காட்டப்படுகிறது. வாஸ்தவத்தில் எப்படிக் கிளை நுனியில் சந்த்ரனில்லையோ, அப்படியே ஜகத்துக்கும் ப்ரம்ஹத்துக்கும் யாதொரு ஸம்பந்தமு மில்லை என்றூர்கள். இப்படி இவர்கள் தடஸ்த லக்ஷணத்தை மாத்ரம் ஒப்புகொண்டு, "**सत्यं ज्ञानमनन्तं ब्रह्म**" என்கிற ஶ்ருதிக்கும் வ்யாவ்ருத்தியாக அர்த்தம் சொல்லி விசேஷண பக்ஷத்தை நிராகரித்து விடுகிறூர்கள்.

நம் ஸ்ரீ பாஷ்யகாரர் ஜகத்தைக் காட்டி ப்ரம்ஹத்தைக் காட்டும் உபலக்ஷணம் என்கிற பக்ஷத்தையும், ஜகத்துக்கு உத்பத்தி ஸ்திதி பங்கம் எந்தப் பரமாத்மாவிடமிருந்து உண்டாகிறதோ அது ப்ரம்ஹம் என்கிற விசேஷண பக்ஷத்தையும் திருவுள்ளம் பற்றினூர். அத்வைதிகள் ஒப்புக்கொள்ளும் தடஸ்த லக்ஷணத்தை ஒப்புகொண்டதோடு விசேஷண பக்ஷத்தையும் ஒப்புக்கொண்டதால், ப்ரம்ஹம் ஸகுணம் என்றூல்தான் இரண்டுவித கக்ஷிக்கும் யுக்திக்கும் ஒத்து வருகிறதென்றும், நிர்க்குணமாக இருக்கும்பக்ஷத்தில் '**यतो वा इमानि भूतानि जायन्ते**' '**सत्यं ज्ञानमनन्तं ब्रह्म**' இத்யாதி ஶ்ருதிகளுக்கு விசேஷணமாகச் சொல்லும் அர்த்தமும் யுக்தியும் ஒத்துவரமாட்டா வென்றும் வ்யக்தமாகத் தெரிகிறது. ஆனதால் "**जन्माद्यस्य यतः**" என்கிற ஸூத்ரம் ஏகதேசம் நம் ஸித்தாந்தத்துக்குத்தான் ஒத்துவரு மென்பது அபிஜ்ஞர்களின் திருவுள்ளம். இப்படி ஸர்வ ஜகத்துக்கும் காரணபூதமான ஸத்யத்வ ஜ்ஞாநத்வாதி விஶிஷ்ட ப்ரம்ஹம் பரமபுருஷார்த்த பூதம். "**जिज्ञास्यं**" என்று சொல்லும் ஸித்தாந்தமே மிகவும்பெருமை வாய்ந்ததென்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?

பிறகு "**शास्त्रयोनित्वात्**" என்கிற ஸூத்ரத்தைக் கவனிப்போம். 'ப்ரம்ஹம் ஒன்றுதான் ஸத்யம். அதுவும் நிர்க்குணமானது ; அதைத் தவிர மற்றதெல்லாம் பொய்' என்று வாதம் செய்யும் பக்ஷத்தாருக்கு இந்த ஸூத்ரம் எப்படிப் பொருந்தும் ? எப்படி ஸத்யமான ப்ரம்ஹத்தை அறிவதற்குப் பொய்யான ஶாஸ்த்ரம் காரணமாக முடியும் ? பொய்யான ஶாஸ்த்ரங்களால் அறியப்படும் ப்ரம்ஹமும் அபுருஷார்யமாகவேதான் இருக்கும் ; எப்படி உபநிஷத்துக்களுக்கு ப்ரம்ஹத்தினிடத்தில் அந்வயம் இருக்க முடியு மென்கிற கேள்விக்கு, அவித்யை நீங்கி ஶாந்தி யடைவதற்கு ஸாதநமான ஶமதமாதி ஸாதந ஸம்பத்துக்களை உண்டுபண்ணுவதற்கு மட்டில் சாஸ்த்ரம் காரணமாகிறதே தவிர வேறில்லை. மேலே சொன்ன ஶமதமாதிகள் ஏற்பட்டுவிட்டால், பிற்பட்டு '**तत्त्वमसि**' என்கிற ஆப்தோபதேசத்தால் அவித்யா ஸம்பந்தம் நீங்கி முக்தனுக ஹேதுவாகிற தென்றும் சொல்லப்படுகிறது. எப்படிப் பொய்யான சாஸ்த்ரத்தால் ஸத்யமான ப்ரம்ஹம் அறியப்படு மென்றூல், அதற்கு உதாரணமாக, எப்படி ஒருவனுக்கு நம்பிக்கை

ஏற்படும்படியாக ஒரு ஸர்ப்பம் தீண்டிவிட்டது என்று சொன்ன மாத்ரத்திலேயே, (வாஸ்தவத்தில் அவன் ஸர்ப்பத்தால் தீண்டப்படாவிடினும்), அவன் மயக்க மடைந்து போகிறானே, அதே மாதிரி தான் பொய்யான ஶாஸ்த்ரங்களிலிருந்து ஸத்யமான ப்ரம்ஹ ப்ராப்தி ஏற்படுகிறதென்று ஸமர்த்திக்கிறார்கள்.

நம் ஸித்தாந்தத்திலோ வென்றால், 'ஜகத்தும் ஸத்யம்; ப்ரம்ஹமும் ஸத்யம்; இவைகளுக்கு ஶரீர ஶரீரி பாவமும் ஸத்யம்; இதை எடுத்துக் காட்டும் ஶாஸ்த்ரமும் ஸத்யம்' என்பதால் நம் ஸித்தாந்தத்தில் எவ்வித க்லிஷ்ட கதியாகவும் ஸமர்த்தநம் செய்யவேண்டியதில்லாததால் இதன் பெருமை நன்கு புலப்படுகிறது.

இப்படியாக ஸ்வரூப சோதனை பலவாறாகச் செய்யப்பட்ட பிறகு உபாஸநா ப்ரகரணத்திலும் நம் ஸித்தாந்தத்தைக் கவனிப்போம்.

இங்கு ப்ரம்ஹம் நிர்க்குணமானதென்று வாதம் செய்கிறவர்கள் ஜகத் காரண ப்ரம்ஹம் அவித்யா ஶபளிதம் என்றும், அது ஜ்ஞேயமில்லாததால் உபாஸ்யமில்லை என்றும், இப்படிப்பட்ட அவித்யா ஶபலித ஜகத்காரண ப்ரம்ஹம்தான் ஜ்ஞேய மென்றும் உபாஸ்ய மென்றும், இப்படி இதை உபாஸனையால் அடைந்தால் பிறகு வஹ்நிந்தந ந்யாயத்தால் தானாகவே அவித்யை நீங்கி ஸ்வ ஸ்வரூபாபத்தி ஏற்படுகிறதென்றும் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட உபாஸ்தியை 'अन्तस्तद्धर्मोपदेशात्' என்கிற ஸூத்ரம் முதல் ஸூத்ரகாரர் உபபாதித்தார் என்கிறார்கள்.

நம் ஸித்தாந்தத்திலோ ஜகத்காரண ப்ரம்ஹம் ஸகுணமானதால் அதுவே உபாஸ்யம் அதுவே உபேயம் என்று ஸ்தாபித்ததால், இதர வாதங்களில் ஏற்பட்ட செய்கைகளுக்கு இடமில்லாமல் ஸயுக்திகமாக இருக்கிறது. உபாஸநா ப்ரகரணத்தில் இந்த அடிப்பட்ட கொள்கையில் மாறுதல் தவிர, மற்ற விதத்தில் உபாஸநா ப்ரகரணங்களில் சிற்சில இடங்கள் தவிர மற்ற விடங்களில் நம் ஸித்தாந்தத்தோடு நிர்க்குண வாதம் செய்பவர்கள் பக்ஷமும் பேதமில்லாம லிருக்கிறது.

[தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உண்மை வைணவன்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A.,L.T. வித்வான், திருவையாறு]

செங்கற்பட்டிலிருந்து ஐந்து க்ரோச தூரத்தில் உள்ளது கரும்பாக்கம் என்னும் க்ராமம். பரம்பரையாய் வேதபாரகர்களும் ஶாஸ்த்ர வித்பன்னர்களுமான ஐந்தாறு ஸ்ரீ வைஷ்ணவ குடும்பங்கள் வெகு நாட்களாய் அங்கே தழைத்துவந்தன. தாழ்ந்த விசாலமான ஓட்டு வீடுகள். சுத்தமான அகன்ற திருவீதி. வீதியின் முனையில் சிறிய ஒரு ஸந்நிதி. ஸந்நிதிக்குப் பக்கம் திறந்த வெளி. ப்ரம்ஹாண்டமான ஆல வ்ருக்ஷம். அருகில் அலைமோதும் நீர்ப்பரப்புடைய சிறிய ஏரி. கரும்பாக்கத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரும்பாலும் பொழுதை ஏரிகரையிலேயே போக்குவார்கள். உஷ:காலத்தில் நீராட்டம்; சிறிது நேரத்துக்கெல்லாம் ஜபம்; பிறகு பகவதாராதந பாத்ர சுத்தி; அநந்தரம் மாத்யாஹ்நிக ஸ்நாநம்; ஆகக் கரும்பாக்கம் க்ராமத்தாரை வீட்டிற் பார்ப்பது அரிது. கூப்பிடு தூரத்தில் ஏரி இருப்பதின் பலம் இது. இப்படிப்பட்ட க்ராமத்திலும் நவநாகரிக சண்டாளன் நுழைந்தான். ஒன்றிரண்டு க்ராப்புகளும் கோண வகிடுகளும் காணப்பட்டன. பாஷ்யம் பத்மநாபாசார்யர், உலகத்திலுள்ள சாபமெல்லாம் கொடுத்துப் பார்த்தார். பீ. ஏ. பட்டதாரிகள் இந்த சாபத்துக்கெல்லாம் பயந்து சீக்ரத்தில் திருந்துகிறார்களா? நாகரிகப் பெண்மணிகள்தான் நல்வார்த்தைக்கு இணங்குகிறார்களா? இரண்டு மில்லை. “ஹூம்! கலி கோலாஹலம்; ஸ்ரீதேவாதிராஜன் கண் திறந்தால் க்ஷேமம் உண்டாகலாம்” என்று பத்மநாபாசார்யர் முணு முணுப்பார். அவர் முகத்தில் அருவருப்பு கூத்தாடியது.

கரும்பாக்கத்தில், கருணாகராசார்யர் என்றொரு ஸ்வாமி வஸித்து வந்தார். அவர் பரம்பரையாய் வேதபாரகர்கள் வாழ்ந்த வம்ஶத்தில் ஜநித்து, ஸ்வயம் அத்யயந துரந்தரரும் சதுஶ்ஶாஸ்த்ர பாரங்கதருமாய் விளங்குபவர். உயர்ந்த ஆக்ருதி. சிவந்த நிறம். பொறுமையும் கருணையும் குடிகொண்ட முகம். தூய வெள்ளிய ஆடை. ஆசாரசீலர். வயது சுமார் நாற்பது இருக்கலாம். பரம ஏழை. உண்மை வைதிகனுக்கும் பணத்துக்கும் சேர்த்தி ஏது? ஐந்தாறு குழந்தைகள். நகரங்களில் லௌகிகர்களை யாசித்துக் கிடைத்த பொருளாலும், பித்ரார்ஜிதமான சிறிது பூமி கொடுக்கும் தாந்யத்தாலும் எப்படியோ காலக்ஷேபத்தை நடத்தி வந்தார். “ஸ்ரீ தேவாதிராஜனன்றோ அந்தப் பொறுப்பு?” என்று ஸ்ரீ பேரருளாளனிடத்தில் ந்யஸ்த ஸமஸ்தபரராக இருந்து வந்தார் கருணாகர ஸ்வாமி.

கரும்பாக்கத்திற்குப் பங்களூரிலிருந்து ஒரு குடும்பம் வந்தது. ஸௌம்ய வரதாசார்யர் பரமபதிக்க, அவரது வீடும் சிறிது பூஸ்திதியும் அவருடைய ஏகபுத்ரியான ஜானகத்தைச் சேர்ந்து விட்டன. இதுவிஷயமாக, ஜானகமும் அவளுடைய பெண்ணான மந்தாகினியும் கரும்பாக்கத்தில் சிலநாள் இருக்கும்படியாயிற்று. மந்தாகினி நாகரிக வாழ்வே உருவெடுத்தவள். ஆங்கிலம் வடமொழி கன்னடம் முதலிய பல மொழிகளிற் பயிற்சி பெற்றவள். பீ. ஏ. பட்டதாரி. உயர்ந்த மெல்லிய வடிவம். குறுகுறுத்த கண்கள். ஸதா ஓட்டமும் நடையுமான ஸ்வபாவம். இனிய குரல். வசீகரமான பேச்சு. வயதோ பத்தொன்பது. விவாஹமாகவில்லை. எந்த வ்ரன் வந்தபோதிலும் பிடிக்கவில்லை என்பாள். ஸ்வதந்த்ரமான காலமாகையால், மனதிற்குப் பிடித்த வரன் வந்தபொழுதன்றோ விவாஹம் நடைபெறும் ?

கரும்பாக்கத்தில் மந்தாகினியைக் கண்டு நடுங்காத மாதர்கள் இல்லை. வைதிக க்ராமத்தில் இது ஓர் ஆச்சர்யமில்லை. தோணவகிடு ; நீண்டு ரிப்பன் முடியப்பெற்ற பின்னல் ; பங்களூர் ஸில்க் புடவை ; ஸில்க் ஜாக்கட் ; அசைந்தாடும் டோலக்குகள் ; இந்த வடிவைக் கண்ட பெண்கள் வியப்பும் நடுக்கமும் கொண்டனர். போதாக்குறைக்கு மந்தாகினி ஸாயங்கால வேளைகளில் ஸைக்கிளில் சுற்று ப்ரயாணம் செய்துவிட்டுத் திரும்புவதை அக்ராமத்துச் சிறுவர் சிறுமியர் வியந்து நோக்குவர். கரும்பாக்கம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் பெண் பட்டினத்தில் வாழ்க்கைப்பட்டவள்தான். அவளும் நவ நாகரிகக்காரி. கோடியாத்துக் கோபாலாசாரி பிள்ளை பீ. ஏ. பட்டதாரிதான். ஆயினும் அவர்களும் வியக்குமாறு இருந்தது மந்தாகினியின் நடவடிக்கை. செம்பொன் ஏரிக் கரையிற் பரந்த வெட்டவெளி. மைல் கணக்காக நடந்து போகக்கூடிய வழி. கண்ணுக் கெட்டியமட்டும் தோப்புத் துறவு ஒன்றுங் கிடையாது. செம்பாக்கம், கருஞ்சேரி, பனங்குப்பம் இவைகளை அணுகும் வரையில் 7, 8, மைலுக்கு ஊர்களும் இல்லை. மந்தாகினி ஒரு நாள் ஸாயங்காலம் மெதுவாக ஸைக்கிளில் வந்துகொண்டிருந்தாள்.

கருணாகர ஸ்வாமி தர்ப்பங்கள் கொய்துகொண்டு அவ்வழியே வந்து கொண்டிருந்தார். இந்த வீராங்கனையைக் கடாக்ஷித்தார். மந்தஸ்மிதத்துடன் தலைகுனிந்து நடந்தார். வானில் கிளம்பிய பெருமதி தன் தண்ணிய கிரணங்களைப் பரப்பிக்கொண்டிருந்தது. மந்தமான காற்று ஏரியிலிருந்து வீசி அடிக்கிறது. மந்தாகினி கீழே இறங்கி ஸைக்கிளை நடத்தியவண்ணம் கருணாகராசார்யர் பக்கத்தில் வந்தாள். அவரை வியந்த வண்ணம் நோக்கினாள்.

“ ஸ்வாமீ ! வெகுதூரம் வழிதெரியாமல் சுற்றிவிட்டேன். உங்களுடனாவது ஊருக்கு வருகிறேன்.” என்றாள்.

"வா அம்மா! ஏன் வெகுதூரம் போகவேண்டும்? தக்க துணை யற்று அவ்வளவு தூரம் போவது எப்பொழுதும் நன்மையல்லவே" என்றார். அவருடைய அன்பையும் குளிர்ந்த மொழியையும் கண்டு வியந்தாள் மந்தாகினி. ஊரில் யாரையும் விட இவர் தனிப்பட்டவர் என்று கண்டுகொண்டாள். வைதிகராயினும் தன்பால் சிறிதளவும் வெறுப் பற்று அன்புடன் அவர் பேசியதைக் காண, அவள் மனம் எல்லையற்ற மதிப்பினால் இளகியது.

மத்யாஹ்நத்தில் கருணாகராசார்யர் தம் வீட்டு வாயிலில் செய்யும் புராண ப்ரவசநத்திற்கு மந்தாகினி தவறாது சென்றுவந்தாள். அவரு டைய உயர்ந்த அறிவையும், விஷயங்களைத் தெளிவாய் எடுத்துரைக்கும் ஆற்றலையும் உணர்ந்தாள். இப்படிப்பட்ட உத்தம வஸ்துவை உலகம் அறியவேண்டுமென்று விரும்பினாள். சென்னைக்குச் சிலநாள் செல்லவேண் டிய நிமித்தம் வந்தபடியால் ஒருநாள் ஸ்வாமியிடம், "ஸ்வாமி! சென்னை யில் ஏதேனும் தொண்டுசெய்து லௌகிகர்களை உத்தாரணம் செய்யக் கூடாதா? இப்படி ஆச்சர்யமாகத் தேவரீர் உபந்யஸிப்பதைக் கேட்டு எவ்வளவு பெயர்கள் நலமடையலாம்" என்றாள். கருணாகரர் மந்த ஸ்மிதத்துடன் "மந்தா! ஸர்வஜ்ஞனது ஸங்கல்பத்துக்கு முன் மநுஷ்ய னது சக்தி எம்மாத்ரம்? ஒரு ஸமூஹத்தைச் சீர்திருத்திவிடுவது என்பது அவ்வளவு எளிய காரியமா? நல்லது; இருக்கட்டும். மந்தா! நீ நல்ல குழந்தை; புத்திசாலி. உன் தாயிடமும் சொல்லியிருக்கிறேன். இந்த ஸம்வத்ஸரமே கல்யாணம் செய்துகொள்ளவேண்டும். இனிமேலும் அவி வாஹிதையாக இருந்தால் நன்றாயிராதம்மா. நான் சொல்வது உன் மன திற் படிகிறதன்றோ?" என்றார்.

மந்தா—"ஆமாம் மாமா; கல்யாண மென்றால் அவ்வளவு எளிய காரியமா? எங்கள் பந்துக்களில் ஒருவருக்கு ஸமீபத்தில் தாரம் தவறி விட்டது. அவர் சிறந்த படிப்பாளி. பெரிய சம்பளக்காரர். அவருக்கு என்னைக் கொடுக்கவேண்டுமென்று என் தாயும் என்னைச் சேர்ந்த யாவரும் நிச்சயம் செய்துவிட்டார்கள். நாளைப் பங்குனியில் விவாஹம் நடக்கலாம். ஆயினும் என் மனம் அதிற் செல்லவில்லை. அபிநிவேசம் என்பது தனி விஷய மல்லவா?"

கருண—"ஆமாம்; ஆயினும் ஸ்த்ரீ ஜாதிக்கு இவ்வளவு விசாரத் திற்கு நம்மவர்கள் இடம் கொடுக்கவில்லை. சிற்சில ஸ்ம்ருதிகாரர்களே, தாய் தந்தையர் தக்க கவலை எடுத்துக்கொண்டு பெண்ணைக் கந்யாதாநம் செய்துகொடாம லிருந்துவிட்டால், பெண்ணே தான் தன்னை ஒருவருக் குக் கொடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். எனினும் நீ உன் தாய் சொன்னபடி கேட்கவேண்டியதே."

மந்தா—"ஸரி; தேவரீர் ஆஜ்ஞைப்படி செய்கிறேன். சென்னைக்கு நாங்கள் கூப்பிட்டால் வரலாமோ?"

கருணு—"ஆஹா வருகிறேன். இதற்கென்னம்மா? உன்னைப் போன்ற புத்திசாலிகளுக்கு ஆத்மார்த்தமான ஹிதங்களைச் செய்வதாயின் என் மனம் ஸந்துஷ்டியே யடையும்" என்று சொல்லி முடித்தார்.

நாட்கள் சில சென்றன. மந்தாவும் ஜானகமும் சென்னை சென்று விட்டனர். ஒரு மாதமாயிற்று. ஒருநாள் கரும்பாக்கம் கருணுகராசார்ய ஸ்வாமிக்கு 25 ரூபாய் மணியார்டர் வந்தது. நகரங்களில் இது ஒரு பெரிய விஷயமில்லை. க்ராமங்களில் இது மிகவும் பெரிய விஷயம். சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸபையின் ஆதரவில், ஸ்வாமி ஏழு உபந்யாஸங்கள் ஒரு மாதகாலம் எழுந்தருளியிருந்து செய்யவேண்டு மென்றும், புறப்படுவதற்காகப் பணம் அனுப்பியிருப்பதாகவும் ஒரு கடிதமும் எழுதப்பட்டிருந்தது. இவ்விஷயங்கள் க்ராம மெல்லாம் பரவின. கருணுகர ஸ்வாமி எழுந்தருளப் போவதாகவும் வதந்தி கிளம்பியது. கருணுகர ஸ்வாமி சென்னைக்குப் புறப்பட்டும் போய்விட்டார். இதைக் கேட்டவுடன் பாஷ்யம் பத்மநாபாசார்யருக்கு வந்தது அஸூயை. இதுவன்ருே கலியுக லக்ஷணம். இதனுலன்ருே நம் வேதாந்த தேசிகமணியும் "வராஹிதக்ஷிணாம்வரிஸரேஷ்டாம் வதூய" என்று ஸாதிக்கும் படியிருந்தது. பாஷ்யம் ஸ்வாமி முகத்தில் அருவருப்புக் கூத்தாடியது. "அந்தப் பள்ளி முண்டை மந்தாவின் வேலையல்லவா இது? கருணுகரனும் ஓர் ப்ரச்சந்ந பாஷண்டி. அஸம்பாஷ்யர்களுடன் உறவாடும் இவனுக்குத் தர்மமேது? ஸத்வமேது? பிச்சைக் காசு வாங்கும் ஆசையால் அந்த நகரமா—நரகமா—அதற்குக் கிளம்பிவிட்டான். லோகத்தில் துட்டுதான் பெரிது. அதை ஆர்ஜநம் செய்ய எது வேண்டுமாயினும் செய்யலாம்" என்ருர்.

மாம்பலத்தில் கருணுகராசார்யர் ஏரிகரைத் தெருவில் எழுந்தருளியிருந்தார். ப்ரதி சனி ஞாயிறு தோறும் இரவு எட்டுமணி முதல் பத்துமணி வரையில் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி ஸந்நிதியில் ப்ரஸங்கம். ஏராளமான கூட்டம். எல்லையற்ற உத்ஸாஹம். ஆங்கிலம் படிப்பவர் மனதை அள்ளிப் பறிக்கத்தக்க எளிய நடையில் உபந்யாஸங்கள். ஸ்வாமி எழுந்தருளியது முதல் பல இளைஞர்கள் ப்ராதஸ்நாநம், திருவாராதநம், ஸ்தோத்ரபாட படநம், திவ்யாலய தர்சநம் முதலிய உத்தம வேலைகளில் ஈடுபடலாயினர். ஸ்வாமியும் உபந்யாஸ மில்லாத வேளைகளில் நூற்றுக்கணக்கான வைணவச் சிறுவர் சிறுமியருக்கு ஸ்தோத்ர பாடங்களைச் சொல்லிவைத்தார். இனிய சாரீரம். சுத்தமான உச்சரிப்பு. மாம்பலம் ஸ்ரீ வைகுண்டமாயிற்று. ஸ்வாமிக்கு மாத முடிவில் இரண்டாயிரம் ரூபாய் வரையில் பணம் வஸூலாகி ஸமர்ப்பிக்கப்பட்டது. மாம்பலத்தை விட்டுச்செல்லவே மனமில்லாதவராய்ப் பிரிந்து கரும்பாக்கம் வந்தார். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பகவான் கல்கியின் உருவம்

[ஸ்ரீ. உப. வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸ தாதாசார்ய ஸ்வாமி, வ்யாகரண ஸாஹித்ய ப்ரதாநாத்யாபகர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருவையாறு]

சம்பளம் என்னும் க்ராமத்தில் ப்ரதாநரும், விஷ்ணுயஶஸ் என்று பெயருள்ளவரும், மஹாத்மாவுமான ப்ராம்ஹணருக்குப் புத்ரனுக அவதரிக்கப்போகும் பகவான், கலி ஸம்பந்தத்தினுல் ஏற்பட்ட பாபத்தை அடியோடு தொலைக்கத் திருவுள்ளம்பற்றி, வேகமாகச் செல்வதும் கர்க்க மென்று சொல்லப்படுவதுமான வெண்குதிரையி லேறி, தன் கத்தியினுல் அரசவேஷம் பூண்ட கோடிக்கணக்கான துஷ்டர்களைக் கொன்று பூலோகத்தில் க்ருதயுக தர்மத்தை ஸ்தாபிக்கப் போகிறுன் என்று ஸ்ரீ பாகவதம் பன்னிரண்டாவது ஸ்கந்தம் இரண்டாவது அத்யாயத்திலும், ஸ்ரீ விஷ்ணு புராணம் நாலாவது அம்ஶத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

" கல்கீ விஷ்ணுயஶா நாம ஹயஶ்வேதோத்ப்லுதே ஹரி: |
கல்யந்தமாநே ஸம்ப்ராப்தே யதேஷு ஶிதிலேஷ்வம் மதே ||"

[கலியுக முடிவில் தர்மம் மிகவும் குறைந்தபோது, ஸ்ரீ ஹரியானவர் வெண்குதிரை வாஹந முள்ளவராகவும், விஷ்ணுயஶஸ் என்று ப்ரஸித்தராகவும் மறுபடியும் அவதரிக்கப் போகிறுர்] என்று ஸ்ரீ மஹாபாரதம் ஸபாபர்வத்தில், பகவானுக்கு விஷ்ணுயஶஸ் என்று பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. தஶாவதார ஸ்தோத்ரத்தில் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுல் 'கல்கீ விஷ்ணுயஶஸ்ஸுத:' என்பதனுல், பகவான் விஷ்ணுயஶஸ் என்பவரின் புதல்வராக அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. பாரதத்தில் கல்கிக்குச் சொல்லப்பட்ட விஷ்ணுயஶஸ் என்கிற திருநாமம் 'ஆத்மா வை புத்ரநாமாஸி' என்ற ப்ரமாணப்படி பிதாவின் பெயரைக் கொண்டு வ்யவஹரிப்பதாலோ, கல்பாந்தரத்தில் விஷ்ணுயஶஸ் என்று திருநாம மிட்டதாலோ, வேறு விதமாகவோ உபபந்நமாகலாம். தசாவதார ஸ்தோத்ர வ்யாக்யாநத்தில்,

'கர்கஸ்து ஶ்வேதவர்ணே ஸ்யாத் ஸிதாஶ்வேऽஷ்டாங்கே'

என்று ரத்நமாலையை உதாஹரித்திருப்பதால், வெண்குதிரை கர்க்க பதார்த்தமென்று தெரிகிறது. 'ரகர லகரங்களுக்குப் பேதமில்லை' என்கிற ஸங்கேதப்படி, வெண்குதிரை கல்க பதார்த்த மாகலாம். அதையுடையவர் கல்கீ. வெண்குதிரையில் ஏறியிருக்கிற பகவானென்று தாத்பர்யம்.

இந்தக் கல்கி பதார்த்தம் தசாவதார ஸ்தோத்ரத்தில் 'கஜூவாஹநஃஶா கஜூிநு' என்கிற ஸூக்தியினுல் ப்ரதிபாதிக்கப்பட்டது. அநந்த கவியினுல் தனது பாரத சம்புவின் எட்டாவது ஸ்தபகத்தில்,

> 'வாய_ுஷுவொயநவரெணு)ஃநஃவஶீ0ெநஃ
> தூணு)ாං ஃூஹஃஃ கவஜுயநு ஜமஃாதி_ுரஶிவாழ |
> நீவாநு வியாதஃஸேராநு நிஜஶூ)ං மதஃஞு)ாநு
> கொவாஃஃஷெஷு)தி வ யஃ கஃஹநாதஃரஜுஃ ‖'

[எந்தப் பகவான் அதமர்களான அஸுரர்களைக் கோபத்தால் தன் கொம்புகளுக் கொப்பானவர்களாகச் செய்வதற்காகச் சிறந்த தபஸ்விகளின் மனதாகிற கடிவாளங்களினுல் தடுக்கக் கூடியதும், உலக பீடையாகிற புற்குவியலை ஆஹாரமாகக் கொண்டதுமான மாயக் குதிரையாக அவதரிக்கப் போகிருரோ] என்று கல்கி அவதார விஷயமான ஶ்லோகத்தில், பகவான் மாயக் குதிரையாக வர்ணிக்கப்பட்டிருக்கிருர். இதன்படி பகவான் அஶ்வரூபர் என்று ஒப்புக்கொண்டால், ஸ்ரீ பாகவதம் முதலிய க்ரந்தங்களில் பகவான் விஷ்ணு யஶஸ்ஸின் புத்ரரென்றும் குதிரையிலேறித் துஷ்டர்களைத் தண்டிக்கப் போகிருரென்றும் சொல்லியிருப்பது விரோதிப்பதால், சம்புவில் சொல்லியிருப்பது சரியன்றென ஶங்கை உண்டாகின்றது. இவ்விஷயத்தில் இது ஸமாதாநமாகும்:—

பகவான் அஶ்வரூபரென்று சொன்ன அநந்த பட்டருக்கு, பகவானுடைய அவயவங்களெல்லாம் அஶ்வத்தினுடையன போன்றன என்று அபிப்ராயமல்ல. பகவானுடைய முகம் மாத்ரம் அஶ்வத்தினுடைய முகம் போன்றது என்றே அபிப்ராயம். பகவான் அஶ்வ முகராயிருந்தாலும், விஷ்ணு யஶஸ்ஸுக்குப் புத்ரபாவமும் குதிரையேறித் துஷ்டர்களை வதம் செய்வதும் ஸம்பவிப்பதால், ஸ்ரீ பாகவதாதிகளில் சொல்லியிருப்பதற்கு விரோதமில்லை. இவ்விஷயத்தில் அந்த பகவானுக்குத் தேஹத்தில் மநுஷ்ய பாவம், முகத்தில் அஶ்வ பாவம், நீலரூபம், நான்கு திருக்கைகள், சங்கம் சக்ரம் கத்தி கேடயம் இவைகளால் துஷ்டர்களுக்கு எப்பொழுதும் பயத்தை யுண்டுபண்ணுதல், இவைகளைச் சொல்வதும், மரீசி முனிவரின் வசநங்களை அநுஸரிப்பதுமான வைகாநஸ த்யாந முக்தாவலியில் இருககும் 'கஃ_ு தஃரஜுவஃநஃ' என்றும் 'வவஃஷி ஃநஃஜஃஃං ஸංஃஃவெ' என்றும் ஆரம்பமுள்ள இரண்டு ஶ்லோகங்களும் பஞ்சாங்கம் முதலியதில் அவ்விதம் அச்சிட்டிருப்பதும் ப்ரமாணமாகின்றன.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

கடோபநிஷத்தின் அர்த்த ஸங்க்ரஹம்.

[ஸ்ரீ. உப. வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்,
த்யாகராயநகர், மாம்பலம்.]

இந்த உபநிஷத்தில், முமுக்ஷுக்களால் அவஶ்யம் அறியப்பட வேண்டிய தத்வம் ஹிதம் புருஷார்த்தம் என்னும் விஷயங்கள் விவரிக்கப்படுகின்றன. ‘ஜீவன், தேஹேந்த்ரியங்கள் முதலியவைகளைக் காட்டிலும் வ்யதிரிக்தன், நித்யன்; பரமாத்மா, ஜீவன் தேஹேந்த்ரியாதிகளைக் காட்டிலும் விலக்ஷணன், அவைகளுக்கு அந்தர்யாமி, ஶேஷி; இப் பரமாத்மாவே உபாய காஷ்டாபூதன், பரம ப்ராப்யன்; அப்பரமாத்ம விஷயமான நிரதிஶய நிர்வ்யாஜ ப்ரீதியே அவனை அடைவதற்கு ஹேது; ஸம்ஸாரமாக அத்வாவுக்குப் பாரபூதமான பரமாத்ம ஸ்வரூபத்தின் ப்ராப்தியே பரம புருஷார்த்தம்’ இத்யாதியான விஷயங்களை நாசிகேதம் என்னும் உபாக்யாந வழியாக இந்த உபநிஷத் உபதேசிக்கின்றது.

நசிகேதஸ் என்பவர் மோக்ஷ புருஷார்த்தத்தையே இச்சிப்பவர். அவர் தர்மராஜனை மூன்று ப்ரஶ்நங்கள் கேட்கிறார். அவைகளுள் மூன்றாவது ப்ரஶ்நமும் அதற்குச் சொல்லப்படும் ஸமாதாநமுமே மிகவும் முக்யமானது. இந்த மூன்றாவது ப்ரஶ்நத்தில் முக்தனைப்பற்றி மாத்ரம் ப்ரஸ்தாவிக்கப்படுகின்றதென்றும், ஸமாதாநமும் அந்த முக்தன் விஷயமே யென்றும், சிலர் அபிப்ராயப்படுவார்கள். நமது பாஷ்யகாரரோ, இந்த ப்ரஶ்நத்தில் முமுக்ஷுவாற் செய்யப்படவேண்டும் உபாயம், அவனால் அடையப்படும் உபேயம், அந்த உபேயத்தை அடைகிறவனாகிற உபேதா, இந்த மூன்றுமே இந்த ப்ரகரணத்தில் உபபாதிக்கப்படுகின்றனவென்று விஸ்தாரம் செய்திருக்கிறார். ஆனால், ப்ரஶ்நத்தில் இந்த மூன்று விஷயங்களுமே ப்ரஸ்தாவிக்கப்படுகின்றன வென்பது வ்யக்தமாக ஏற்படவில்லை யென்று சொல்லலாம். ப்ரஶ்நத்தின் அர்த்தம் வ்யக்தமாக ஏற்படாத இடங்களில் ப்ரதிவசந ப்ரகாரப்படி அதை அறிவது ஶாஸ்த்ர ஸம்மதமாகையால், இவ்விடத்தில் ப்ரதிவசநத்தில் மூன்றும் தெளிவாக உபந்யஸிக்கப்பட்டிருப்பதை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீ பாஷ்யகாரர் இதுவே ப்ரஶ்நத்தின் விஷயமாக இருத்தல் வேண்டுமென்று ஸ்தாபித்திருப்பதாகத் தெரிகின்றது. ஸ்ரீ வ்யாஸ பகவானும், இவ்விடத்தில் ப்ரதிவசநத்தைக் கொண்டு ப்ரஶ்நத்தை விளக்குவது ந்யாய்ய மென்பதைத் தமது ஸூத்ரத்தில் ஸூசிப்பித்திருக்கிறார். “**त्रयाणामेव चैवमुपन्यासः प्रश्नश्च**” [I. 4. 6] என்னும் ஸூத்ரத்தில் உபந்யாஸத்தை முதலில் ப்ரஸ்தாவித்துப் பஶ்சாத் ப்ரஶ்நத்தை ப்ரஸ்தாவித்திருப்பது இந்த அபிப்ராயத்தாலேயே என்பது வ்யக்தம்.

(Q22, M4)
M44.32

நசிகேதஸ்ஸின் முதல் வரன், தமது பிதா தம்மிடத்தில் ஸௌமநஸ்கனாக இருக்கவேண்டு மென்பதே. முமுக்ஷுவால் இது அவஸ்யம் ப்ரார்த்திக்கப்பட வேண்டியதுதானா வென்று ஒரு ஸங்கை ஜநிக்கலாம். நசிகேதஸ்ஸால் இச்சிக்கப்படும் மோக்ஷ புருஷார்த்தத்திற்கு அபேக்ஷிதமான யோக்யதையைப் பிதாவின் ப்ரஸந்நதை கொடுக்குமாதலால், அதை முதலில் ப்ரார்த்திப்பது உபபந்நமே. இந்த வரத்தைப் பெற்றுக்கொண்டு, இரண்டாவது வரத்தால் அக்நி வித்யை என்னும் ஒரு வித்யையைத் தமக்கு உபதேஸிக்கவேண்டு மென்று ப்ரார்த்தித்தார். இந்த அக்நி வித்யை ஸாக்ஷாத்தாக மோக்ஷத்திற்கு உபாயமாகாவிட்டாலும், அதில் பரமாத்மாத்மகமான ஸ்வாத்மாநுஸந்தாநம் கர்ப்பிதமாக இருக்கிறபடியால், அங்கியாகிற அந்த அநுஸந்தாநத்தின் வழியாக அங்கமாகிற இந்த வித்யை பரம்பரையாக மோக்ஷத்திற்கு உபாயமாகக் கூடுமாதலால், முமுக்ஷுவாகிற நசிகேதஸ் இதை ப்ரார்த்தித்தார் என்பதில் எவ்வித அநுபபத்தியு மில்லை. இப்படிப் பரமாத்மாநுஸந்தாநமும், அந்தப் பரமாத்மாவை ஆத்மாவாக வுடைய ஸ்வாத்மாநுஸந்தாநமும், இவை இரண்டும் அந்த அக்நிவித்யையில் கர்ப்பிதமாக இருக்கின்றன வென்பது, "**लोकादिमग्निं तमुवाच तस्मै**" [I. 1. 15] என்று உபக்ரமித்து, "**ब्रह्मजज्ञं देवमीड्यं विदित्वा....शान्तिमेति**" [I. 1. 17] "**य एवं विद्वान् चिनुते नाचिकेतम्। स शोकातिगो मोदते स्वर्गलोके**" [I. 1. 18] என்னும் வாக்யங்களால் வெளிப்படுகின்றது. அவைகளில் 'இந்த அக்நி வித்யையைச் சயநம் செய்கிறவன் ஸோகத்தைத் தாண்டுகிறான்' என்று சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? "**येन पुनर्न जायते**" [I. 1. 19] என்று அபுநர்ப்பவத்திற்கு ஹேதுவாக இருக்கும் ப்ரஹ்மோபாஸநத்தின் வழியாக மோக்ஷ ப்ராப்தியும் சொல்லப்பட்டிருக்கின்றது.

மூன்றாவது வரமாகிற "**येयं प्रेते**" [I. 1. 21] இத்யாதியான ப்ரஸ்நத்தில் மோக்ஷ ஸ்வரூபம் கேட்கப்படுகின்றது என்பது வ்யக்தம். '**प्रेते**' என்பதற்கு 'மரண மடைந்த' என்னும் ஸாமாந்யமான பொருள் அன்று; 'கடைசி ஸரீரத்தின் விமோசநத்தை அடைந்த' [அதாவது: மோக்ஷ மடைந்த] என்பதே பொருள். அப்படிப் பொருள் கொள்ளாவிட்டால், முந்தி நசிகேதஸ் செய்திருக்கும் வர த்வயத்தின் வரணத்திற்கு அநுபபத்தி ஸம்பவிக்கும். ஆகையால் இவ்விடத்தில் கடைசி ஸரீரம் போனபிறகு ஜீவனுடைய ஸ்திதி என்ன [அதாவது: மோக்ஷத்தின் ஸ்வரூபமென்ன] என்று மோக்ஷத்தின் ஸ்வரூபமே கேட்கப்பட்டதாகிறது. இப்படி மோக்ஷத்தைப்பற்றிக் கேட்கப்படும் கேள்வியானது, அந்த மோக்ஷத்திற்கு ஸம்பந்தப்பட்டுள்ள உபேயத்தின் ஸ்வரூபம், உபேதாவின் ஸ்வரூபம், உபாயமாகிற உபாஸநத்தின் ஸ்வரூபம், ஆக இம்மூன்றின் ஸ்வரூபமும் விளக்கப்பட்டால் மாத்ரம் ஸமஞ்ஜஸமான ஸமாதாநம் சொல்லப்பட்டதாகு மாதலால், அந்த மூன்றுமே இவ்விடத்தில் விளக்கப்படுகின்றன.

இப்படி அதிரஹஸ்யமாயும் துரவபோதமாயு மிருக்கும் விஷயம் கேட்கப்பட்டதைப் பார்த்துத் தர்மராஜன், ‘இதன் உபதேசத்திற்கு நசிகேதஸ் யோக்யனா?’ என்பதைப் பரீக்ஷிக்கும் பொருட்டு அநேகவித ப்ரலோபநங்களைச் செய்து, அவன் உபதேசத்திற்கு யோக்யனே என்பதை அறிந்து, “**तं दुर्दर्शम्**” [2 – 2—12] இத்யாதியால் அந்த மூன்று ப்ரஶ்நங்களுக்கும் ப்ரதிவசநத்தை ஸங்க்ரஹமாகச் சொன்னார். இந்த மந்த்ரத்தில் ‘அத்யாத்ம யோகம்’ என்பது, உபேதாவின் ஸ்வரூபத்தை விஷயமாக வுடைய யோக பரமானதால் உபேதாவின் ஸ்வரூபமும், ‘தேவனை த்யாநித்து’ என்பது, உபேயனென்று நிர்த்தேஶிக்கப்படும் ப்ராப்ய பூதனான தேவ பரமானதால் உபேயத்தின் ஸ்வரூபமும், ‘த்யாநித்து’ என்பது, உபாஸந பரமாதலால் உபாயத்தின் ஸ்வரூபமும் நிர்த்தேஶிக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஸங்க்ரஹமான உபதேஶத்தைக் கேட்ட நசிகேதஸ், இவைகளை விஶதமாகத் தெரிந்துகொள்ளவேண்டு மென்று எண்ணி, அந்த ஸ்வரூப ஶோதநத்தை அறிய விருப்ப முள்ளவனாய் “**अन्यत्र धर्मात्**” [I. 2. 14] இத்யாதியான வாக்யத்தால் மறுபடியும் அந்த மூன்று விஷயங்களைப் பற்றியே ப்ரஶ்நம் செய்தான். ‘லோகத்தில் ஸாமாந்ய விஷயங்களில் ப்ரஸித்தமாகத் தென்படும் ஸாத்யம் ஸாதநம் ஸாதகம் இவைகளைக் காட்டிலும் அத்யந்தம் விலக்ஷணங்களான ஸாத்ய ஸாதந ஸாதகங்களை எனக்கு உபதேஶிக்கவேண்டும்’ என்பதே இதன் பொருள். இதற்கு ஸமாதாநமாக, முதலில் ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் ப்ரணவத்தை “**सर्वे वेदा यत्पदमामनन्ति**” [I. 2. 15] இத்யாதியால் புகழ்ந்து பேசுகிறார். ப்ரணவோச்சாரணம் த்யாநத்திற்கு உபகாரகம். த்யாநம் மோக்ஷோபாயமாகிறபடியால், அதற்கு உபாயமாக இருக்கும் ப்ரணவத்திற்கும் அந்த உபாயத்வ முண்டாகையால், அது உபாயத்தைச் சொல்லுகிறதென்று சொல்லக்கூடும். எந்த ஶப்தம் வாசகமோ அது வாச்யத்தின் ஸ்மரணத்திற்கும் உபாயமாகு மன்றோ? இப்படி நசிகேதஸ்ஸால் கேட்கப்பட்ட மூன்று விஷயங்களையும் இது ப்ரதிபாதிக்கின்றதாகையால் இதைப் புகழ்கிறார். இவ்வாறு ப்ரணவத்தின் உபயோகத்தை விளக்கி, ‘இந்த உபயோகம் மாத்ரமில்லை; ‘பத’ ஶப்தத்திற்கு எது வாச்யமோ, அதில் இது அந்தர்ப்பூதமாகவு மிருக்கின்றது’ என்பதை “**एतद्ध्येवाक्षरं ब्रह्म**” [I. 2. 16] இத்யாதியால் மறுபடியும் அந்த ப்ரணவத்தையே புகழ்கிறார். பிறகு “**न जायते**” [I. 2. 18] “**हन्ता चेन्मन्यते**” [I. 2. 19] இத்யாதியான இரண்டு மந்த்ரங்களால் ப்ராப்தாவாகிற ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை முதலில் விளக்கி, அதற்குப் பிறகு “**अणोरणीयान्**” [I. 2. 20] என்பது முதல் “**क इत्था वेद यत्र सः**” [I. 2. 25] இத்யந்தமான வாக்யங்களால் ப்ராப்யமாகிற பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை விளக்கக் கோலி, அதன் நடுவில், “**नायमात्मा प्रवचनेन लभ्यः**” [I 2. 23] இத்யாதியால் உபாயமாகிற உபாஸநம் பக்தி ரூபமே என்று உபதேஶிக்கிறார். பிறகு “**ऋतं पिबन्तौ**” [I. 3. 1] இத்யாதியால், உபாஸ்

யனும் உபாஸகனும் சேர்ந்து ஒரே ஹ்ருதயத்தில் இருக்கிறபடியால் அந்த உபாஸ்யனை உபாஸிப்பது ஸுகரம் என்பதை விளக்கி, "आत्मानं रथिनम्" [I. 3. 3] என்பதுமுதல் "तत्कवयो वदन्ति" இத்யந்தமாக உபாஸந ப்ரகாரத்தையும் உபாஸகனுக்குக் கிடைக்கும் வைஷ்ணவ பரமபத ப்ராப்தியையும் சொல்லி, "अशब्दम्" [I. 3. 15] இத்யாதியால் உபதேஶத்தை உபஸம்ஹரிக்கிறார். இந்த ப்ரதிவசநத்தில் மூன்று விஷயங்களும் வ்யக்தமாக ப்ரகாஶிக்கிறபடியால், ப்ரஶ்நத்திலும் இந்த மூன்றும் விவக்ஷிதம் என்பது ஸித்தம்.

இந்த உபநிஷத்தில், ஜகத்காரணத்வமும் உபாஸ்யத்வமும் ஜீவாத்மாவுக்கே ஆம்நாதமாக இருக்கின்றதென்றும், அந்தக் காரணத்தால் ஜீவாத்மாவே ஜகத்காரண மாகின்றதென்றும் சிலர் ஶங்கிக்கிறார்கள். அந்த ஶங்கையைப் பரிஹரிப்பதற்கு ஸ்ரீவ்யாஸ பகவான் இந்த உபநிஷத்திலுள்ள சில வாக்யங்களை விஷயமாகக்கொண்டு மூன்று அதிகரணங்களை ப்ரவர்த்திப்பித்திருக்கிறார். அவையாவன :—(1) அத்ரதிகரணம் [I. 2. 9], (2) ப்ரமிதாதிகரணம் [I. 3. 23], (3) ஆநுமாநிகாதிகரணம் [I. 4. 1]. இவைகளின் விஷயங்களையும் இவ்விடத்தில் அநுஸந்திப்பது ப்ராப்தமாகுமாதலால் அவைகளையும் ஸங்க்ரஹமாக விசாரிக்கிறோம்.

(1) அத்ரதிகரணம் :—இதில் "यस्य ब्रह्म च" [I. 2. 25] இத்யாதியான வாக்யம் ஜீவாத்மாவை ப்ரதிபாதிக்கின்றது என்பது பூர்வ பக்ஷம். அவர்கள் சொல்வதாவது :—இந்த மந்த்ரத்தில் 'எவனுக்கு ப்ரஹ்மமும் க்ஷத்ரமும் ஓதநமாகின்றனவோ' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'ஓதநம்' என்பதற்கு 'அந்நம்' என்பது பொருள். 'ப்ரஹ்மமும் க்ஷத்ரமும் ஓதநமாகின்றன' என்பதற்கு, 'ப்ரஹ்மமும் க்ஷத்ரமும் போக்ய வஸ்துக்களாகின்றன' என்று கௌணமாகத் தாத்பர்யம் கொள்ளவேண்டும். 'ப்ரஹ்ம க்ஷத்ர' ஶப்தங்கள் ஸகல ஜந்துக்களையும் உபலக்ஷிக்கின்றனவென்று எடுத்துக்கொண்டு, 'எவனுக்கு ஜந்துக்களெல்லாம் போக்யங்களாகின்றனவோ' என்பதை இந்த வாக்யத்தின் கருத்தாக க்ரஹிக்கிறார்கள். அதாவது :—'ஜகத்தில் ஜந்துக்களெல்லாம் ஸ்த்ரீ புமாங்களாக இருக்கும் வழியாகப் பரஸ்பரம் போக்ய வஸ்துக்களாகின்றன' என்று சொல்லப்பட்டதாயிற்று. இப்படிப்பட்ட போக்த்ருத்வம் கர்ம வஶ்யனாயிருக்கும் ஜீவனுக்கே ஸம்பவிக்கக்கூடுமாகையால், இந்த மந்த்ரம் அப்படிப்பட்ட ஜீவனைப் பற்றியே பேசுகின்றது. இதுதான் பூர்வபக்ஷிகளின் வாதம். ஆனால் இந்த மந்த்ரத்தின் உத்தர பாகத்தில் 'ம்ருத்யு எவனுக்கு உபஸேசநமோ' என்று சொல்லப்பட்டிருக்கின்றதே ; அதன் கருத்து என்னவென்று ஒரு ஶங்கை ஜநிக்கக்கூடும். இதற்கு அவர்கள், 'ஜீவாத்மா நித்யனாதலால் அவன் ஸ்வரூபத்தை ம்ருத்யு பாதிக்கவில்லை ; அவனுக்கு ம்ருத்யுவஶ்யத்வ மில்லை' என்பதே 'உபஸேசநம்' என்னும் நிர்த்தே

ஶத்தின் தாத்பர்யமென்று சொல்லுகிறார்கள். ஸித்தாந்திகள் இந்த விவரணத்தை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் சொல்வதாவது: 'உபஸேசநம்' என்னும் ஶப்தத்தின் ப்ரஸித்தமான அர்த்தம், 'எது ஸ்வயம் புஜிக்கப்படத் தகுந்ததாயிருக்கையில் மற்றை வஸ்துக்களையும் புஜிப்பதற்கு ஸாதநமா யிருக்கின்றதோ அது' என்பதன்றோ? இந்த ப்ரஸித்தார்த்தத்தை க்ரஹிப்பதே ஸ்வரஸமாகும். ம்ருத்யு இதரர்களுடைய ஸம்ஹாரத்திற்கு ஸாதநமாயும் ஸ்வயமும் ஸம்ஹரிக்கப்படுகிறவனுயுமிருக்கிறபடியால், அவனை உபஸேசநமாக நிர்த்தேஶிப்பது உபபந்நம். இந்தப் பொருளுக்கு ஒத்ததாக 'ஓதநம்' என்னும் ஶப்தத்திற்கு 'ஸம்ஹரிக்கப்படும் தன்மையை யுடைய வஸ்து' என்று பொருள்கொண்டு, 'எவனுக்கு ப்ரஹ்ம க்ஷத்ரம் முதலான ஸகல ஜந்துக்களும் ஸம்ஹார்யங்கள் ஆகின்றனவோ' என்று வாக்யத்தை விவரிக்கக்கூடுமன்றோ? அப்படிப்பட்ட ஸம்ஹர்த்ருத்வம் பரமாத்மாவுக்கே ஸம்பவிக்கு மாகையால், இவ்விடத்தில் பரமாத்மாவே ப்ரதிபாதிக்கப்படுகிறுன் என்பது ஸித்தம். இதுதான் ஸித்தாந்திகளின் விவரணம்.

ப்ரகரணமும் இந்த ஸித்தாந்தத்திற்கே அநுகூல மென்பது முன்பின் வாக்யங்களைப் பார்த்தால் விளங்கும். முதலில் **"तं दुर्दर्शम्"** [I. 2. 12] இத்யாதியால் பரமாத்மா பேசப்பட்டிருக்கிறுன். பிறகு **"महान्तं विभुम्"** [I. 2. 22] என்று அந்தப் பரமாத்மா மஹானென்றும் விபுவென்றும் ப்ரதிபோதிக்கப்பட்டிருக்கிறுன். அதற்குப் பிறகே ப்ரக்ருத' **'यस्य ब्रह्म च'** [I. 2. 25] என்னும் வாக்யம் வருகின்றது. இப்படிப் பரமாத்ம ப்ரதிபாதநம் அவிச்சிந்நமாக வருகிறபடியால், இந்த வாக்யமும் பரமாத்ம பர மென்பது நன்கு விளங்கவில்லையா? மேலும் இந்த மந்த்ரத்தின் உத்தர பாகத்திலுள்ள **"क इत्था वेद यत्र सः"** [I 2. 25] என்று அவனுடைய துர்ப்போதத்வத்தைச் சொல்லும் இந்த வாக்யம், பூர்வம் 'துர்த்தர்ஶம்' என்று ப்ரஸ்துதமான பரமாத்மாவின் ப்ரத்யபிஜ்ஞையை ஸூசிப்பிக்கின்றதன்றோ?

ஆனல், ப்ரகரணத்தால் பரமாத்மா ப்ரதிபாதிக்கப்படுகின்றுன் என்பது ஸித்தித்தாலும், அந்த ப்ரகரணம் விச்சிந்நமாகிவிட்டபடியால் அது எப்படி அந்த ஸித்திக்கு அநுகூலமாகும்? அடுத்து வரும் **"ऋतं पिबन्तौ"** என்னும் மந்த்ரம் கர்ம பல போக்தாவைப்பற்றிப் பேசுகின்றதன்றோ? 'ருதபாநம்' என்பது கர்ம பல போகம் தானே. அது பரமாத்மாவுக்கு ஸம்பவியாததால், இதில் ஜீவனே ப்ரதிபாதிக்கப்படுகிறுனென்றே சொல்லவேண்டும். ருதபாந ரூபமான லிங்கம் ப்ரகரணத்தைக் காட்டிலும் பலீயஸ்ஸன்றோ? அப்படிச் சொன்னல் பரமாத்ம ப்ரஸ்தாவம் விச்சிந்நமாகி விடவில்லையா? ஆனல் இதற்கு ஒரு ஸமாதாநம் சொல்லக் கூடும். அது என்னவென்றுல்: 'ருதபாநம' இரண்டு பெயர்களுக்கும் சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்களுக்குள் ஒருவர் ஜீவாத்மாதான்; மற்றொருவர் பரமாத்மாவாக ஏன் இருக்கக்கூடாது? பரமாத்மாவுக்கும்

கர்ம பலத்தின் போகாநுபவத்தில் ஒருவிதமான அந்வயம் உண்டு; எப்படியென்றால்: ஜீவாத்மாவைக் கர்மபலத்தை அநுபவிக்கச் செய்கிற வன் பரமாத்மாவன்றோ? அப்படி அவன் ப்ரயோஜக கர்த்தாவாகிற படியால் அவனுக்குக் கர்மபல போக்த்ருத்வம் ஸம்பவிக்கக்கூடும். ஆகையால் விச்சேத மில்லை. இம்மாதிரி ஒரு ஸமாதாநத்தைச் சொல்லக் கூடும். அதற்கு ஒரு கேள்வி உண்டு. 'இப்படி ப்ரயோஜக கர்த்ருத் வத்தை ஆதாரமாகக் கொண்டு பரமாத்மாவுக்குக் கர்மபல போக்த்ருத் வத்தை ஸ்தாபிப்பது க்லிஷ்டமன்றோ?' பைங்கி ஶ்ருதி, இந்த மந்த் ரத்தை விவரிக்குமிடத்தில் இவ்விடத்தில் ஜீவாத்மாவுடன் ருதபாநம் செய்வதாகச் சொல்லப்படும் மற்றொன்று புத்தியேயென்று சொல்லுகிற தன்றோ? அந்தப் புத்தி அசேதநமாக இருக்கிறபடியால் அதற்குப் போக்த்ருத்வம் எப்படிச் சொல்லக்கூடுமென்றால், புத்தி போகத்திற்குக் கரணமாகிறபடியால் ஔபசாரிகமாக அதற்குக் கர்த்ருத்வம் சொல்ல லாம். நிற்க: ருதபாநத்துடன், 'सुकृतस्य लोके' என்றும் 'गुहां प्रविष्टौ' என்றும் இவ்விருவருக்கும் ஸுக்ருதத்தால் கிடைக்கும் லோகத்தில் வர்த் திப்பதும் குஹா ப்ரவேஶமும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டும் ஸர்வகதனான பரமாத்மாவுக்கு ஸ்வரஸமாக ஸம்பவிக்கமாட்டாது. மேலும், இவ்விருவர்களுள் ஒருவரைச் 'சாயை' [அப்ரகாஶம்] என் றும் மற்றொருவரை 'ஆதபம்' [ப்ரகாஶம்] என்றும் இந்த மந்த்ரமே பேசுகின்றது. அப்ரகாஶம் அசேதநமாகிற அந்த:கரணத்திற்கே யுக்த மன்றோ? தவிர, இவ்விடத்தில் ஜீவனுக்கு ப்ராதாந்யேந போக்த்ருத்வம் சொல்லப்படவேண்டும். அந்த ப்ராதாந்யம் புத்தி பக்ஷத்தில் மாத்ரம் ஸித்திக்கும்; பரமாத்ம பக்ஷத்தில் அது விரோதிக்கும். இம்மாதிரி யான காரணங்களால் பரமாத்மாவின் ப்ரதிபாதநம் தொடர்ந்து வரு கிறது என்று சொல்வது அஸாத்யமாகிறபடியால், பூர்வ மந்த்ரங்களிற் செய்யப்பட்டுள்ள பரமாத்ம ப்ரதிபாதநம் இவ்விடத்தில் விச்சிந்நமாகி விட்டதென்றே சொல்லவேண்டும்.

இவ்வாறு பூர்வ பக்ஷிகளாற் செய்யப்படும் ஆக்ஷேபத்திற்கு ஸித் தாந்திகள் சொல்லும் ஸமாதாநம் என்னவென்றால்:—ருதபாநம் இரண்டு பக்ஷத்திலும் க்லிஷ்டமே. ஆனால், புத்தி பக்ஷத்தில் புத்தி உபகரண மாகின்றது என்னும் காரணத்தால் கரணத்வேந புத்திக்கு அந்வயம் கிடைக்கிறது; பரமாத்ம பக்ஷத்திலோ வென்றால் பரமாத்மா ப்ரயோ ஜக கர்த்தாவாகிறான் என்னும் காரணத்தால் பரமாத்மாவுக்கு அந்வயம் கிடைக்கிறது. இவை இரண்டுக்குள் ப்ரயோஜக கர்த்ருத்வ விஶேஷம் பரமாத்ம பக்ஷத்திற்கு இருக்கிறபடியால் அதுவே அதிக ஸ்வரஸம். நிற்க: ஸுக்ருத ஸாத்ய லோகத்தின் நிர்த்தேஶமும் 'சாயை ஆதபம்' என்னும் நிர்த்தேஶமும் 'புத்தி' பக்ஷத்தில் ஸ்வரஸமாக இருந்தாலும், குஹா ப்ரவேஶ நிர்த்தேஶம் ஒருகாலும் 'புத்தி' பக்ஷத்திற்கு ஒத்து வரமாட்டாது. குஹா ப்ரவேஶத்தைச் சொல்லும் ஶ்ருதிகளைப் பார்க்

கும் பக்ஷத்தில் பரமாத்மாவுக்கு ப்ரவேஶத்தைச் சொல்லும் ஶ்ருதி வாக்யங்களே ஏராளமாக இருக்கின்றன. ஆகையால் பூயோ தர்ஶந ந்யாய ப்ரகாரம் பரமாத்மாவுக்குக் குஹா ப்ரவேஶத்தை நிர்த்தேஶிப் பதே உசிதமாகும். பைங்கி ஶ்ருதியிற் செய்யப்பட்டிருக்கும் விவரணத் தில் பூர்வபக்ஷிகள் சொல்வதுபோல புத்தியே விவக்ஷிதமாகப் பேசப் படுகின்றது என்று நிர்த்தாரணம் செய்ய இடமில்லை. அவ்விடத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கும் பதம் பரமாத்மாவையும் குறிக்கத் தகுந்ததே. ஸத்வமும் க்ஷேத்ரஜ்ஞருமே இவ்விடத்தில் நிர்த்தேஶிக்கப்படு கின்றனர் என்றல்லவோ அந்த ஶ்ருதி சொல்லுகின்றது. 'ஸத்வ' ஶப்தம் ஜந்துவைக் குறிக்குமாதலால் [सत्वमस्त्रीषु जन्तुषु] அது ஜீவ வாசகம், 'க்ஷேத்ரஜ்ஞ' ஶப்தம் பரமாத்ம வாசகம்; [क्षेत्रज्ञोऽक्षर एव च]. ஆகையால் பைங்கி ஶ்ருதி விரோதமில்லை. மற்றுமொரு விஷயம் கவ னிக்கத் தக்கது. '**पिबन्तौ**' என்று நிர்த்தேஶித்திருப்பதன் ஸ்வாரஸ் யம் பாநம் செய்யும் இருவர்களும் ஸஜாதீயர்களாக இருந்தால் மாத்ரம் கடிக்குமே தவிர்த்து, ஒன்று சேதநமாகவும் மற்றொன்று அசேதநமாக வும் இருந்தால் கடியாது. "**उभौ गृहं प्रविष्टौ**" [இரண்டு பெயர்கள் வீட் டுக்குள் ப்ரவேஶித்தார்கள்] என்று சொல்லுமிடத்தில் நிர்த்தேஶம் இரண்டு புருஷர்கள் விஷயத்தில் மாத்ரம் ஸ்வரஸமாகுமே தவிர்த்து, தண்டத்துடன் கூடிய புருஷன் விஷயத்தில் ஸ்வரஸமாகுமோ? ஸங்க்யை ஶ்ருதமாக இருக்குமிடத்தில் ஒன்று இன்னதென்று ஏற்பட்டுவிட்டால், இரண்டாவது எதுவென்று ஆகாங்க்ஷை வரும்பொழுது ஸம்ப்ரதிபந்ந வஸ்துவின் ஜாதியை உபஜீவித்து வ்யக்தியைப் பரிக்ரஹிப்பதே புத்தி லாகவம். விஜாதீய வ்யக்தியைப் பரிக்ரஹித்தால் ஜாதி ஒன்று வ்யக்தி ஒன்று ஆக இரண்டு புத்தி அபேக்ஷிக்கிறபடியால், அது புத்தி கௌர வத்தையே ஆவஹிக்கும். ருதபாந லிங்கத்தைக் கொண்டு ஒரு வ்யக்தி ஜீவனென்று அறிந்தால், மற்றொன்று அந்த ஜீவனுக்குச் சேதநன் என் னும் தன்மையால் ஸஜாதீயனான பரமாத்மாவே க்ராஹ்யன். ஆகையால் பூர்வபக்ஷியின் ஶங்கைக்கு அவகாசம் இல்லை. இது இந்த அதிகரண விஷயம்.

2. ப்ரமிதாதிகரணம்: இவ்விடத்தில் பரிஹரிக்கப்படும் ஶங்கை யாவது:—"**अङ्गुष्ठमात्रः**" [II. 1. 12] இத்யாதியான ஶ்ருதியில், 'ஶரீரத்தி னுள் இருக்கும் புருஷனுக்கு அங்குஷ்ட பரிமாணத்வம் சொல்லியிருப் பதைப் பார்த்தால், அந்தப் புருஷன் விபுவான பரமாத்மாவன்று, அவன் ஜீவாத்மாவாகவே இருக்கவேண்டுமென்று ஏற்படவில்லையா?' என்பது தான். 'இதே ஶ்ருதியில் "**ईशानो भूतभव्यस्य**" என்று இருக்கிறதே; அது ஜீவாத்மாவுக்கு ஸங்கதமாகுமோ?' வென்றால், உபக்ரமத்தில் ஜீவ னைக் குறிக்கும் அங்குஷ்ட பரிமாணத்வ ரூபமான ஜீவலிங்க மிருக்கிறபடி யால் அதன் பலத்தைக்கொண்டு ஜீவனென்பது ஸ்தாபிக்கப்பட்டால், கடைசியில் வரும் பூத பவ்ய ஈஶித்ருத்வத்தை ஒருவிதமாக நயிப்பித்து

விடலாமென்று ஸமாதாநம் சொல்லுகிறார்கள். இதற்கு ஸித்தாந்திகள் சொல்லும் அநுபபத்தியாவது:—ஜீவனுக்குச் சொல்லப்படும் 'அங்குஷ்ட பரிமாணத்வம் ஸ்வபாவத்தால் அணுபரிமாணனான ஜீவன் விஷயத்தில் ஔபாதிகமே ஆகும். ஜீவன் ஹ்ருதயத்தினுள்ளில் இருக்கிறானென்பதாலன்றோ அவன் அங்குஷ்ட பரிமாணனென்று பேசப்படுகிறான். அது போலவே பரமாத்மாவுக்கும் ஔபாதிகமாக அங்குஷ்ட பரிமாணத்வம் சொல்லப்படக்கூடுமன்றோ? அவனும் அந்த ஹ்ருதயத்தினுள்ளில் உபாஸநா ஸௌகர்யத்திற்காக மாத்ரமே இருக்கிறான். இப்படி இருவருக்கும் அங்குஷ்ட பரிமாணத்வம் ஔபாதிகமாக ஸாதாரணமாகிறபடியால், அதைக்கொண்டு ஸந்தேஹ நிர்ணயம் செய்வது ந்யாய்யமன்று. ஆகையால் பின் சொல்லப்படும் பூதபவ்யேஶித்ருத்வம் எவருக்குப் பொருந்தும் என்பதைப் பார்த்தே நிஶ்சயம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால், பரமாத்மாவுக்கே அஸங்குசிதமான ஈஶித்ருத்வம் ஶ்ருதிகளில் படிக்கப்பட் டிருக்கிறபடியால், அவனே இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிறானென்று சொல்வதே உபபந்நமாகும்'. இதுதான் ஸித்தாந்திகளின் உபபாதநம். நிற்க: "यदिदं किञ्च" [II. 3. 2] என்னும் வாக்யத்தில் 'அவனிடத்திலிருந்து பயந்தே ஜகத் முழுவதும் தம்தம் கார்யத்தில் ப்ரவர்த்திக்கின்றது' என்று சொல்லப்படுவதும், "भयादस्य" [II. 3. 3] இத்யாதியாற் சொல்லப்படும் அக்நி ஸூர்யாதிகளுடைய ஆஜ்ஞா பரிபாலநமும் ஜீவனுக்குப் பொருந்துமோ? தைத்திரீயத்தில் "भीषास्मात्" [3. 1. 14] இத்யாதியில், அப்படிப்பட்ட பீஷயித்ருத்வம் பரமாத்மாவுக்கே அஸாதாரணமாகச் சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. மேலும் ப்ருஹதாரண்யகத்தில் "तं देवाः" [11. 4. 16] இத்யாதியான வாக்யத்தில் பரமாத்மாவுக்கே அஸாதாரணமாகச் சொல்லப்பட்டிருக்கும் ஆச்சாதநம் செய்யும் தன்மையும், அநுக்ரஹிக்கும் தன்மையும் இவை இரண்டும், இவ்விடத்தில் "न तत्र सूर्यो भाति" [II. 2. 15] இத்யாதியான வாக்யத்தில் இந்த அங்குஷ்ட மாத்ர புருஷனைப் பற்றியே சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் ப்ரஸ்துத புருஷன் பரமாத்மாவே என்று நிர்த்தாரணம் செய்யப்படுகின்றது. இதுதான் ஸித்தாந்திகளின் நிர்ணயம்.

3. ஆநுமாநிகாதிகரணம்.—இதன் விஷயம் "इन्द्रियेभ्यः पराः" [I. 3. 10] இத்யாதியான மந்த்ரத்தில் ஸாங்க்ய ப்ரக்ரியையின் ப்ரத்யபிஜ்ஞாநம் ஏற்படுகிறபடியால், இந்த உபநிஷத் 'அப்ரஹ்மாத்மகமான ப்ரதாநமே ஜகத்காரணம்' என்பதை விவரிக்கின்றதோ என்பதே. இந்த ஶங்கைக்குப் பரிஹாரம் இந்த அதிகரணத்தில் விளக்கப்படுகின்றது. இதன் விவரம் உரையில் விஸ்தாரமாக விசாரிக்கப்பட்டிருக்கிறபடியால், இவ்விடத்தில் மறுபடியும் விளக்கப்படவில்லை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

கருணையங் கண்ணன்

[ஸ்ரீ. உப. காளி. வங்கீபுரம் வரதாசார்யர் B.A. B.L., திருக்குடந்தை]

‘நிகில ஹேயப்ரத்யநீகனாய், இதர விலக்ஷண அபரிச்சிந்ந ஜ்ஞானாநந்தைக ஸ்வரூபனாய் விளங்கும் பரம் ப்ரம்ஹம் ஸ்ரீமந்நாராயணனே’ என்ற வேதாந்த விளக்கத்தை, அடிமைக்கு எளியதாகி அண்ணன் தம்பியென்று உறவாடுவதாகக் காட்டுவது கம்பன் கவித்திறன். எதிர்பாராத இடங்களிலும் நம் எதிரில் எடுத்து நிறுத்துகிறார் அருட்சுரக்கும் செங்கட் சீயத்தை. மன்றலந் துளபமாலை மானுட மடங்கலைக் காணாத காண்டமில்லை கம்பராமாயணத்தில். விராதன் வாயிலாக ஒரு கேள்வி கேட்டுக்கொள்ளுகிறார். தீயாரைப்போல் ஒளிந்து மறைந்து நிற்பதேன் இப்பரம் பொருள்?

“நீயாதி பரம்பரமு நின்னவே யுலகங்கள்
ஆயாத சமயமுநின் னடியவே யயலில்லை
தீயாரி னொளித்தியால் வெளிநின்றாற் றீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ”

வாலியின் வாய்மொழியாக வருகிறது இதற்குப் பதில். ‘பொய்யுடையுள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவ மற்றுன், கையடை யாகும்’, ‘அருட்கு நாயகன்’, ‘தாயினும் உயிர்க்கு நல்லான்’ என்று தெளிய வேண்டும் என்கிறார். ‘ஏதிலாரையும் எளிய ரென்றாரையும் தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்து’ என்று இராமன் பறை சாற்றுகின்றார். ஆகவே ஒரு குரங்குக்கு ஆருயிர்க் காதலனாகிறான். நெய்த்தலை பால்கலந் தனைய நேயத்தனாகிச் சுக்ரீவனுடன் ஆய அன்பினோடு அவன் அளவளாவுவதைக் காண்கின்றோம். “உன்னைச் செற்றவர் என்னைச் செற்றார்; தீயரே யெனினும் உன்னோடு உற்றவர் எனக்கும் உற்றார்; உன் கிளை எனது; என் காதற்சுற்றம் உன் சுற்றம்; நீயே என் இன்னுயிர்த் துணைவன்” என்று யாவரும் அறியக் கூறுகிறார். அநகன் சொன்ன இவ்வார்த்தை எக்குலத்துளோரும் மறையினும் மெய்யென்று யாவரும் ஏத்துகின்றனர்.

கார்முகில் கமலம் பூத்தென்ன கருணையங் கண்ணனைக் கண்ட யாவரும் கரைகின்றனர். கருணை வள்ளலைக் கண்டு கல்லும் மரங்களும் கூட உருகுகின்றன. கடவுளை இயற்கையே சுட்டிக் காட்டுகிறது.

“மயின்முதற் பறவை யெல்லா மணிநிறத் திவர்கள் மேனி
வெயிலுறற் கிரங்கி மீதா விருஞ்சிறைப் பந்தர் வீசி
எயில்வகுத் தெய்து கின்ற விண்முகிற் கணங்க ளெங்கும்
பயில்வுறத் திவலை சிந்திப் பயப்பயத் தழுவும் பாங்கர்.”

என்று பசு பக்ஷிகளும் தங்களால் இயன்றளவு தொண்டு செய்கின்றன, அவனை வணங்கி நிற்கின்றன.

"காயெரி கனலுங் கற்கள் கள்ளுலட மலர்க ளேபோல்
தூயசெங் கமல பாதந் தோய்தொறுங் குழைந்து தோன்றும்
போயின திசைகள் தோறும் மரனெடு புல்லு மெல்லாம்
சாய்வுறுந் தாழ்வ போலிங் கிவர்களோ தரும மாவார்."

என்று வாய்வெருவிப் பேசுகிருன் வாயுபுத்ரன். ஆனல் அந்ய ப்ரமாணங்களைக்கொண்டு தேறவேண்டியதில்லை அஞ்சனைச் சிறுவனுக்கு. இராமனைக் கண்ட மாத்ரத்திலே என்பு தோன்ற யாக்கை உருகுகிறது. கண்கள் புனலுக மயிர் புறம்பொடிப்ப அழுது ஏத்துகிருன். அன்பு தோன்றியபொழுது நமக்கு உடன்தோன்றுவன் கடவுள்.

"துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத் தன்றி மீளா நெறியுய்க்கும் தேவ ரோதாம்
என்பெனக் குருகு கின்ற திவர்கின்ற தளவில் காதல்
அன்பினுக் கவதி யில்லை யடைவென்கொ லறிதல் தேற்றேன்."

எவர்க்கும் அன்புதான் சான்று. முன்பின் அறியாமலேயே, தர்க்க விதர்க்கங்களுக்கு அவகாசமின்றியே, அவ்யாஜமாகவே பொங்குகிற காதல் கடவுளைக் காட்டிக் கொடுக்கிறது.

"முன்புறக் கண்டிலன் கேள்வி முன்பிலன்
அன்புறக் காரண மறிய கிற்றிலேன்
என்புறக் குளிருநெஞ் சுருகுமே லவன்
புன்புலப் பிறவியின் பகைஞன் போலுமால்."

என்கிருன் ப்ரஹ்லாதன் வாய்வழியாக. கல்வி கேள்விகளால்தான் கடவுளைக் கண்டறியவேண்டுமென்பதில்லை. கருணையங் கண்ணன் அவன். அவனுக்கு அடிமை செய்ய முன்வருவோமேயாயின், அவனே தன்னைக் காட்டிக் கொடுப்பான். தன்னைக் கழலடைந்தோரைக் காணு மருத்தியன் அவன் என்பது கம்பன் துணிவு.

"புவிகொள் நாயகற் கடியவர்க் கடிமையிற் புக்கார்
செவிக ளால்பல கேட்டில ராயினுந் தேவர்
அவிகொள் நான்மறை யகப்பொருள் புறப்பொரு ளறியார்
கவிகொ ளாகுவர் காண்குவர் மெய்ப்பொருள்."

என்னே அவன் அருள்! அவனைக் காணவேண்டுமாயின் அவன் அடியவரைக் கண்டறிந்துகொள்வது எளிது என்று உபதேசிக்கிருர் கம்பநாட்டாழ்வார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' வென்னும் மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை

'ஸ்ரீ வேதாந்த தீபிகை' எனும் திருநாமம் வஹித்து, ஸுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக நிலவி வந்ததொரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை, முதன் முதல் ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர், ஸ்ரீ உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமிகளாலும், பின்னர் முறையே ஸ்ரீ உப. டி. டி. ரங்காசார்யர், ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், வி. அநந்தாசார்யர் முதலிய சில ஜ்ஞாதாக்களான ஸ்வாமிகளாலும், அவ்வப்போது போஷிக்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் நடைபெற்று வந்ததென்பதை ப்ராயேண ஸ்ரீ வைஷ்ணவ உலகம் நன்கறியும். அந்நாட்களில் அப்பத்ரிகை பிறிதோர் உதவியின்றிச் சந்தாதாரர்களின் உதவி மாத்ரத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு நடைபெற்று வந்தது. சந்தாதாரர்களுடைய அபிமானமே பத்ரிகைக்குத் தார்ட்ய மென்பது யாவரு மறிந்ததொன்று. தவிர: உலகத்தில் ஒவ்வொரு பதார்த்தத்துக்கும் வளர்ச்சி தளர்ச்சி எனும் ஏற்றத் தாழ்வுகள் காலசக்ரத்தை அநுஸரித்து வந்தே தீருமாதலின், ஸ்ரீ வைஷ்ணவர்களது துரத்ருஷ்ட வசமாக, அப்பத்ரிகையை நன்கு நடத்தக்கூடிய திறனும் வன்மையும் வாய்ந்த அதிபர்கள் கல்விச் செல்வத்தாலும் பொருட் செல்வத்தாலும் அவ்வப்போது ஆதரித்து வந்தாலும், சந்தாதாரர்கள் ம்ருக்யமாய்ப் போனதால் உடல்மெலிந்து, ஆயுக்ஷீணமும்ஸம்பவித்தமையால், அது உலகில் இல்லாமல் மறைந்து போகும்படி நேர்ந்தது.

இந்த நஷ்டத்தை நிவர்த்திக்கும் பொருட்டு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸ்ரீ அழகிய சிங்கரை வ்யாஜமாகக் கொண்டு 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' எனும் பத்ரிகையை இப்போது நடத்திவருகிறான். தக்ஷிண தேசத்தில் தமிழகத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்குப் பெரிதும் பாடுபடும் பத்ரிகை நம் 'ந்ருஸிம்ஹ ப்ரியா' ஒன்றுதான் என்று சொல்லலாம். ஸ்ரீ அழகிய சிங்கர், தாம் எழுந்தருளுமிடந்தோறும் ஸமாஶ்ரயண பரந்யாஸங்களாலும், ஸ்ரீ பாஷ்யாதி காலக்ஷேப முகத்தாலும், மற்றும் பல ஸாமாந்யோக்திகளாலும் தம்மை அண்டின ஶிஷ்யர்களுக்கு ஜ்ஞாந ப்ரதாநம் செய்வதும் தவிர, மற்றைய மஹாஜநங்களுக்கும் பண்டிதர்கள் த்வாரா வேதாந்தார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்ஶத்தை விஶதமாக்க வேண்டுமென்கிற ஸஹஜ க்ருபையாலே இந்தப் பத்ரிகையை ஆரம்பித்து, காலத்துக்கேற்ற இதன் கஷ்டநஷ்டங்களையும் கணிசியாமல் நடத்திக்கொண்டு வருகிறார். சென்ற மாதத்தில் இதற்கு இரண்டாவது அப்தபூர்த்தி உத்ஸவம் நடந்து, இம்மாதம் மூன்றும் ஆண்டு ஆரம்பமாகி முதல் ஸஞ்சிகையும் வெளிவந்துள்ளது.

ஒருவரது குணவிசேஷங்களை ஆழ்ந்து பராமர்ஶியாது, வஸ்த்ரம் வபுஸ் வாக் ஆபரணம் முதலிய வெளியாடம்பரங்களைக் கண்டு கொண்டாடி அவற்றுள் மயங்குகின்றவர் பலர். நமது ந்ருஸிம்ஹ ப்ரியா, வெளியலங்காரத்தோடு மாத்ரம் விளங்கும் சில வெளியீடுகளைப் போல் அன்றிக்கே, "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு" எனும் மறைமொழிப்படி, தன்னுள் விளங்கிடும் வ்யாஸங்களைக் கற்கக் கற்கப் பண்டித பாமர ஸாமாந்யத்துக்குத் தெவிட்டாத தெள்ளமுத மளிக்கும் உள்ளலங்காரத்தோடும் (பற்பல அணிகள் கொண்ட வ்யாஸங்களோடும்) விளங்குகின்றது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் ஶைலியைப் பற்றிச் சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். ப்ரக்ருதம் 'ப்ரியா'வில் ப்ரசுரமாகும் தத்வ விசார. வ்யாஸங்களைப்

பற்றி வாசகர்கள், அவற்றின் நடை ஸம்ஸ்க்ருதமும் தமிழுங் கலந்த கடிந நடையென்றும், அது தங்கட்குப் புரிவதில்லை யென்றும் குறைகூறுகின்றனர். அரிய பெரிய வேதாந்த விஷயங்களை லலிதமாய் இதற்குமேல் விளக்குவதும் ப்ராயேண துஷ்கரம். அன்றியும் மணியும் பவளமும் கோத்த மாலை, அணிந்தோர்க்கு அழகு செய்வதுபோல், தென்மொழியும் வடமொழியும் கலந்த மணிப்ரவாள சொன்மாலை படிப்போரால் போற்றத்தக்கதாகும். அன்றியும் அந்நடை பூர்வாசார்யர்களால் உகந்ததாதலால், இந்த ஶைலியைப் படித்துப் பழகிவந்தால், க்ரமேண நாம் ஸம்ஸ்கார மடைந்து, பூர்வாசார்யர்களின் அருளிச்செயல்களை ஆசார்ய முகேந படித்தறிவதற்கும் அநுகூலமாகு மென்பது அடியேன் துணிபு. "தென்னன் தமிழை வடமொழியை" [என்று எம்பெருமான் இரு பாஷாரூபமாய் விளங்குகிறான்] என்பதும், "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி" என்பதும் ஸ்ரீ மங்கைமன்னன் மதம். ஆகவே இருமொழிகளும் ப்ரத்யேகமாகவும் கலந்தும் நமக்கு உபாதேயங்களாகும்.

கடைசியாக, நம்மவர் கடமையைச் சிறிது ஆராய்வாம். நம்மவரில் ஐகமத்யம் வெகு குறைவு; பின்னும் கேட்பின் இல்லையென்றே புகலலாம். வைதிக தர்மங்கள் யாவும் நிலைகுலைந்து கிடக்கும் இச்சமயத்திலேனும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் தங்களுடைய நலத்தைக் கருதியாவது ஒருவர்க்கொருவர் வேற்றுமை பாராட்டாமல் ஐகமத்யத்தையே நாடவேண்டும். அனைவரும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. இல்லையேல் தாழ்வே. ஸ்ரீ அழகியசிங்கர், காகிதங்களுக்குக் கஷ்டப்படும் இப்பஞ்ச காலத்தில் லோகஹிதத்தின் பொருட்டுத் தமது ஸஹஜ க்ருபையால் இப்பத்ரிகையைத் தகுந்த அதிகாரி முகேந நடப்பித்து வருகிறார். அதன் வருஷச் சந்தா ரூபாய் மூன்றும் இக்கஷ்ட காலத்திலும் அதிகமன்று என்று யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயம். ஆகவே நம்மவர் யாவரும் ஏகமுகமாக "இது நம்முடையது" என்னும் புத்தியைக் கொண்டு, இந்த ஸஞ்சிகை ஸங்கோச மின்றிப் பரவும் விஷயத்தில் ஒத்துழைத்து இப்பத்ரிகையை முன்னேற்றத்துக்குக் கொண்டுவரவேண்டு மென்று பல்கால் ப்ரார்த்திக்கிறேன்.

ஒரகடம் கோ. ஸுதர்ஶநாசார்யன்

---

(2)

ஸ்ரீமதே ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவக் கொண்டாட்டம்—காருகுரிச்சியில் நடந்த வைபவம்.

ஸ்ரீமத் அஹோபில மடத்தில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய மஹோத்ஸவம், இம்மஹா தேசிகனுடைய திருவவதார ஸ்தலமாகிற காருகுரிச்சி க்ஷேத்ரத்தில் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. இந்த க்ஷேத்ரத்து எம்பெருமான் ஸ்ரீகண்ணன், இந்த மஹோத்ஸவத்தை முன்னிட்டு ஐந்து நாட்கள் அப்யாத்ருஶமான வைபவத்தோடு திருவாராதநம் கண்டருளினார். உத்ஸவத்தை முன்னிட்டு, ஸந்நிதியின் வாசலில் விசேஷமான பந்தல்களும் தோரணங்களும் கட்டப்பட்டன. இந்த மஹோத்ஸவம் மார்கழி ௴ 13 தேதி செவ்வாய்க்கிழமையன்று உபக்ரமம். அன்று தொடங்கி சாற்றுமறைத் திருநாளாகிய சனிக்கிழமை பர்யந்தம், தினம் இரண்டு வேளைகளும் ஸந்நிதியில் ஸேவை சாற்றுமறைகள் நடந்தன. ஸேவிக்கப்பட்ட க்ரந்தங்களுள் ஸ்ரீதேசிக ப்ரபந்தம், ஸ்ரீமத் அதிகரண ஸாராவளீ, ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் அருளிச்செய்த ஸ்தோத்ர ஜாலங்கள், ஸ்ரீமத் அழகிய சிங்கர் அநுக்ரஹித்துள்ள திவ்ய ஸூக்திகள் முதலியவற்றை ப்ரதாந

மாகச் சொல்லலாம். அன்றன்று ஸேவையானவுடன், அக்ரஹார வாஸிகளும், ஸ்ரீஅழகிய சிங்கர் திருவடிகளில் ப்ரதிபத்தி யுள்ளவர்களுமான பலருடைய உபயங்களாக, விசேஷமான ஓஹோரைகள் கண்டருளப் பண்ணப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டன.

திருநக்ஷத்ரத்துக்கு முதல் நாளான வெள்ளிக்கிழமை தினம், ஸ்ரீ அழகிய சிங்கர் பாதுகைகள் வாத்ய கோஷங்களுடனும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியுடனும் ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணப்பட்டது ஒரு விசேஷாம்சமாகும்.

திருநக்ஷத்ர தினத்தின் உத்ஸவ வைபவத்தை வர்ணிக்க, 'நிஶ்ஶேஷவிஶேஷணாஸ்பதமம் யதிவதிர்கா ஹூரஸ' என்கிற க்ரமத்தில் ஸஹஸ்ர வதனனுகிய ஸர்வேஶ்வரனே வேண்டும். அன்று காலையில் இந்த மஹோத்ஸவத்துக்காகவே ஸ்ரீ. உ. வே. கோபால ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டதும், அதிமாத்ரம் ரமணீயமானதுமான ஸ்ரீ அழகியசிங்கர் திருவுருவப் படம், யானையின்மேல் எழுந்தருளப் பண்ணப்பட்டது. எங்குப் பார்த்தாலும் பல் வகை வாத்ய கோஷங்கள். எங்குப் பார்த்தாலும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தி. இப்படிப்பட்ட வைபவத்துடன் கண் கொள்ளாத காட்சியாக ஸ்ரீ அபீஷ்ட வரதனுடைய நான்கு வீதிகளிலும் ப்ரதக்ஷிணமாக வீதி ப்ரமணம் நடந்தது. ஸ்ரீ அபீஷ்டவரதன் ஸந்நிதி வாசலுக்கு எழுந்தருளியவுடன், அங்கு ஸந்நிதியிலிருந்து விசேஷ மர்யாதைகள் செய்யப்பட்டன. பெருமாளுக்குச் சாத்தப்பட்ட பெரிய கட்டுமாலைகள் ஸ்ரீ அழகிய சிங்கருக்குச் சாத்தப்பட்டபோது, அனைவரும் ஆநந்த பாஷ்பங்களைச் சொரிந்தார்கள். பிறகு தெற்குக் கோயில் மரியாதை நடந்தது.

இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியுடன் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுக்கும் வீதி ப்ரமணம் கண்டருளப்பண்ணி மரியாதைகள் நடந்தபின், பெருமாளுக்கும் தாயாருக்கும் ஆசார்யர்களுக்கும் திருமஞ்ஜனம் நடந்தது. சாத்துப்படியாகி ஸர்வாலங்கார பூஷிதனை எம்பெருமான் ஸேவை ஸாதித்த பொழுது, "இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்று அநுஸந்திக்கும்படியிருந்தது. பின்பு நடந்த ஆராதநமும் ஸேவையும் பஞ்சேந்த்ரியங்களுக்கும் ஒரு பெரு விருந்து என்னலாம். "பண்ணுலகில் படியாத இசையால் பாடும் பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே" என்ற கணக்கில், ஶ்ரோத்ர மனோபிராமமாக இசையோடும் ஸேவிக்கப்பட்ட ஸ்ரீதேசிக ப்ரபந்தம் முதலியவற்றின் மாதுர்யம் அனைவருடைய ஹ்ருதயத்தையும் ரஞ்ஜிப்பித்தது.

"மறைகளனைத்தையு மோதியபின்—அங்கு
மகிழ்வுடன் ப்ரபந்தங்கள் சேவித்தபின்
இறையவன் குணங்களை யேத்தியபின்—அவர்
ஏகாந்த மாயக மகிழ்ந்தபின்னர்
கற்பூர வாரத்தி கண்டபின்னர்—அங்குக்
கண்கொள்ளாக் காட்சியாம் சாற்றுமறை
அற்புத மாமிந்த சாற்றுமறை—கண்டு
ஆநந்திக் காதவர் பாக்யம் இலார்."

[ஸ்ரீ அழகியசிங்கர் பட்டாபிஷேக நாடகம்.]

என்றபடி அதிமாத்ர ரமணீய மனோஹரமா யிருந்தது சாற்றுமறை. இவ்வுத்ஸவ ஸம்பந்தமாய் எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்கும் மற்றவர்களுக்கும் ஷட்ரஸோபேதமாய்த் ததீயாராதநம் செய்யப்பட்டது. ததீயாராதநத்தில் அன்வயித்தவர்களுக்குச் சந்தனம் தாம்பூலம் வழங்கித் தேங்காயும் தக்ஷிணையும் ஸமர்ப்பிக்கப்பட்

டன. அன்று ராத்திரி பெருமாளுக்கு டோலோத்ஸவம். அப்போது பெருமாள் விசேஷ தளிகைகள் கண்டருளினர்.

இந்த உத்ஸவத்தில் முதல் 4 நாள் உபயங்களும், அக்ரஹார வாஸிகளுடைய உபயங்களாக நடந்தன. சாற்றுமறை உத்ஸவத்துக்கு ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து ஸ்ரீ அழகிய சிங்கர் 10 ரூபாய் அநுக்ரஹிக்கும்படி யிருந்தது. உள்ளூர் மஹாஜனங்கள் ஸுமார் ரூ. 40—50 வரையில் கொடுத்தார்கள். உத்ஸவம் சோபித்ததற்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் முக்யமானது, ஊர் ஜனங்கள் அனைவரும் தங்களுக்கிடையிலிருந்த பல அபிப்ராய பேதங்களையும் மறந்து, இந்த உத்ஸவத்தைத் தங்கள் ஸொந்தக் காரியமாகப் பாவித்து நடத்த முன்வந்ததே யாகும். இவ்வுத்ஸவத்தில் விசேஷமான பங்கு எடுத்துக்கொண்ட ஸ்ரீ அழகிய சிங்கருடைய பூர்வாச்ரம ஸம்பந்தியான ஸ்ரீமான் G. கோபால ஸ்ரீநிவாஸாசார்யர் பூர்ணமாக நிர்வஹித்த கைங்கர்யத்தையும் மறப்பதற்கில்லை.

—தட்டை வாதூல லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்யர்.

——

(3)

ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் வர்ஷத் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்-வைகை நல்லூர் வைபவம்

நாளது ஸுபாநுஸு மார்கழிமீ 17உ (1-1-44) சனிக்கிழமை யன்று ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ர உத்ஸவத்தை உத்தேசித்து, காலையில் வைகை நல்லூர் ஸ்ரீ அபீஷ்ட வரதராஜ ஸ்வாமி ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், ஸ்ரீசடகோபன், ஸ்ரீயதிராஜன் முதலான இவர்களுக்குத் திருமஞ்சநம் நடந்தது. உடனே ஸேவை தொடக்கமாகி, நாலாயிரத் தனியன்கள் தேசிக ப்ரபந்தம் ஸ்ரீ ஸந்நிதி ப்ரபந்தம் முதலானவைகள் ஸேவை பண்ணப்பட்டன. பிறகு பெருமாள் விசேஷமான தளிகை கண்டருளினர். சாற்றுமறை யானவுடன், எம்பெருமான் முதல் தற்காலம் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் பர்யந்தம் ஸம்பாவனைகள் விசேஷமாக நடந்தன. அநந்தரம் ஷை ஸ்ரீ அழகியசிங்கரின் திருச்சாயைக்கு அலங்காரம் பண்ணி, தூப தீபம் ஸமர்ப்பித்துத் தளிகை ஸமர்ப்பித்தவுடன் அருளிப்பாடிட்டுத் தீர்த்தம், ஸ்ரீசடாரி, துளஸிமாலை, திருப்பரியட்டம் முதலான ஸமஸ்த வரிசைகளும் ஸமர்ப்பிக்கப்பட்டன. அவற்றை விசேஷமாகவும் அழகாகவும் ஸ்ரீ அழகியசிங்கர் கண்டருளினர்.

இத் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்திற்கு, குளித்தலை போர்டு ஹை ஸ்கூல் ரிடயர்டு ஹெட் மாஸ்டர் லால்குடி ஸ்ரீ. உ. வே. எலி ரங்கஸாமி அய்யங்கார், ஷை யூர் ஸ்கூல் மாஸ்டர் துவார் ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீ. உ. வே. ரங்கஸாமி அய்யங்கார், ஷை யூர் கந்துக்கடை ஏஜண்டு ஆராசூர் ஸ்ரீ. உ. வே. ஸௌம்ய நாராயண அய்யங்கார், லாலாபேட்டை ஸ்கூல் மாஸ்டர் (தில்லை ஸ்தாநம்) வீரவல்லி தர்க்கம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸ கோபாலய்யங்கார், வைகை நல்லூர் கர்ணம் குமாண்டூர் ஸ்ரீ. உ. வே. சார்ங்கபாணி அய்யங்கார், முசிரி தாலூக்காபீஸ் ஹெட் க்ளார்க். பந்தல்குடி தட்டை ஸ்ரீ. உ. வே. சேஷாத்ரி அய்யங்கார் முதலான ஸ்வாமிகள் எழுந்தருளி ஸேவை ஸாதித்தார்கள். உடனே கோஷ்டி விநியோகங்களும் நடந்தன.

நம் ஸந்நிதி ஸம்ப்ரதாயத்தில் மிகவும் ஊக்க முடையவரும், தமக்குப் பரமாசார்யனை ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ர உத்ஸவத்தில் பரமபக்தி யுடையவரும், தம் சக்திக்கு அநுகுணமாகக் கைங்கர்யம் செய்பவருமான கண் கொடுத்த வணிதம் க்ராமம் ஸ்ரீ ஸந்நிதி முத்ரை கர்த்தா ஷை ஸந்நிதி ஆராதநம், கடாம்பி

க. வா. ஸ்ரீ கோபால தேசிகாசார்ய ஸ்வாமியும் 'வஸுதாவிவஸுதா' என்று சொல்லுகிறபடி ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை விசேஷமாக நடத்திகொண்டு வரும்படி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் தத்பர மூர்த்தியான ஸ்ரீ அழகியசிங்கரையும் ப்ரார்த்திக்கிறேன்.

தாஸன் :
மாடபூசி கோ. ஸந்தானமய்யங்கார்,
தாலூக்கா ஆபீஸ் க்ளார்க், (நரசிங்க மங்கலம்)

குளித்தலை
5—1—1944

(4)

திருப்பதியில் வேதாந்த தேசிக ஸம்ப்ரதாய ஸதாஸ்வாதிநீ ஸபையின் எட்டாவது வார்ஷிகோத்ஸவம்

மார்கழி மாஸம் 18-ஆம் தேதி (2—1—44) ஸதாஸ்வாதிநீ ஸபையின் 8-வது வார்ஷிகோத்ஸவம் ஸ்ரீமான் உப. வே. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் (B.A., B.L., அட்வகேட், மதுரை) ஸ்வாமியின் தலைமையில் மிகு விமர்சையாக நடந்தேறியது. அன்று காலை 9-மணிக்குத் தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளை சப்ரத்தில் எழுந்தருளப்பண்ணி, அவற்றைப் புஷ்பங்களா லலங்கரித்து, கோவிந்தராஜன் ஸந்நிதியிலிருந்து அனுப்பப்பட்ட யானை குதிரை முதலிய ஸகல பரிஜந பரிச்சதங்களுடனும் வாத்ய கோஷங்களுடனும் வேத பாராயண ஸ்தோத்ர பாட கோஷ்டிகளுடனும் பல அபிஜ்ஞர்கள் மாடவீதி ப்ரதக்ஷிணமாகத் தேசிகன் ஸந்நிதிக்குள் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தனர். தீர்த்தம், சடாரி, ப்ரஸாதம் முதலியவைகள் வழங்கப்பட்டுக் கூட்டம் கலைந்தது. மாலை 3-மணிக்கு ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி தலைமையில் ஸபை கூடியது. பல வைஷ்ணவர்களும் ஸத்ரீகளும் அங்கு விஜயம் செய்திருந்தனர். மங்கள மானவுடன், அஹோபில மடம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ, ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் அருளப்பட்ட ஸ்ரீமுகமும், ஸ்தோத்ர பாட பரீக்ஷையிலும் தயாதசக வ்யாஸத்திலும் முதன்மையாகத் தேறும் வித்யார்த்திக்குப் பாரிதோஷிக மளிப்பதற்காக அனுப்பப்பட்ட 15 ரூபாய்களும், மேற்படி ஸபாத்யக்ஷரான திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமியிடம் ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீ அழகியசிங்கருடைய ஸ்ரீமுகம், ஸ்ரீ அஹோபில மடம் ஆராதகரான ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியால் ஸதஸ்ஸில் வாசிக்கப்பட்டது. அவகாசம் மிக ஸ்வல்பமாகையால், ஒரு மாதம் கழித்துப் பரீக்ஷை செய்து, அதில் தேறும் வித்யார்த்திக்குப் பரிசு அளிக்குமாறு அத்யக்ஷர் தெரிவித்தார். பிறகு வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் வக்கீல் T. K. துரைஸாமி ஐயங்கார் ஸ்வாமி, தலைவர்க்கு ஸ்வாகதோபசார மளித்தார். தலைவரான ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, சுமார் 1½ மணி நேரம் "ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்" என்பதைக் குறித்து மிக அழகாகவும் கம்பீரமாகவும் கேட்போர்கள் மனம் உருகும்படியாகவும் தமிழில் உபந்யஸித்தார். பிறகு பண்டித ரத்நம் உத்தமூர் ஸ்ரீ. வீரராகவாசார்ய ஸ்வாமி 'आपादचूडमनपायिनि दर्शनेऽस्मिन्' என்ற ச்லோகத்தைக் குறித்தும், சித்தூர் ராமாயணம் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி பாதுகா ப்ரபாவத்தைக் குறித்தும், ஸ்ரீமான் K. C. வரதாசார்யர் M.A., PH.D. நம் தர்சநத்தைக் குறித்தும், சிறுங்கட்டூர் ஸ்ரீ. S. N. ஸ்ரீராம தேசிக சிரோமணி "தேசிகன் கவிதை" என்பதைக் குறித்தும், முறையே வெகு அழகாக உபந்யஸித்தனர். ஸபா கார்யதர்சி ஸ்ரீ V.C. ரங்காசார்ய ஸ்வாமி சில அஸௌகர்யங்களை முன்னிட்டு வராதால், மீமாம்ஸார்ணவ மீமாம்ஸா கேஸரி பண்டிதராஜ D. T. தாதாசார்ய ஸ்வாமி, மேற்படி ஸபா ஸம்பந்தமான நடவடிக்கைகளைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தார். அத்யக்ஷரின் முக

வுரைக்குப் பிறகு திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமி, தலைவருக்கும் மற்று முள்ள பெரியோர்களுக்கும் ஸ்வாகதோபசார மளித்தார். இத்துடன் ஸபை கலைந் தது. முடிவில் மாயவரம் ஸகோதரிகள் ராஜம் - அலமேலு இருவரும், தேசிகன் பாடல்களையும் தேசிகனுடைய மங்களத்தையும் வெகு அழகாகப் பாடினார்கள்.

R. ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர்.

---

(5)

திருப்பதியில் திருப்பாவை காலக்ஷேபம்

சென்ற மார்கழி மாதம் முதல் தேசிகன் ஸந்நிதியில் வேதாந்த தேசிக ஸம்ப்ரதாய ஸுதாஸ்வாதிநீ ஸபையின் சார்பாக மீமாம்ஸார்ணவ மீமாம்ஸா கேஸரீ பண்டிதராஜ திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமியால் செய்துவந்த திருப்பாவை காலக்ஷேபம், மார்கழி 29௳ விபாழக்கிழமை தினம் முடிவடைந்தது. அன்றிரவு 10 மணிக்குத் தேசிகன் ஸந்நிதியில் திருப்பாவை சாத்துமறை உத்ஸவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அத்தருணம் பல பண்டிதர்களும் அபிஜ் ஞர்களும் ப்ரபல உத்யோகஸ்தர்களும் வந்திருந்தார்கள். இதுவரை ஒருவராலும் சொல்லப்படாத புதிய வழியைக் கைப்பற்றி அபூர்வ விஷய விமர்சத்துடன் நடந்த திருப்பாவை உபந்யாஸம், கேட்போர்களின் மனத்தைக் களிக்கச் செய்தது. இந்த ஸ்வாமி ஸம்ஸ்க்ருதோபந்யாஸத்தில் நம் பாரத தேசத்தில் முதல் ஸ்தாநத்தை அடைந் திருக்கிறார் என்பது ஸம்ஸ்க்ருத உலக மறிந்த விஷயம். 'D. T. ஸம்ஸ்க்ருதத்தில் உபந்யாஸம் செய்கிறார்' என்கிற விஷயம் தெரிந்துவிட்டால், ஸம்ஸ்க்ருதம் தெரிந்தவர் கள் மட்டுமல்ல; இது அறியாத பாமரர்களும் திரள் திரளாகக் கூடிவிடு வார்களென்றால், இவருடைய உபந்யாஸ ஶைலி எவ்வளவு ஸரலமாகவும் கம்பீரமாக வும் இருக்குமென்பதை அபிஜ்ஞர்களறிவார்கள். ஸம்ஸ்க்ருத உபந்யாஸத்தில் போல் தமிழ் உபந்யாஸத்திலும் தமக்கு இருக்கும் ஸமமான திறமையை, இவர் இக்கால க்ஷேப மூலம் வெளியிட்டார். பிறகு சிறுங்கட்டூர் S.N. ஸ்ரீராம தேசிக சிரோமணி 'ஆண்டாள் திருக்கல்யாணம்' என்பதைப்பற்றிக் கம்பீரமாக ஓர் உபந்யாஸம் செய்தார். தீர்த்தம் ஶடாரி ப்ரஸாதம் முதலியவைகள் வழங்கப்பட்டு கோஷ்டி இத் துடன் கலைந்தது.

R. ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர்.

---

(6)

ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபா, மதுராந்தகம்

ஷை ஸபை 12-11-43 ப்ரதமை வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு, மீமாம்ஸாத்யாபகர் ஸ்ரீ. உ. வே. கோபாலாசார்ய ஸ்வாமியின் தலைமையின் கீழ்க் கூடியது. அவ்வமயம் ந்யாய சிரோமணி முதல் வகுப்பில் படித்துவரும் O. R. ராஜ கோபாலன் என்னும் வித்யார்த்தியால் "ஸத்வம் வஷ" என்னும் விஷயத்தைக் குறித்து வடமொழியில் எழுதப்பட்ட வ்யாஸம் படிக்கப்பட்டது பிறகு ஸபை இனிது கலைந்தது.

ஷை ஸபை 28-11-43 ப்ரதமை ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு ந்யாயாத்யாபகர் ஸ்ரீ. உ. வே. A. S. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி தலைமையின் கீழ்க் கூடியது. அப்பொழுது. வ்யாகரண சிரோமணி முதல் வகுப்பில் படித்துவரும் M. K. ரங்காசாரி என்னும் வித்யார்த்தியால் "யசோபம் வர" என்னும் விஷயம் வடமொழியில் எழுதிப் படிக்கப்பட்டது. பிறகு ஸபை மங்களத்துடன் முடி வடைந்தது.

ஷ ஸபை மறுபடியும் (19-12-43) அஷ்டமி ஞாயிற்றுக்கிழமை மாலை 4–30 மணிக்கு ஆங்கில உபாத்யாயர் ஸ்ரீ. உ. வே. C. சேஷாத்ரி அய்யங்காரின் தலைமையில் கூடியது. அச்சமயம், "ப்ராம்ஹணன்" என்னும் விஷயத்தைக் குறித்து ஒரு வ்யாஸம், ந்யாய சிரோமணி முதல் வகுப்பில் படித்துவரும் N. க்ருஷ்ணமாசாரி என்னும் வித்யார்த்தியால் தமிழில் எழுதிப் படிக்கப்பட்டது. பிறகு 6-30 மணிக்கு ஸபை கலைந்தது.

O. R. ராஜகோபாலன், கார்யதர்சி.

---

(7)

செஞ்ஜியில் ஸ்ரீ அழகியசிங்கர் விஜயம்

ஸுபாநு வருஷ கார்த்திகைமீ 28௳ (13—12—'43) காலையில் ஸ்ரீ அழகியசிங்கர் நெடுங்குன்றத்திலிருந்து ஸகல பரிவாரங்களுடன் செஞ்ஜிக்கு எழுந்தருளும்போது, ஸ்ரீ வைஷ்ணவர்களும் இன்னம் அநேக உத்யோகஸ்தர்களும், தாசில்தார் ஸ்ரீ உப. ரங்கஸ்வாமி அய்யங்கார் திருமாளிகை முன்பாகப் பூர்ணகும்ப ஸஹிதமாக ஸ்ரீ ஸ்வாமியை வரவேற்றுத் தண்டன் ஸமர்ப்பித்து விட்டு, ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் புஷ்கரிணிக் கரையில் அலங்கரிக்கப்பட்டிருந்த ஆஶ்ரமத்தில் ஸ்ரீ அழகிய சிங்கரையும், தெப்போத்ஸவத் திருமண்டபத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் எழுந்தருளப் பண்ணினார்கள். அன்றிரவு தாசில்தார் ஸ்ரீ உப. ரங்கஸ்வாமி அய்யங்கார் திருமாளிகையில், ஸ்ரீ கண்ணனுடைய டோலோத்ஸவம் வெகு விமரிசையாக நடந்தது. இரண்டாவது நாள் 14—12—'43-ல் விஶ்வரூபம் அபிகமநம் பரஸமர்ப்பணம் திருவிலச்சினை ததீயாராதனைகளுக்குப் பிறகு மாலை சுமார் 3 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ஸகல பரிஜனங்களுடனும் பரிவாரங்களுடனும் சிங்கவரம் மலை உச்சியில் பள்ளிகொண்டுள்ள ஸ்ரீ ரங்கநாதனை ஸேவிக்கத் திருவுள்ளம் பற்றி மலையினடிவாரத்துக்கு எழுந்தருளினர். அப்போது, ஷ தேவஸ்தானத்தார்கள் மேலே ஸந்நிதியிலிருந்து ஸகல மர்யாதைகளுடன் அடிவாரத்திலிருந்து மேலே ஸ்ரீ ரங்கநாதன் ஸந்நிதிக்கு அழகியசிங்கரைத் திருப்பல்லக்கிலேயே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போனார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாளை ப்ரத்யக்ஷமும் விடாமல் ஸேவித்துக்கொண்டு திரும்ப மனமில்லாமல் வெகு நாழிகைக்குப் பிறகு பாதசாரியாக அடிவாரத்துக்கு எழுந்தருளியாயிற்று. ஸந்நிதியில் பெருமாளுக்கு விலையுயர்ந்த பட்டு ஸமர்ப்பித்ததோடு, தேவஸ்தான பரிஜனங்களுக்கு க்ரமமாக மரியாதைகளும் செய்துவிட்டு, ஆஶ்ரமத்துக்கு எழுந்தருளினர்.

மூன்றாம் நாள் (15—12—'43) பகலில் க்ரமப்படி நித்யோத்ஸவ நித்ய ததீயாராதனை முதலானவைகள் வெகு விமரிசையாக நடந்தேறின. இரவில் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் தெப்போத்ஸவத் திருமண்டபத்தில், செஞ்ஜி ஸப்மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ ஷண்முகம் பிள்ளையின் ப்ரார்த்தனையின் பேரில், ஸ்ரீ கண்ணன் டோலை உத்ஸவம் கண்டருளினர். அன்றிரவே ஸ்ரீ அழகியசிங்கர் ஸகல பரிவாரங்களுடன் காலை தநுர்மாஸாராதநத்திற்கு எழுந்தருளியாயிற்று. செஞ்ஜியில் இதுவரையில் ஒரு அழகியசிங்கராவது எழுந்தருளினதே யில்லை. இந்த மூன்று நாட்களும், தாசில்தார் ஸ்ரீ உப. ரங்கஸ்வாமி அய்யங்கார், மைனர் இர்ரிகேஷன் ஓவர்ஸீயர் ஸ்ரீ உப. நரஸிம்மய்யங்கார், ஸப்மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ ஷண்முக ஸுந்தரம் பிள்ளை முதலானோரும், மற்ற உத்யோகஸ்தர்களும் பெருமாளை வெகு ஶ்ரத்தையாய் ஆராதித்தார்கள்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

" योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ "

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

மாலோல ஸதஸ்ஸும் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமும்

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ அழகிய சிங்கர் பாதூர் க்ராமத்தில் எழுந்தருளியிருப்பதாக எழுதி யிருந்தோம். மார்கழி மாஸக் கடைசியில் அவ்விடமிருந்து புறப்பட்டு, ஸ்ரீ முஷ்ணம் ஜயங்கொண்டசோழபுரம் மார்க்கமாக உத்தமர் ஸந்நிதி சேர்ந்து, பிறகு அகண்ட காவேரீ தீரத்திலுள்ள கோடியாலத்திற்கு எழுந்தருளினார். அவ்விடத்தில் ஸ்ரீமான் வாஸுதேவ ஐயங்கார் என்று ப்ரஸித்தி பெற்ற ப்ரபு, ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளுவதைக் கேட்டு அவரை எதிர்கொண்டு தமது க்ருஹத்திற்கு அழைத்துப்போய், தமது க்ருஹம் பங்களா பெருமாள் ஸந்நிதி முதலிய ஸ்தலங்களை ஸ்ரீ அழகிய சிங்கருடைய உபயோகத்திற்காக ஒழித்துக் கொடுத்தும், தமது கார்யஸ்தர்களைக்கொண்டு ஸ்ரீ ஸந்நிதி பரிஜநங்களெல்லாருக்கும் விஶேஷ உபகாரங்களைச் செய்வித்தும், இன்னும் இம்மாதிரி கைங்கர்யத்தால் மிக்க ஶ்ரத்தையுடன் ஸ்ரீ அழகிய சிங்கரை ஆராதித்தார். அவருடைய ஆராதநத்தால் ப்ரீதரான ஸ்ரீ அழகிய சிங்கர், இவ்வர்ஷத்திய **மாலோல ஸதஸ்ஸை** அவ்விடத்திலேயே நடத்தத் திருவுள்ளம்பற்றி, அவருடைய ப்ரார்த்தனையின்பேரில் அவருடைய க்ருஹத்திலேயே அந்த ஸதஸ்ஸை நடத்தினார். தை மாஸம் 6௳ ஸதஸ் உபக்ரமித்தது. ஐந்து திநங்கள் அவ்விடத்தில் அது நிறைவேறிற்று. தை மாஸம் 10௳ ஞாயிற்றுக் கிழமை த்வாதஶீ திநம் ஸ்ரீ அழகிய சிங்கர் கொடியாலத்தை விட்டுப் புறப்பட்டு ஸ்ரீரங்கம் எழுந்தருளவே, அவஶிஷ்டமான இரண்டு திந ஸதஸ்ஸும் ஸ்ரீ தஶாவதார ஸந்நிதியில் நடைபெற்றது. அடுத்து வந்த செவ்வாய்க் கிழமை திநம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் மிக்க சிறப்புடன் நடந்தேறியது. ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்வல்ப திநங்கள் ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியிருந்து, பிறகு யாத்ரோத்ஸவத்தை உபக்ரமிக்கத் திருவுள்ளம் பற்றலாமென்று அறிகிறோம். ஆஶ்ரித ஜநங்களுடைய ரக்ஷ

யைச் செய்வதையே ப்ரதாந ஸங்கல்பமாய் உடைத்தாயிருக்கும் இந்த மஹானுடைய க்ருபையைப்பற்றி நாம் என் சொல்வோம்!

दीनानान्नस्तमसि लुठतां ज्ञानमुद्दीपयिष्यन्
विद्याशालाबुधजनसभास्थापनाद्यैरुपायैः ।
योऽसौ लक्ष्मीनरहरिविभुं प्रीणयन्नित्यमास्ते
जीयाच्छ्रीमान्यतिपरिबृढः श्रेयसामेकसूतिः ॥

* * * *

ஹிந்து மதத்தின் அஸாதாரணக் கோள்கை

சென்ற இரண்டு மூன்று ஸஞ்சிகைகளில், நமது லௌகிகப் பெரியோர் சிலர், நமது மதக் கொள்கைகளைப்பற்றி விபரீதமான ப்ரசாரம் செய்துவருகிறார்களே என்று வருந்தி, அந்த வருத்தத்தைக் குறிப்பிட்டிருந்தோம். நாம் வருந்துவதாலாவது நமது வருத்தத்தைப் பிறரிடம் முறையிடுவதாலாவது ஜகத்தின் நடை எவ்வித மாறுதலையும் அடையமாட்டாது என்பது நிஶ்சயம். ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் போல அதன் ஸ்திதியும் பகவத் ஸங்கல்பாதீநம். ஆனாலும் நல்லது தீயது ஸம்பவிக்கும் காலங்களில் தம் தம் ஸுக துக்கங்களை வெளியிடுவது மனிதவர்க்கத்தின் ஸ்வபாவமானதால், நாம் இக்காலத்தில் ஸம்பவிக்கும் இந்த அக்ரமத்தைப்பற்றி ப்ரஸ்தாவித்தோம். இன்னும் சில வார்த்தைகளைச் சொல்லவும் துணிகின்றோம்.

தேஹேந்த்ரியாதிகளைக் காட்டிலும் வேறுபட்ட அதீந்த்ரியமான ஆத்மாவென்று ஒரு பொருள் உண்டு என்பதற்குப் போதுமான ஸாக்ஷ்யமில்லையாதலால், அப்படிப்பட்ட த்ருப்திகரமான ஸாக்ஷ்யம் கிடைக்கும் பர்யந்தம் நாம் த்ருஷ்ட போகங்களையே யதேஷ்டம் அநுபவித்துக்கொண்டு, அத்ருஷ்டத்தைப் பற்றிய விசாரத்தால் நம்மை வீணில் க்லேஶப்படுத்திக் கொள்ளாமல் வர்த்தித்துவருவதே உசிதமென்று சொன்னார் ஒரு பெரியார். 'தைவமென்று ஒன்று இருக்கலாம். ஆனால் நமது ஸ்வாதந்த்ர்யத்தை அது கட்டுப்படுத்துகிறதென்றும், ஜந்மாந்தர கர்மத்திற்கு அநுகுணமாகவே நமது கார்யங்களையெல்லாம் அது நடைபெறுவிக்கிறதென்றும் சொல்வதெல்லாம் அஜ்ஞர்களின் வார்த்தை' என்று பேசினார் மற்றொருவர். இப்பொழுது மற்று மொருவர், 'வர்ணதர்மங்களென்றும் ஆஶ்ரம தர்மங்களென்றும் தர்மங்களைப் பிரித்து, நமது ஸ்ம்ருதி கர்த்தாக்கள், ப்ரஜைகளுக்குள் பரஸ்பரம் ஸ்பர்த்தையை வளர்த்துவிட்டார்கள் என்றும், அம்மாதிரியான ஜாதிவ்யத்யாஸம் நாஶம் அடையவேண்டும்' என்றும் உத்கோஷிக்கிறார். இவர்களுடன் வாதம் செய்ய நாம் ப்ரவர்த்திக்கவில்லை. ஒன்று மாத்ரம் அவர்களிடம் நாம் சொல்லத் துணிவோம். அதாவது: 'ஹிந்து மதத்தின் கொள்கையை உள்ளபடி அறியாத நீங்கள் அதைப்பற்றி பேசத்துணிவது பிசகான கார்யம். அதீந்த்ரிய

விஷயங்களில் ஶ்ருதி ஸம்ருதிகளே ப்ரமாணம் என்பது ஹிந்து மதத்தின் அஸாதாரணமான கொள்கை. நீங்கள் அவைகளின் ப்ராமாண்யத்தை அங்கீகரிக்கவில்லை. அப்படிப்பட்ட நீங்கள் ஹிந்து மதத்தைப் பிறருக்கு உபதேஶிக்க ப்ரயத்நப்படுவது அக்ரமமன்றோ? நிற்க: சிற்சில ஸமயங்களில் நீங்கள் சொல்லும் விஷயங்களுக்கு ப்ரமாணமாக உபநிஷத் முதலிய ஶாஸ்த்ரங்களி லிருந்து வாக்யங்களை உதாஹரிக்கிறீர்கள். அதுவும் ந்யாய்யமன்று. அவைகளின் முக்யாம்ஶத்தில் விஶ்வாஸம் வைக்காமலிருக்கும் நீங்கள் சிற்சில அம்ஶங்களில் மாத்ரம் அவைகளை ஆதாரமாகச் சொல்லலாமா?

"रक्षोगृहस्थितिर्मूलमग्निशुद्धौ त्वनिश्चयः"

என்பதுபோல அது பரிஹாஸாஸ்பதமே ஆகுமன்றோ? ஆகையால் ஹிந்துமதத்தை அதன் கதிக்கு விட்டு விட்டு நீங்கள் ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்க முயல்வதே உசிதமாகும். அப்பொழுது உங்களுடன் எங்களுக்குச் சச்சரவே இல்லை' என்பதுதான்.

* * * *

மாலோலன் மஹிமை

இந்த ஸஞ்சிகையில் 'மாலோலன் மஹிமை' என்னும் மகுடத்துடன் ஒரு வ்யாஸம் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. அதில், இதர ஸ்ரீ ராம க்ருஷ்ணாத்யவதாரங்களில் காணப்படும் தோஷ மொன்றும் மாலோலாவதாரத்தில் இல்லையென்றும், ஆகையால் அது மற்றை அவதாரங்களைக் காட்டிலும் மிக ஶ்லாக்ய மென்றும் எழுதப்பட்டிருக்கின்றது. இப்படி எழுதுவது ஒரு ரஸவத்தான முறையை அநுஸரித்திருக்கின்றது என்று நாம் எண்ணுகின்றோம். ஏனென்றால், பாரமேஶ்வர ப்ரகார மொன்றையும் விடாமலே ஸ்ரீ ஶரண்யனாற் செய்யப்படும் திருவவதாரங்களுள் எவ்வித தாரதம்யத்திற்கும் ஸம்பாவனை யில்லையன்றோ?

"भवान् सर्वत्रैव त्वगणितमहामङ्गलगुणः"

[ஸகல அவஸ்தையிலும் அஸங்க்யேயங்களான மங்கள குணங்களால் நிறைந்தவனன்றோ நீ?] என்பது ஸ்ரீ பட்டருடைய திவ்ய ஸூக்தி. ஆனால் அவன் சிற்சில அவஸரங்களில் அந்தப் பாரமேஶ்வர ப்ரகாரத்தைச் சற்றுத் திரோதானம் செய்வது முண்டு. அது ஸ்வேச்சையினாலேயே செய்து கொள்ளுகிறபடி. இதைச் சில ரஸிகர்கள் தோஷம்போலப் பேசி ரஸாநுபவம் செய்வார்கள்.

"विहाय कोदण्डशरौ मुहूर्तं गृहाण पाणौ मणिचारुवेणुम् ।
मयूरबर्हं च निजोत्तमाङ्गे सीतापते त्वां प्रणमामि पश्चात्"

என்று ஒரு க்ருஷ்ண பக்தர் அநுபவித்தாரன்றோ?

इन्द्रियाणां पृथग्भावमुदयास्तमयौ च यत् ।
पृथगुत्पद्यमानानां मत्वा धीरो न शोचति ॥ ६ ॥

[ப - ரை] **इह** - இந்த லோகத்தில் உண்டாகும், **आत्मनि** - ஆத்ம விஷயமான தோற்றமானது, **दर्शे यथा** - அமாவாஸ்யை இருட்டில் எப்படியோ [எப்படி வஸ்துக்களின் ப்ரதிபாஸம் அப்பொழுது இருக்க மாட்டாதோ], **तथा** - அப்படியே இருக்கும். **पितृलोके** - பித்ரு லோகத்தில் [உண்டாகும் தோற்றமும்], **स्वप्ने यथा** - ஸ்வப்நத்தில் உண்டாகும் ப்ரதிபாஸம் எப்படியோ, **तथा** - அப்படியே [அதாவது: ஸம்ஶயத்துடன் இருப்பதுடன் மறுபடியும் அநுஸந்தாநத்திற்கு அநர்ஹமாகவே] இருக்கும். **गन्धर्वलोके** - கந்தர்வ லோகத்தில் [உண்டாகும் தோற்றமும்], **यथा अप्सु परिदद्दशे** - ஜலத்திற்குள் இருக்கும் வஸ்து எப்படித் தென்படுமோ, **तथा** - அப்படியே [அஸ்பஷ்டமாக இருக்கும்]. **ब्रह्मलोके** - சதுர்முக ப்ரஹ்மலோகத்தில் [உண்டாகும் தோற்றமும்], **छायातपयोरिव** - வெயிலும் நிழலும் கலந்திருக்கும் இடத்தில் உண்டாகும் தோற்றத்தைப் போன்றதே [ஶுத்தமான ஆதபம் இருக்குமிடத்திற் போல இருக்கமாட்டாது].

यथादर्शे - இதை **यथा आदर्शे** - என்றும் பத விஶாமும் செய்யலாம். அப்பொழுது 'கண்ணாடியில் எப்படியோ' என்பது பொருள் ஆகும். கண்ணாடியில் காணப்படும் பிம்பம் ஸாக்ஷாத்தாகப் பார்க்கப்படும் வஸ்துவைப்போல அவ்வளவு தெளிவாக இருக்கமாட்டாது. அதனுடன் இடது வலது பாகங்கள் விபரீதமாகவும் தென்படுமன்றோ? அம்மாதிரியே இந்த லோகத்தில் ஏற்படும் ஆத்ம வஸ்து ப்ரதீதி என்பது கருத்து.

---

6. 'ஆத்மாக்கள் ஜ்ஞாநைகாகாரங்கள்; தேஹம் முதலியவைகளில் தென்படும் உத்பத்தி விநாஶங்களும் பரஸ்பர வைலக்ஷண்யமும் ஆத்ம வஸ்துவில் இல்லை' என்பது இதில் சொல்லப்படுகின்றது.

[ப - ரை] **पृथगुत्पद्यमानानाम्** - வெவ்வேறாக இருந்துகொண்டும் உத்பத்தியைப் பெற்றுக்கொண்டு மிருக்கும், **इन्द्रियाणाम्** - இந்த்ரியங்களுடைய [இது தேஹம் முதலியவைகளுக்கும் உபலக்ஷணம்], **पृथग्भावम्** வெவ்வேறாக இருக்கும் தன்மையையும் [அதாவது: ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று விலக்ஷணமாக இருந்துகொண்டு அதனால் வேறென்று வ்யவஹரிக்கக்கூடியதாயிருக்கும் தன்மையையும்], **यत् उदयास्तमयौ च** - உத்பத்தி விநாஶமென்று எந்த விகாரங்களுண்டோ அவைகளையும், **मत्वा** - அறிந்துகொண்டு, **धीरः** - விவேகியாக இருக்குமவன், **न शोचति** - ஶோகிக்கமாட்டன்.

यत् - என்னும் பதம் அவ்யயம்; அது '**यौ**' என்னும் அர்த்தத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

इन्द्रियेभ्यः परं मनो मनसस्सत्वमुत्तमम् ।
सत्वादधि महानात्मा महतोऽव्यक्तमुत्तमम् ॥ ७ ॥

अव्यक्तात्तु परः पुरुषो व्यापकोऽलिङ्ग एव च ।
यद् ज्ञात्वा मुच्यते जन्तुरमृतत्वञ्च गच्छति ॥ ८ ॥

---

7 - 8. பகவானை அடைவதற்கு, ஆத்ம வஸ்துவானது தேஹம் முதலியவைகளைக் காட்டிலும் விலக்ஷணம் என்னும் ஜ்ஞாநத்தைப் பெறுவதுடன், அந்தப் பகவானை ஶரணமாகக் கைப்பற்றவும் வேண்டுமென்பதைச் சொல்வதற்காக, முதல் அத்யாயம் மூன்றாவது வல்லியின் 10 - 11 மந்த்ரங்களிற் சொல்லப்பட்டுள்ள வஶீகார்ய விஷயத்திலுள்ள மேன்மேல் இருக்கும் ப்ராதாந்யத்தையும் கடைசியாக '**सा परा गतिः**' என்பதில் தென்படும் ஶரணவரணத்தையும் இவ்விடத்தில் மறுபடியும் ஸங்க்ரஹமாக விவரிக்கிறார். அவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ள சில வஸ்துக்கள் இவ்விடத்தில் உதாஹரிக்கப்படாமலிருந்தால் அவைகளையும் இவ்விடத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும். இந்த்ரியங்களுக்கு அடுத்தபடியாக அவ்விடத்தில் அர்த்தங்கள் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன; இவ்விடத்தில் அவை இல்லை. ஆனாலும் அவைகளும் இவ்விடத்தில் விவக்ஷிதமே. அவ்விடத்திற் சொல்லப்படாத '**सत्त्वम्**' என்று ஒன்று இவ்விடத்திற் சொல்லப்படுகிறது. ஆனால் 'புத்தி' என்பது சொல்லப்படவில்லை. ஆகையால், அந்த 'ஸத்வம்' என்பது புத்தியைக் குறிப்பதாக க்ரஹிக்கப்படவேண்டும்.

[ப - ரை] **मनः इन्द्रियेभ्यः परम्** - மநஸ் இந்த்ரியங்களைக் காட்டிலும் ப்ரதாநம் [வஶீகரிக்கப்பட வேண்டிய விஷயத்தில்]; **मनस उत्तमं सत्त्वम् [परम्]** - மநஸ்ஸைக்காட்டிலும் புத்தி ப்ரதாநம்; **सत्त्वात् महान् आत्मा अधि** - புத்தியைக்காட்டிலும் [கர்த்ருத்வத்தாலே] மஹாந் என்று சொல்லக்கூடிய ஆத்மா ப்ரதாநம்; **महतः अव्यक्तमुत्तमम्** - ஆத்மாவைக் காட்டிலும் ஶரீரம் ப்ரதாநம்; **अव्यक्तात् व्यापकः अलिङ्गः पुरुष एव परः** - ஶரீரத்தைக் காட்டிலும் ஸர்வாந்தராத்மபூதமான அந்தர்யாமியாகவும் லிங்கங்களால் அறியப்படக்கூடாதவனாகவும் இருக்கும் புருஷனே ப்ரதாநமான வஸ்து. **यत्** - எந்தப் பரமபுருஷனாகிற வஸ்துவை, **ज्ञात्वा** - அறிந்து [அதாவது: ஶரணமாக அடைந்து], **जन्तुः** - ப்ராணியானது, **मुच्यते** - [கர்ம பந்தத்திலிருந்து விடப்படுகின்றது; **अमृतत्वंच गच्छति** - அம்ருதத்வத்தையும் அடைகின்றது. [**अलिङ्गः** - 'ஶாஸ்த்ரம்' என்னும் ஒரு ப்ரமாணத்தாலேயே அறியக்கூடியவன். மற்றை ப்ரமாணங்களுக்கு அவன் கோசரன் அன்று.]

மூன்றாவது வல்லியில் தென்படும் மந்த்ரங்களும் இவைகளும் ஒரே தாத்பர்யத்துடன் கூடியவை. அவ்விடத்திற் சொல்லப்பட்டுள்ள அர்த்தங்களை இவ்விடத்திலும் கண்டுகொள்க.

न सन्दृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनम् ।
हृदा मनीषा मनसाऽभिकॢप्तो य एतद्विदुरमृतास्ते भवन्ति ॥ ९ ॥

यदा पञ्चावतिष्ठन्ते ज्ञानानि मनसा सह ।
बुद्धिश्च न विचेष्टेत तामाहुः परमां गतिम् ॥ १० ॥

---

9. அலிங்கனு யிருக்கும் அந்தப் பரமாத்மாவை க்ரஹிக்கும் மார்க்கம் இதில் சொல்லப்படுகிறது.

[ப - ரை] **अस्य** - இவனுடைய, **रूपम्** - ஸ்வரூபமானது [திவ்ய மங்கள விக்ரஹமும் விவக்ஷிதம்], **सन्दृशे** - அபிமுகமாக [அதாவது: தர்ஶநத்திற்கு விஷயமாக], **न तिष्ठति** - இல்லை. **कश्चन** - ஒருவனும், **एनम्**- இவனை, **चक्षुषा** - கண்ணுல், **न पश्यति** - பார்க்கிருனில்லை. [ஒரு இந்த்ரியத்திற்கும் இலக்கு ஆகிருனில்லை என்பது கருத்து]. ஆனுல், **मनीषा** - ஶாந்தி தாந்தி முதலியவைகளுடன்கூடிய, **मनसा** - மநஸ்ஸைக்கொண்டு, **हृदा** - பக்தியாலே [பக்தி ஒன்ருலேயே], **अभिक्लृप्तः** க்ரஹிக்கத்தகுந்தவன். **ये** - எவர்கள், **एनम्** - இவனை, **विदुः** - அறிகிருர்களோ [அதாவது: அறிந்து உபாஸிக்கிருர்களோ], **ते** - அவர்கள்தாம், **अमृताः** - மோக்ஷத்தை அடைந்தவர்களாக, **भवन्ति** - ஆகிருர்கள்.

மஹாபாரதத்தில், இந்த மந்த்ரத்தின் முதல்பாதி அப்படியே படிக்கப்பட்டு, இரண்டாவது பாதியின் ஸ்தாநத்தில் "**भक्त्या च धृत्या च समाहितात्मा ज्ञानस्वरूपं परिपश्यतीह**" என்று படிக்கப்பட்டிருக்கிறது. இவை இரண்டும் ஒரே பொருளை உடைத்தானதாதலால், 'ஹ்ருதா' என்பதற்குப் 'பக்தியால்' என்றும் 'மநீஷா மநஸா' என்பதற்கு 'த்ருதியால்' என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. பகவானை அடைவதற்குப் பக்தி ஒன்றே ஸாதநமாகிறபடியால், இவ்விடத்தில், 'த்ருதியால் மநஸ்ஸை ஸமாஹிதமாகச் செய்துகொண்டு பக்தியால் க்ரஹிக்கப்படுகிருன்' என்று அந்வயம் செய்துகொள்ளவேண்டும். இந்த அந்வயம் ஸ்ரீவேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

---

10. இது முதல் நாலு மந்த்ரங்களால், 'பகவானை க்ரஹிப்பது இந்த்ரியங்களால் ஸாத்யமில்லை; வேதாந்த வாக்யங்களால் அவன் ஒருவன் இருக்கிருன் என்று தெரிந்துகொண்டு, பிறகு த்யாநமாகிற யோகத்தால் மாத்ரம் அவனை அடைய ப்ரயத்நம் செய்யவேண்டும். என்பது விளக்கப்படுகின்றது.

[ப - ரை.] **यदा** - எப்பொழுது, **पञ्च ज्ञानानि** - ஐந்து ஜ்ஞாநேந்த்ரியங்கள், **मनसा सह** - மநஸ்ஸூடன் கூட, **अवतिष्ठन्ते** - அடங்கி இருக்கின்றனவோ, **बुद्धिश्च** - புத்தியும் [அத்யவஸாயத்துடன் கூடிய மநஸ்ஸூம்], **न विचेष्टेत** - சலியாமல் நிற்கின்றதோ, **ताम्** - அந்த ஸ்திதியை,

तां योगमिति मन्यन्ते स्थिरामिन्द्रियधारणाम् ।
अप्रमत्तस्तदा भवति योगो हि प्रभवाप्ययौ ॥ ११ ॥

नैव वाचा न मनसा प्राप्तुं शक्यो न चक्षुषा ।
अस्तीति ब्रुवतोऽन्यत्र कथं तदुपलभ्यते ॥ १२ ॥

परमां गतिम् - உயர்ந்த கதியென்று [அதாவது: ஶரீரத்தைவிட்டு மோக்ஷத்திற்குப் போகும் மார்க்கமென்று], **आहुः** - சொல்லுகிறார்கள்.

ज्ञानानि-ज्ञायतेऽनेनेति [எதனால் விஷயங்கள் புலப்படுகின்றனவோ], அதாவது: இந்த்ரியம். ஆகையால் 'ஜ்ஞாநாநி' என்பதற்கு 'ஜ்ஞாநேந்த்ரியங்கள்' என்பது பொருள்.

बुद्धिः - மநஸ்ஸுக்கே புத்தி என்றும் அஹங்காரமென்றும் சித்தமென்றும் பெயர்களுண்டு அத்யவஸாயத்துடன் கூடினபொழுது 'புத்தி' என்றும், அபிமாநத்துடன் கூடினபொழுது 'அஹங்கார'மென்றும், சிந்திக்கும்பொழுது 'சித்தம்' என்றும் அதைப் பேசுவார்கள். "**अध्यवसायाभिमानचिन्तावृत्तिभेदान्मन एव बुद्ध्यहङ्कारचित्तशब्दैर्व्यपदिश्यते**" என்பது ஸ்ரீ பாஷ்யம்.

---

11. [ப-ரை.] **ताम्** - அந்த, **स्थिराम्** - த்ருடமான, **इन्द्रियधारणाम्**- இந்த்ரிய நிக்ரஹத்தை, **योगमिति** யோகமென்று, **मन्यन्ते** - எண்ணுகிறார்கள். **तदा** - அப்பொழுது [இந்த்ரியங்கள் நிர்வ்யாபாரமாக இருக்கும் பொழுது], **अप्रमत्तः** - அவதாநத்துடன் கூடிய சித்தத்தை உடையவனாக, **भवति** - ஆகிறான். **योगः** - யோகமானது, **प्रभवाप्ययौ हि** - உத்பத்தியையும் நாஶத்தையும் தர்மங்களாக உடையதன்றோ [அதாவது: ஒவ்வொரு க்ஷணத்திலும் உண்டாகி மாறக்கூடியது.] ஆகையால் யோகம் செய்யும் பொழுது ஸாவதாநமாக இருத்தல் வேண்டும். [**प्रभवाप्ययौ** - இதற்கு மற்றுமொரு விதமாகப் பொருள் கொள்ளக்கூடும். அதாவது: 'இஷ்டத்தைக் கொடுப்பதாகிற ப்ரபவத்தையும் அநிஷ்டத்தை நிவர்த்திப்பதாகிற அவ்யயத்தையும் உடையது' என்பதுதான்.] இப்படி யோகம் ஸகல புருஷார்த்தங்களுக்கும் ஸாதநமாகிறபடியால், அதைச் செய்யும் பொழுது ஸாவதாநமாக இருப்பது அவஶ்யம் ஆகின்றது என்று சொல்லப்படுகிறது.

---

12. [ப-ரை.] [**एतत्** - இந்த ஆத்ம தத்வமானது], **वाचा** - வாக்கினால், **प्राप्तुं** - அடைவதற்கு, **नैव शक्यः** - ஶக்யமே அன்று; **मनसा न** - மநஸ்ஸினால் அடைவதற்கும் ஶக்யமன்று; **चक्षुषा न** - கண்ணால் அடைவதற்கும் ஶக்யமன்று. **अस्तीति ब्रुवतः** - இருக்கிறது என்று சொல்லுமதைக் காட்டிலும் [அதாவது: ஆத்ம தத்வமென்று ஒன்று உண்டு என்று சொல்லும் ஶாஸ்த்ரத்தைக் காட்டிலும்], **अन्यत्र** - மற்றோர்

अस्तीत्येवोपलब्धव्यस्तत्त्वभावेन चोभयोः ।
अस्तीत्येवोपलब्धस्य तत्त्वभावः प्रसीदति ॥ १३ ॥

यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि श्रिताः ।
अथ मर्त्योऽमृतो भवत्यत्र ब्रह्म समश्नुते ॥ १४ ॥

இடத்தில், **तत्** - அது, **कथम्** - எப்படி, **उपलभ्यते** - அடையப்படக்கூடும்? [ஆத்ம தத்வமானது உபநிஷத்தாகிற ஶாஸ்த்ர மொன்றிலிருந்தே அறியப்படத் தகுந்தது என்பது கருத்து.]

---

13. [ப - ரை.] **अस्तीति** - [ஆத்ம தத்வம்] உண்டென்று, **[शब्दात्] एव** - ஶப்த ப்ரமாணமாகிற ஶாஸ்த்ர மொன்றிலிருந்து மாத்ரம், **उपलब्धव्यः** - அறியப்படத் தகுந்தது. **तत्वभावेन च** - அந்த:கரணத்தாலும் [அது அறியப்படக்கூடும். அதாவது: முதலில் ஶாஸ்த்ரமும், பிறகு மநந நிதித்யாஸநங்களுமே அதை அறிவிக்கும்]. **उभयोः** - [இந்த] இரண்டாலும் [ஶப்தம் மநஸ் ஆகிய இந்த இவ்விரண்டாலும்], **अस्तीत्येवोपलब्धस्य** - [ஆத்மதத்வம் என்பது] இருக்கின்றது என்று அறிந்தவனுக்கே, **तत्त्वभावः** - மநஸ்ஸானது, **प्रसीदति** தெளிவை அடைகின்றது [அதாவது: பூர்வம் ஶப்தம் மநஸ் இவைகளால் அறியப்பட்ட அந்தத் தத்வம் பிறகு மிகவும் தெளிவாக ப்ரகாசிக்கின்றது.]

उपलब्धस्य - இதற்கு 'அறியப்பட்ட' என்பதே பொருளானாலும், சிற்சில விடங்களில் 'அறிந்த' என்று பொருளும் கூடும். **'भुक्ता ब्राह्मणाः'** என்னுமிடத்தில் 'புஜிக்கப்பட்ட' என்னும் பொருளுடன் கூடிய **'भुक्ता'** என்பதற்கு 'புஜித்த' **[भुक्तवन्तः]** என்று பொருள் கொள்வது இதற்கு த்ருஷ்டாந்தமாகும்.

---

14. இப்படி ஹ்ருத் கதமான விஷய காமங்களெல்லாம் ஶாந்தமாகி ப்ரஹ்ம வித்யையில் ப்ரவ்ருத்தனான ப்ரஹ்ம வித்துக்கு இந்தத் தேஹம் இருக்கும் பொழுதே அம்ருதத்வம் கிடைக்கிறதென்பது இதில் சொல்லப்படுகின்றது.

[ப - ரை.] **ये अस्य हृदि श्रिताः** - எவை எவை [எந்த எந்தக் காமங்கள்] இவனுடைய [உபாஸகனுடைய] ஹ்ருதயத்தில் [பூர்வம்] இருந்தனவோ, **सर्वे [ते] कामाः** - அந்தக் காமங்களெல்லாம், **यदा** - எப்பொழுது, **प्रमुच्यन्ते** - விலகுகின்றனவோ [ஶாந்தியை அடைகின்றனவோ], **अथ** - அதற்குப் பிறகே, **मर्त्यः** - மரண தர்மத்தை யுடைய இவன் [அதாவது: இந்த உபாஸகன்], **अमृतो भवति** - அம்ருதத்வத்தைப் பெறுகிறான் [அதாவது: அவனைவிட்டு உபாஸநிக்குப் பூர்வம் செய்யப்பட்ட பாபங்களெல்லாம் விலகுகின்றன; உபாஸ்திக்குப் பிறகு ஸம்பவிக்கும் பாபங்களெல்லாம் அவனிடம் ஸம்பந்தம் பெறுமலே போய் விடுகின்றன.] **अत्र** - உபாஸந காலத்தில், **ब्रह्म समश्नुते** - ப்ரஹ்மாநு

यदा सर्वे प्रभिद्यन्ते हृदयस्येह ग्रन्थयः ।
अथ मर्त्योऽमृतो भवत्येतावदनुशासनम् ॥ १५ ॥

பவத்தைப் பெறுகிறுன். [பூர்வாக விநாஶம் உத்தராக அஶ்லேஷம் இப்படிப்பட்ட ரூபமான அம்ருதத்வத்தை அடைகிறுன்.

இந்த வாக்யத்தை ப்ரமாணமாக அவலம்பித்துச் சிலர் ப்ரஹ்ம வித்துக்களுக்கு உத்கராந்தி இல்லையென்று வாதிக்கிறுர்கள். ஒரு ஜந்து மரணம் அடையும் தஶையில் இந்த்ரியங்களெல்லாம் மநஸ்ஸுடன் ஸம் யோகத்தை அடைகின்றனவென்றும், அப்படி ஸகலேந்த்ரிய ஸம்யுக்த மான மநஸ் ப்ராணனுடன் சேர்கின்றதென்றும், அந்த ப்ராணன் ஜீவ னுடன் சேர்கின்றதென்றும், அந்த இந்த்ரியம் முதலியவைகளுடன் கூடின ஜீவன் பூத ஸூக்ஷ்மங்களுடன் சேர்ந்து தேஹத்தைவிட்டு வெளிப்படுகிறுனென்றும் உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை உத்க்ராந்தி என்று சொல்வார்கள். 'இப்படிப்பட்ட உத்க்ராந்தி அப்ரஹ்ம வித்துக்களுக்கு மாத்ரமே; ப்ரஹ்ம வித்துக்கள் **'अत्र ब्रह्म समश्नुते'** என்கிறபடி இவ்விடத்திலேயே ப்ரஹ்மத்தை அநுபவிக் கிறுர்களென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், அவர்களுக்கு உத் க்ராந்தியில்லை என்பது அவர்களுடைய வாதம். இப்படி வாதிப்பது அநுபபந்நம் என்பது நமது ஸித்தாந்தம். முதலாவது : இந்த வாக்யத் திற்கு அடுத்து வரும் 16-வது மந்த்ரத்தில் **'तयोर्ध्वमायन्नमृतत्वमेति'** [மூர்த்தந்ய நாடி வழியாக உத்க்ரமிக்கும் ப்ரஹ்மவித் அம்ருதத்வத்தை அடைகிறுன்] என்று ப்ரஹ்ம வித்துக்கும் உத்க்ராந்தி சொல்லப்பட் டிருக்கின்றது. இரண்டாவது : **'तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्ये'** [தேஹம் போகும் பர்யந்தமே ப்ரஹ்மவித்துக்கு ப்ரஹ்ம ப்ராப்தியில் விளம்பம்] என்று சொல்லுகிறபடியால், **'अत्र ब्रह्म समश्नुते'** என்பதால் சொல்லப்படும் அம்ருதத்வம் நிஶ்ஶேஷ பந்தம் போவதைக் குறிக்க மாட்டாது என்பது ஸித்தம். ப்ரஹ்ம ப்ராப்தியானது அர்ச்சிராதி மார்க்கத்தால் தேஶ விஶேஷத்தை அடைந்த பிறகே ஸம்பவிக்கிறது என்று பஹு ஶ்ருதிகள் சொல்லுகின்றன. நிற்க, தேவயாந மார்க்கத்தாலே தேஶ விஶேஷத்திற்குப் போகிறவனுக்கு மத்யே மார்க்கத்தில் சந்த்ரனுடன் ஸம்வாதம் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து அப்பொழுது அவனுக்கு ஸூக்ஷ்ம ஶரீரம் இருக்கிறதென்று ஏற்படுகிற படியாலும் கர்ம பந்தம் அவனுக்கு இவ்விடத்திலேயே நிஶ்ஶேஷமாக விலகிவிட்டது என்று சொல்வது அநுபபந்நமே யாகும். ஆகையால், இவ்விடத்திற் சொல்லப்படும் அம்ருதத்வம் உத்தராகத்தின அஶ்லேஷம் பூர்வாகத்தின் விநாஶம் இந்த ரூபமான அம்ருதத்வமென்று நாம் அறிய வேண்டும். இதுதான் நமது ஸித்தாந்தம்.

---

15. கீழ் விவரிக்கப்பட்ட விஷயத்தையே ஆதராதிஶயத்தால் மறுபடியும் ப்ரஸ்தாவித்து, 'உபதேஶிக்கப்பட வேண்டிய விஷயம் இவ வளவுதான்' என்று உபஸம்ஹாரம் செய்கிறுர்.

[ப - ரை.] **यदा** - எப்பொழுது, **हृदयस्य सर्वे ग्रन्थयः** - ஹ்ருதயத்தி லுள்ள முடிச்சுக்களெல்லாம் [முடிகள் போல ஸ்தூலமாக அவிழ்க்கக் கூடாத ராகத்வேஷாதிக ளெல்லாம்], **प्रभिद्यन्ते** - விடப்படுகின்றனவோ, **अथ** - அதற்குப் பிறகே, **मर्त्यः** - மநுஷ்யன், **अमृतो भवति** - மோக்ஷத்தை

शतञ्चैका च हृदयस्य नाड्यस्तासां मूर्धानमभिनिस्सृतैका ।
तयोर्ध्वमायन्नमृतत्वमेति विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति ॥ १६ ॥
अङ्गुष्ठमात्रः पुरुषोऽन्तरात्मा सदा जनानां हृदये सन्निविष्टः ।

அடைந்தவனாகிறான். **अनुशासनम्** - உபதேசம் செய்யப்படவேண்டிய விஷயம், **एतावदेव** - இவ்வளவுதான்.

'இவ்வளவு தான் என்று முடித்துவிட்டு மறுபடியும் மூன்று மந்த்ரங்களால் சில விஷயங்கள் சொல்லப்படுகின்றனவே; அது எப்படி?' என்றால், இதுபர்யந்தம் சொல்லப்பட்ட விஷயம் உபாஸகன் செய்ய வேண்டிய க்ருத்யம்; இனி சொல்லப்படப்போவது உபாஸநத்தால் ப்ரஸந்நனான பகவான் செய்வதைப்பற்றியது என்று அறியவேண்டும். மூர்த்தந்ய நாடி வழியாகவோ வேறு வழியாகவோ ஜீவன் உத்க்ரமணம் அடைவதொன்றும் ஜீவ க்ருத்யமாக மாட்டாதன்றோ?

---

16. இரண்டாவது அத்யாயத்தில் இரண்டாவது வல்லி முதல் மந்த்ரத்தில் "**विमुक्तश्च विमुच्यते**" [ஜீவ தசையில் ஆத்யாத்மிகம் முதலிய துக்கங்களிலிருந்து விடப்பட்டவனாய் ப்ராரப்த கர்மாவஸாநத்தில் ப்ரக்ருதி ஸம்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டவனாகிறான்] என்று எந்தப் பரம முக்தி ப்ரஸ்தாவிக்கப்பட்டதோ அந்தப் பரம முக்தியே இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படுகின்றது.

[ப-ரை.] **हृदयस्य** - ஹ்ருதயத்திற்கு, **शतञ्च एका च** - நூற்றொரு, **नाड्यः** - நாடிகள் [உண்டு]. **तासां [मध्ये]** - அவைகளுக்குள், **एका** - ஒன்று, **मूर्धानम्** - ஶிரஸ்ஸை நோக்கி, **अभिनिस्सृता** - போகின்றது. **तया** - அந்த நாடி வழியாக, **ऊर्ध्वम्** - உயர, **आयन्** - போகிறவன், **अमृतत्वम्** - மோக்ஷத்தை, **एति** - அடைகின்றான். **अन्याः** - மற்றை நாடிகளெல்லாம், **विष्वङ्ङुत्क्रमणे**-குறுக்காகப் போவதில் [ஸம்ஸார மார்க்கத்தின் வழியாகச் செலுத்துவதில்], **भवन्ति** - உபயோகப்படுகின்றன. '**विष्वक्**' என்பதை நாடிகளுக்கு விஶேஷணமாகவும் எடுத்துக் கொள்ளலாம் அப்பொழுது அதற்குக் 'குறுக்கே போகும் நாடிகள்' என்பது பொருளாகும்.

ப்ரஹ்மவித்துக்கு உத்க்ரமணம் நேரும்பொழுது, ஜீவனுடைய ஸ்தாநமாகிற ஹ்ருதயத்தின் அக்ரபாகத்தில் ஸ்ரீ ஶரண்யனுடைய அநுக்ரஹத்தால் ஒரு நல்ல ப்ரகாஶம் ஏற்படுகின்றதென்றும், அந்த ப்ரகாஶத்தால் மூர்த்தந்ய நாடியை விவேசநம் செய்துகொண்டு அதன் வழியாக அவன் வெளிப்படுகிறானென்றும், அது வழியாக வெளிப்படுகிறவன் ப்ரஹ்மலோகத்திற்குப் போய் அந்தத் தேஶ விஶிஷ்ட ப்ரஹ்ம ப்ராப்தியைப் பெற்று ஸ்வ ஸ்வரூபாவிர்ப்பாவ லக்ஷணமான மோக்ஷத்தை அடைகின்றானென்றும் உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்ரஹ்மவித்துக்களுக்கு அம்மாதிரி ப்ரகாஶம் ஏற்படாததால், அவர்கள் வேறு நாடிகளில் ப்ரவேஶித்து ஸம்ஸார மார்க்கத்திற் சேருகிறார்கள். "**हार्दानुग्रहलब्धमध्यधमनिद्वाराद् बहिर्निर्गतः**" என்பது அபியுக்தர்களின் ஸூக்தி. இப்படிப் புறப்படுவது ஜீவ க்ருத்யமாக மாட்டாது; இது உபாஸநத்தால் ப்ரீதனான பகவானுடைய க்ருத்யமே ஆகும்.

---

17. உபதேஶத்தை முடிக்கிறார்.

तं स्वाच्छरीरात्प्रवृहेन्मुञ्जादिवेषिकां धैर्येण ।
तं विद्याच्छुक्रममृतन्तं विद्याच्छुक्रममृतमिति १७ ॥

मृत्युप्रोक्तान्नचिकेतोऽथ लब्ध्वा विद्यामेतां योगविधिञ्च कृत्स्नम् ।
ब्रह्म प्राप्तो विरजोऽभूद्विमृत्युरन्योऽप्येवं यो विदध्यात्ममेव ॥ १८ ॥

सह नाववतु । सह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै । तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै ॥ ओं शान्तिश्शान्तिश्शान्तिः ॥

हरिः ओं ॥

इति द्वितीयाध्याये तृतीयवल्ली ॥

द्वितीयोऽध्यायस्समाप्तः ॥

[ப - ரை.] **अङ्गुष्ठमात्रः** - அங்குஷ்ட ப்ரமாணத்தை யுடையவனுக, **अन्तरात्मा** - அந்தர்யாமியாக இருக்கும், **पुरुषः** - பரம புருஷன், **सदा** - எப்பொழுதும், **जनानाम्** - ஜநங்களுடைய, **हृदये** - ஹ்ருதயத்தில், **सन्निविष्टः** - ஸ்திரமாக இருக்கிருன். **तम्** - அவனே, **स्वात्** - தன்னுடையதான [அதாவது: அந்தப் பரம புருஷனுடையதான], **शरीरात्** - ஶரீரத்திலிருந்து [ஶரீரமாகிற சேதநனிடமிருந்து], **धैर्येण** - ஜ்ஞாநப் பெருமையால், **मुञ्जात्** - கோரைப் புல்லிலிருந்து, **इषीकामिव** - ஈர்க்கைப்போல, **प्रवृहेत्** - கிழித்து எடுக்கவேண்டும். [அதாவது: ஜீவனைக் காட்டிலும் ப்ருதக் பூதனுக அறியவேண்டும்.]

'**जन**' என்னும் பதம் சேதநனுகிற ஜீவனைக் குறிக்கின்றது. ப்ரபஞ்சத்திலுள்ள ஸகல சேதநாசேதநங்களும் பகவானுக்கு ஶரீரமாகிறபடியால், இவ்விடத்தில் ஶரீர ஶப்தத்தால் ஜீவாத்மாவே க்ரஹிக்கப்படுகிருன்.

सन्निविष्टः - ஸ்திரமாக இருக்கிருன். அவன் இராத காலமில்லை என்பது பொருள். '**वर्तते सावरोधः**'' என்கிறபடி குடியும் குடித்தனமுமாகக் களத்ராதிகளுடன் இருக்கிருன் என்றும் த்வநிக்கிறது.

तं विद्यात् - இத்யாதியின் அர்த்தத்தை முந்தின வல்லியில் எட்டாவது வாக்யத்தில் காண்க. இந்த வாக்யம் இரட்டித்துப் படிக்கப்பட்டிருப்பது உபதேஶம் முடிந்துவிட்டது என்பதை ஸூசிப்பிக்கின்றது.

18\. இந்த ஆக்யாயிகையின் அர்த்தத்தை உபஸம்ஹரிக்கிருர்.

[ப - ரை.] **नचिकेतः** - நசிகேதஸ்ஸானவர், **मृत्युप्रोक्ताम्** - தர்மராஜனுல் சொல்லப்பட்ட, **एताम् विद्याम्** - இந்த [ஆத்ம] வித்யையும், **कृत्स्नं योगविधिञ्च** [**यदा पञ्च** - இத்யாதியால் விளக்கப்பட்ட] பூர்ணமான யோக விதியையும், **लब्ध्वा** - அடைந்து, **ब्रह्म** - ப்ரஹ்மத்தை, **प्राप्तः** - அடைந்தவனுகக் கொண்டு, **विरजः विमृत्युश्च अभूत्** - ரஜஸ் மரணம் நீங்கினவனுக [அதாவது - ப்ரக்ருதி ஸம்பந்தம் நீங்கினவனுக ஆவிர்ப்பூத ஸ்வ ஸ்வரூபனுய்], **अभूत्** - ஆனுன். **यः अन्यः** - மற்ற எவனும், **एवं अध्यात्मं वित्** - இம்மாதிரி அத்யாத்ம வித்யையை அறிகிருனே, **सोऽपि** - அவனும், **एवमेव** - இந்த நசிகேதஸ் போலவே, [**भवति** - ஆகிருன்.]

மூன்ருவது வல்லி முற்றிற்று.

கடோபநிஷத் முற்றிற்று.

ஸ்ரீ :

'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா'வின் 1944-ஜனவரி மாதத்துச் சந்தா வஸூலில்.

1943-ம் ஆண்டுச் சந்தா

		ரூ.	அ.
31	ஸ்ரீ K. ஸௌந்தரராஜ ஐயங்கார், சிங்கப்பெருமாள் கோயில்	3	0
239	,, T. R. வேங்கடாசார்யர், புதுக்கோட்டை ...	3	0
400	,, D. வேங்கடராகவ ஐயங்கார், விழுப்புரம் ...	3	0
128	,, P. நரஸிம்ஹ ராகவன் அல்லகட்டா ...	3	0
227	,, ஸ்ரீநிவாஸ ஐயங்கார், மாங்குடி	3	0
217	,, ஸர் V. T. க்ருஷ்ணமாசார்யர், பரோடா திவான் ...	3	0
233	,, M. ராஜகோபாலன், உத்தர்ப்பூரா ...	3	0
267	,, K. நாராயண ஐயங்கார், கம்பயநத்தம் ...	3	0

1944—ம் ஆண்டுச் சந்தா

		ரூ.	அ.
556	ஸ்ரீ K. V. ஸந்தானகோபாலன் மன்னார்குடி ...	1	8
129	,, T. K. ஸௌந்தரராஜ ஐயங்கார், திருவானைக்காவல் ...	3	0
475	,, S. ஸ்ரீநிவாஸ ராகவன், தூசி	3	0
161	,, S. திருவேங்கடாசாரி, திரிசிராப்பள்ளி ...	3	0
71	,, S. ஸௌந்தரராஜ ஐயங்கார் திரிசிராப்பள்ளி ...	3	0
98	,, P. N. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கோயம்புத்தூர் ...	3	0
289	,, V. S. ரங்காசாரி, கோயம்புத்தூர்	1	8
554	,, K. வீரராகவாசாரியர், சென்னை	3	0
273	,, C. V. ரங்காசார்யர், சென்னை	3	0
19	,, K. ஜகந்நாத், பம்பாய்	3	0
463	,, M. V. ராமஸ்வாமி ஐயங்கார் பம்பாய்	3	0
125	,, A. பார்த்தஸாரதி, ,, ...	3	0
511	,, P. R. ஸௌந்தரராஜன், ,, ...	3	0
230	,, K. பார்த்தஸாரதி, ,, ...	3	0
114	,, S. ரங்கநாத ஐயங்கார், ,, ...	3	0
18	,, M. K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பம்பாய் ...	3	0
14	,, N. S. சாரி ,, ...	3	0
180	,, S. ராமஸ்வாமி ,, ...	3	0
12	,, R. ஸ்ரீநிவாஸன், ,, ...	3	0
16	,, C. S. ஐயங்கார் ,, ...	3	0
49	,, K. S. ஸ்ரீநிவாஸ கோபாலன் பம்பாய் ...	3	0
13	,, S. சாரங்கபாணி ஐயங்கார் பம்பாய் ...	3	0
50	,, S. ராமஸ்வாமி ஐயங்கார் ,, ...	3	0
22	ஸ்ரீ M. R. ஆராவமுதையங்கார் பம்பாய் ...	3	0
51	,, S. க்ருஷ்ணமாசார்யர் ,, ...	3	0
546	,, K. R. பத்மநாபாசாரி ,, ...	3	0
32	,, P. S. திருமலை, விருதுநகர் ...	3	0
138	,, R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸெகண்ட்ராபாத் ...	3	0
227	,, ஸ்ரீநிவாஸையங்கார், மாங்குடி	3	0
145	,, D. முத்துஸாமி ஐயங்கார், ராமநாதபுரம் ...	3	0
214	,, S. ஸ்ரீநிவாஸ கோபாலையங்கார், கபிஸ்தலம் ...	3	0
88	,, R. ராஜகோபாலையங்கார், வடுவூர் ...	3	0
192	,, S. நரஸிம்ஹ ஐயங்கார், கல்கத்தா ...	3	0
157	,, N. நாராயண ஐயங்கார் ,, ...	3	0
388	,, D. வேதாந்தாசார்யா, ,, ...	3	0
553	,, K. ஸ்ரீநிவாஸன். ,, ...	3	0
539	,, S. ஸம்பத் நாராயணன், சோளசிங்கபுரம் (1945-ம் ஆண்டுக்கு) ...	1	8
44	,, S. ரங்கஸாமி ஐயங்கார், செஞ்சி, ,,	3	0
557	,, R. சேஷையங்கார், ஸ்ரீ வில்லி புத்தூர் ,,	3	0
483	,, V. ராமஸ்வாமி ஐயங்கார், புகலூர் ,, ...	3	0
518	,, S. திருமலை M. A., புதுடெல்லி ,, ...	3	0
552	,, K. R. நரஸிம்ஹராகவன், சேலம் ,, ...	3	0
290	,, T. A. ராஜகோபாலையங்கார், தேரழுந்தூர் ...	3	0
164	,, ராவ் ஸாஹெப் K. M. ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீ ரங்கம் ...	3	0
286	,, A. V. நரஸிம்ஹாசாரியர், சித்தூர் ...	1	0
400	,, D. வேங்கடராகவையங்கார், விழுப்புரம் ...	3	0
73	,, J. வரதராஜையங்கார், திருநெல்வேலி ...	3	0
531	,, S. நரஸிம்ஹன், பாரத் பாங்க்	3	0
53	,, S. S. ராஜகோபாலன் பம்பாய்	3	0
124	,, C. S. ஸௌந்தரராசாரியர், ,, ...	3	0
28	,, K. நரஸிம்மாசாரியர் ,, ...	3	0
466	,, பி. ராகவாசாரியர், காஞ்சீபுரம் ...	3	0
558	,, R. ஸ்ரீநிவாஸவரதாசாரி, கண்டிகை ...	2	0
123	,, S. ரங்கசாமி ஐயங்கார், மதுரை	3	0

Regd. No. M: **4437**

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	**6—8—0**	**7—8—0**
2. ஷை (பைண்டில்லாதது) ...	**5—8—0**	**6—8—0**
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	**0-12—0**	**1—0—0**
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	**0—8—0**	**0-12—0**
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	**1—0—0**	**1—8—0**
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	**0—8—0**	**0-12—0**
7. ஷை (தெலுங்கு லிபி)	**0-12—0**	**1—0—0**
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	**0—8—0**	**0-12—6**
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	**0—3—0**	**0—4—0**
10. ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகை (க்ரந்த லிபி)	**2—0—0**	**3—0—0**
11. ஸ்ரீ ராமாநுஜஸித்தாந்தஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	**2—0—0**	**3—0—0**

N. B.—10, 11 எண்ணிக்கையிட்ட புஸ்தகங்கள் கொஞ்சம் காபிகளே கைவசமிருக்கின்றன.

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**
நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras,